www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පූමි

PUTHIYA POOMI

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

சுற்று 10 | மார்ச் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்றி 56

## புரிந்துணர்வு ஒப்பந்தம் எதனைச் சாதித்தது?

அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு கடந்த மாதம் 22ம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிக் கொண்டது. அதன் நினைவாக தெற்கிலே புறாக்களைப் பறக்கவிட்டு சமாதான தீபமேற்றி அரசாங்கம் "சமாதான பூசை" நடாத்தியிருக்கிறது. ஜே.வி.பி. தனது பேரினவாதக் கூச்சலை கொழும்பு வீதிகளில் கிளப்பி சில ஆயிரம் பேருடன் பேரணி நடாத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்துள்ளது. அதே வேளை வடக்கு கிழக்கில் உருப்படியான எதுவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இடம் பெறவில்லை எனக் கூறி பொது அமைப்புகளின் பெயரில் ஹர்த்தால் கடையடைப்பு நடாத்தி எதிர்ப்புக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையிலே புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஒரு வருடத்தில் எதனைச் சாதித்தது என்பதை மக்கள் சார்பு நிலை நின்று நோக்குவது அவசியமாகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் தமது ஆட்சியைப் பல வழிகளிலும் நிலைப்படுத்தி வந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட நிலையில் பொதுசன முன்னணியின் தலைவியான சந்திரிகா அம்மையார் இருந்த போதிலும் பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் ரணில் எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு ஜனாதிபதி வெறுமனே வாய்ப் பேச்சுடன் தான் கடந்த ஒரு வருடமாக இருந்து வரவேண்டியுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருவதால் சதாராண உழைக்கும் சிங்கள மக்களின் வீடுகளுக்கு ராணுவத்திலிருந்து பிரேதப் பெட்டிகளோ அன்றி மரணச் செய்திகளோ வராமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே தெற்கில் குண்டு வெடிப்பு மற்றும் திடீர் தாக்குதல் பயப்பீதி அற்று மக்கள் நிம்மதியாக உலாவ முடிகின்றது. இவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சாதகமான அம்சமாகும்.

அதேவேளை அரசாங்கம் தன்னைச் சமாதானத்தின் தூதுவராகக் காட்டி



உலக நாடுகளிடம் பிச்சா பாத்திரத்தை கூச்சமின்றி நீட்டிக் கொள்ளவும் முடிகிறது. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம். ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன தமது உள்நோக்கங்களை நிறைவேற்ற நிதி வழங்கத் தயார் எனவும் கூறி நிற்கின்றன.

அரசாங்கம் இவ் ஒரு வருட காலத்தில் நடைமுறையில் உள்ள சமாதான சூழலின் மறைவில் பல்வேறு விதமான தொழிலாளர் விரோத மக்கள் நலன்களுக்கு மாறான சட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றிக் கொண்டுள்ளது. அத்துடன் விலை உயர்வுகள். கட்டண அதிகரிப்புகள். வரி விதிப்புகள் என்பவற்றை தான் விரும்பியவாறு அரசாங்கம் உயர்த்திக் கொண்டுள்ளது. சுருங்கக் கூறின் மக்கள் மீது தாங்க முடியாத விலை ஏற்றச் சுமைகளை சுமத்தி நிற்கிறது.

இவ் ஒரு வருடத்தில் ராணுவ ரீதியில் ஆட்பலம். ஆயுதக் கொள்வனவு. பயிற்சித் திறன். தாக்குதல் வியூகம் என்பனவற்றை விரிவுபடுத்தி நிலை நிறுத்தியும் வந்துள்ளது.

இவற்றுக்கும் மேலாக அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியைச் சமாளிப்பதற்காக வலக்கையால் அமெரிக்காவையும் இடக் கையால்

12ம் பக்கம் பார்க்க.





## பிரதமரின் கேள்வி பதிலும் ஜனாதிபதியின் மலேசிய உரையும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும். ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் இலங்கையில் வெவ்வேறு நிலைகளில் நின்று பேரினவாதத்தை முன்னெடுத்து வந்த இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகளின் தலைவர்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு வருடப் பூர்த்தி நினைவாக பிரதமர் தொலைக்காட்சி கேள்வி பதில் நிகழ்ச்சி மூலம் பல விடயங்களை முன்வைத்தார். புரிந்துணர்வு ஒப்பந்தம், புலிகள் இயக்கம், பேச்சுவார்த்தை, சமாதானத்தின் அவசியம் போன்ற விடயங்களில் ஒரு நிதானமான கருத்துக்களை துணிவுடன் வெளியிட்டார். பேரினவாதத் தீவிரவாதிகளையும் பேச்சுவார்த்தையைக் குழப்ப முற்படுவோரையும் கடுமையான நிலை நின்று விமர்சனம் செய்தார். யுத்தம் பற்றிப் பேசுவோர் தங்களையும் தமது பிள்ளைகளையும் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு சாதாரணமானவர் களைப் பலிகொடுக்க நிற்பதைச் சுட்டிக்காட்டிய பிரதமர் இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் தலைவர் ஸ்டாலின். பிரித்தானியாவின் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் தமது பிள்ளைகளை யுத்த முனைக்கு அனுப்பிய வரலாற்றுச் சம்பவங்களை தனது பதில் ஒன்றில் குறிப்பிட்டார். அரசியல் தீர்வின் அவசியம் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் எத்தகைய அரசியல் தீர்வு என்பதைக் கூறாது விட்டாலும் தெற்கின் பேரினவாத யுத்த வெறியர்களுக்கு தகுந்த பதில் கூறி இருக்கிறார் என்று கூற முடியும்.

அதேவேளை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மலேசியாவில் நடைபெற்ற 13வது அணிசேரா உச்சி மாநாட்டில் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வு. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்- பேச்சுவார்த்தை. இவற்றின் ஒரு வருட முன்முயற்சிகள் பற்றி மிகவும் சாதகமான நிலைநின்று தனது உரையில் குறிப்பிட்டார். அதனைச் செவி மடுத்த உலகத் தலைவர்கள்

12ம் பக்கம் பார்க்க.

## பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு வேண்டும்!

மலையகத்தமிழ் மக்களில் இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட விருப்பதாக அறியமுடிகிறது. 1964ஆம் ஆண்டு சிறிமா–சாஸ்திரி ஒப்பத்தத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை மறுக்கப்பட்ட நிலையில், இந்தியாவுக்கு நிரந்தரமாக குடிபெயர நிர்பந்திக்கப்பட்டு இந்தியக் கடவுச்சீட்டுக்களை பெற்று 1983 இனவன்முறைக்கு பின்பு ஏற்பட்ட நிலைமையினால் இந்தியாவுக்கு போக முடியாதிருந்தவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைக்கும் போராட்டத்துக்கும் தீர்வு கிடைக்கப் போவதாக கூறப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் 2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பு திருத்தச்சட்டத்தில் இப்பிரஜாவுரிமை பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உறுப்புரை இருந்தது. அவ்வுறுப்புரை தெளிவற்றதாகவே இருந்தது. அதாவது 1964ஆம் ஆண்டு இலங்கை நிரந்தர வாசியாக இருந்து வேறெந்த நாட்டு பிரஜைகளாகாதிருந்தவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் இலங்கை பிரஜாவுரிமை அந்தஸ்து வழங்கப்படும் என்றிருந்தது. இந்திய கடவுச்சீட்டு பெற்றவர்களுக்கும் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்பது குறிப்பாக தெரிவிக்கப்படாததால் தெளிவற்றதாகவே அவ்வேறுபாடு இருந்தது.

இலங்கையின் பிரஜாவுரிமை சட்டத்தின்படி வேறெந்த நாட்டு கடவுச்சீட்டுக்களையும் வைத்திருப்பவர்கள் இலங்கைப் பிரஜைகளாக இருக்க முடியாது. அதனால் 1964ஆம் ஆண்டு இலங்கையில் நிரந்தரவாசியாக இருந்த இந்தியவம்சாவழியினர் பின்பு இந்திய கடவுச்சீட்டு பெற்றிருந்தபோதும் 1983 யூலைக்கு பின்னர் ஏற்பட்ட நிலைமைகளினால் இந்தியாவுக்கு குடிபெயர முடியாதிருந்தது. தற்போது

12ம் பக்கம் பார்க்க.




## ஈராக் மீது போர் தொடுக்காதே!

### அமெரிக்காவை உலக மக்கள் எதிர்க்கிறார்கள்

ஈராக் மீது போர் தொடுக்காதே எனக்கூறி அமெரிக்க மக்கள் உட்பட உலகின் பெரும்பான்மை நாடுகளும் மக்களும் அமெரிக்க ஆளும் புஷ் நிர்வாகத்தின் மீது கண்டன எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். அமெரிக்கா தனது ஏகாதிபத்திய எண்ணெய் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவே சதாம் ஆட்சியை வீழ்த்திக்கொள்ள நிற்கிறது. எண்ணெய்க்கான போர் வெறியில் அமெரிக்காவுடன் பிரிட்டனும் கைகோர்த்து நிற்கிறது. ஆனால் பிரித்தானிய மக்கள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் பெப்ரவரி நடுப்பகுதியில் மாபெரும் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று பிரிட்டனில் இடம் பெற்றுள்ளது. அந்த ஆர்ப்பாட்டத்தில் இருபது இலட்சத்திற்கு மேலான மக்கள் கலந்து கொண்டனர். இளவரசி டயனாவின் மரணச் சடங்கிற்கு பின்னர் பிரிட்டனில் இவ்வளவு தொகையில் பங்குபற்றியது இந்த ஆர்ப்பாட்டத்தின்போதுதான்.

ஹைட் பாக் மைதானத்திற்குச் செல்லும் மத்திய இலண்டன் பிரதான பாதைகள் யாவும் மக்கள் நிரம்பி வழிந்தனர். இலண்டனுக்கு வெளியே உள்ள வீதிகள் அமைதியாகவும், வெறிச் சோடியும் காணப்பட்டது. அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு திரண்டதையே அது புலப்படுத்தியது.

சகல தொலைக்காட்சி நிலையங்களும் முழு நிகழ்ச்சியையும் ஒளிபரப்பு செய்ய ஒழுங்கு செய்திருந்தன. பிரிட்டனின் மிகப் பெரிய பத்திரிகை எனப்படும் "டெயிலி மிரர்" நிகழ்ச்சியின் அனுசரணையாளர்களில் ஒன்றென தம்மை வெளிக்காட்டிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொண்டது. வலதுசாரிப் பத்திரிகைகளும், ரூபேட் மொடொக்கின் "ஸ்கை நியூசும்" கூட மிகவும் சங்கடப்பட்டு ஆர்ப்பாட்டத்தின் தாக்கத்தை ஒப்புக்கொண்டன. பாதைகள் மூடப்பட்டதால் தங்களுக்கு ஐந்து இலட்சம் ஸ்டேலிங் பவுண்ஸ் (#500,000) நட்டமேற்பட்டதாக ராக்சி சாரதிகள் சங்கம் கூறியுள்ளது. 15,000 பதாகைகளை வழங்கியதாக நிகழ்ச்சியின் அமைப்பாளர்களான பிரிட்டனின் முஸ்லிம் சங்கம் தெரிவித்துள்ளது. ஆர்ப்பாட்டக்காரர் 187.500 லீற்றர் தேனீர் அருந்தினர்.

ஹைட் பாக்கில் நடமாடும் கழிவறைகளில் நீண்ட வரிசை காணப்பட்டதால் அதைத் தவிர்த்து பாக் லேனில் அமைந்துள்ள ஹோட்டல்களுக்கு சென்று சொகுசு கழிவறைகளையும் உபயோகிக்கவேண்டிய நிலையேற்பட்டது. நாலாயிரம் பொலிசார் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து ஐம்பது தொன் குப்பைகள் அகற்றப்பட்டன. இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமெரிக்காவில் வாலாக ஆடிவரும் பிளயரின் யுத்தவெறிக்கு முகத்தில் அறைந்தது போன்று அமைந்து கொண்டது.

படிப்பகம்

# வவுனியாவில் ஆதரவற்ற தமிழ்ச் சிறுவர்களின் நிலையங்கள்

வவுனியா பம்பை மடு அன்பகம், வவுனியா வேப்பங்குளம் அன்பு இல்லம், வவுனியா கூமாங்குளம் சாயி இல்லம், வவுனியா கோவில் புதுக்குளம் சிவன் கோயில் இல்லம், காட்டுமாங்குளம் அட்டமஸ்கட விகாரை இல்லம், இறம்பைக் குளம் புனித சகோதரிகள் இல்லம்.

1985ம் ஆண்டினைத் தொடர்ந்து வட பகுதியில் ஏற்பட்ட இன வன்முறைகளும் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளும் பல்வேறு இயக்கங்களில் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதன் விளைவாயும் பல ஆயிரம் மக்கள் உயிரை இழந்துள்ளனர். இதனால் சிறுவர்கள் பலர் அநாதரவாக விடப்பட்டுள்ளனர். இந்தச் சிறுவர்களைப் பராமரிக்கும் பணியில் வவுனியாவில் பல சிறுவர் இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பிள்ளைகளைத் தமிழ் அமைப்புகள் பாரம் எடுக்காது ஒரு பௌத்த பிக்குவிடம் ஏறக்குறைய 50 பிள்ளைகள் விடப்பட்டுள்ளமை தமிழ் அமைப்புகளை கண் திறக்கச் செய்துள்ளன. மேற்படி காட்டு மாங்குளம் அட்ட மகஸ்த்த விகாரைப் பிக்கு 1995ம் ஆண்டு தொடக்கம் இத் தமிழ்ப் பிள்ளைகளை அகதி முகாம்களில் இருந்து பல முகவர்கள் மூலம் பெற்று வளர்த்து சிங்கள மொழியைப் போதித்து வருகின்றார். இப் பிள்ளைகளைத் தங்கள் தாய் மொழியிற் படிக்க வைக்க பல பெரியார்கள் கடந்த வருடம் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. இவ்வருடம் வவுனியா தெற்கு கல்வி வலய அதிகாரிகள் முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர், வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினாலும் வ.கி.மா.கல்வி அமைச்சின் செயலாளர் எடுத்துக் கொண்ட முயற்சியினாலும் 7 வருடங்கள் தமிழ் கற்காது இருந்து வந்த சிறுவர்கள் இப்போது வெளிக்குளம் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விகாரையில் வளரும் தமிழ்ப் பிள்ளைகளிற் சிலர் அயலில் உள்ள சிங்கள மொழிப் பாடசாலையில் சேர்க்கப்பட்டு சிங்கள மொழி மூலம் படிக்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது நிலை ஏன் இப்படி ஆயிற்றோ! கல்வி அதிகாரிகள்40 பிள்ளைகளைத் தமிழ் பாடசாலைகளில் சேர்த்தமை அவர்களது தூய சேவையைக் காட்டுகிறது. வவுனியாவில் உள்ள தமிழ்ப் பெரியார்கள், அரசியல்வாதிகள். சமூக அமைப்புகள், யுனிசெப் நிறுவனம் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறார்களா? வெளிக் குளத்துக்கு வந்து படிக்கும் இம் மாணவர்களுக்கு காலை உணவிற்குப் பணம் தேவை. பஸ் கட்டணம் செலுத்த பணம் தேவைப்படுகின்றது. யார் இந்தப் பொறுப்பை ஏற்க முன் வரப் போகிறார்கள்?

ஏனைய சிறுவர் இல்லங்களில் உணவு, உடை, இருப்பிடம் வழங்கப்படுகின்றன. ஆனால் இவர்களுக்குரிய முறையான, தரமான கல்வி இந் நிலையங்களால் வழங்கப்படுகின்றதா? என்று பார்த்தால் விடை இல்லையென்றுதான் கூற வேண்டும். சமய ரீதியாகன கருத்துக்களையும், முறைகளையும் இவர்களுக்கு ஊட்ட முயற்சி எடுக்கப்படுகின்றது. ஆனால் பாடசாலையில் இன்று நடைமுறையில் உள்ள கணிப்பீட்டு முறையில் இவர்களில் பலர் மிகவும் குறைந்த தரத்தையே கொண்டுள்ளமை வேதனை தரும் விடயமாகும். இவர்களது கல்வித் தரத்தை இந் நிலையங்கள் மேம்படுத்த முயற்சி எடுக்க வேண்டிய அவசியத் தேவை உள்ளது. யுத்தத்தின் கொடுமையால் ஆதரவற்றவர்களாக்கப் பட்ட இத் தமிழ்ச் சிறுவர்களின் எதிர்காலத்திற்கு யார் தான் பொறுப்பு.

**இலக்கியவதனி**

# ஆள் கடத்தலை ஐ.சி.ஆர்.சி. ஒத்துக் கொள்கிறது

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் ஆட்கடத்தல்கள் நடைபெற்றுள்ளன என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒத்துக் கொள்கின்றது. ஆனால், அதன் விபரங்களை வெளியிடத் தயாரில்லை எனக் கூறிக் கொள்கின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அண்மையில் (24.01.2003) திருகோணமலையில் நடத்திய ஊடகவியலாளர் கலந்துரையாடலில் அதன் திருகோணமலை மாவட்டத் தலைமை பிரதிநிதி வினா மில்னர் பத்திரிகை யாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் கூறினார்.

மேற்படி மாநாட்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைமை பிரதிநிதி பிலிப்பா எம். மார்கேஸ். திருகோணமலை மாவட்ட தலைமை பிரதிநிதியாக பதவி ஏற்கவிருக்கும் அஸ்கர் உமா மெக்கோவ். தலைமை அலுவலக பேச்சாளர் சுகுமார் றொக்வுட். பரப்புரை அதிகாரி எம். புஷ்பராசா. தொடர்பு அதிகாரி எம். கே. எம். ஷகீப் ஆகியோரும் பங்கு பற்றினர். தற்போதைய திருகோணமலை மாவட்ட தலைமை பிரதிநிதி வினா மில்னர் கருத்தரங்கைத் தலைமை தாங்கி நடத்தினார்.

இந்த ஊடகவியலாளர் கருத்தரங்கு திருகோணமலை நியூ சில்வர் ஸ்டார் ஹோட்டலில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பங்கு பற்றிய பத்திரிகையாளர் பல கேள்விகளை கேட்கும் போதே மேற்படி ஆட்கடத்தல் பற்றியும். அதன் விபரத்தையும் கோரினர். ஆனால். விபரம் மறுக்கப்பட்டது.

யுத்தம் நடைபெறும் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி பெரியளவில் இருக்கும். ஆனால், யுத்தம் முடிவுற்று சமாதான சூழல் நிலவும் போது அதன் பணிகளும் மட்டுப்படுத்தப் படுகின்றன. தற்போதைய சமாதான சூழலிலும் ஆட்கடத்தல்கள் பற்றிப் பல முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கின்றன. அது பற்றிய விபரங்களையோ அல்லது யார்? யாரால், கடத்தப்பட்டுள்ளனர் என்பதையோ கடத்தப்பட்டோர் எண்ணிக்கையையோ எம்மால் வெளியிட முடியாது. ஆனால். காணாமல் போனோர் விடயமாக இரு பகுதியையும் அணுகி சுயாதீனமாக செயற்பட வைத்துள்ளோம் என்றார் திருகோணமலை மாவட்ட தற்போதைய தலைமை பிரதிநிதி வினா மில்னர்.

**~ கோணன் ~**

# முஸ்லீம் காங்கிரஸ் பிளவும் அதன் விளைவும்

தற்போது முஸ்லீம் காங்கிரசுக்குள் ஏற்பட்டிருக்கும் அரசியல் அதிர்வு இலங்கையின் சமாதான சூழலை அதிர வைக்காதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாகும். அமைச்சர் மர்ஹூம். (அமரர்) அஷ்ரப் அவர்களால் புனித குர்-ஆனின் ஹதீசை அடிப்படையாகக் கொண்டு முஸ்லீம்களின் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட முஸ்லீம் காங்கிரஸ் இப்போது சிதறிப் போவது வேதனை தருகிறது.

முஸ்லீம்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் ஒரே கட்சி முஸ்லீம் காங்கிரஸ் என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஏற்றுக்கொண்டு அதன் தலைவராகிய அமைச்சர் ரவூ் ஹக்கீமுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு முடிவுக்கு வந்த நிலையில், கட்சியின் உடைவு அனைத்து சமாதான விரும்பிகள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எது எப்படியாக இருந்தாலும் முஸ்லீம் காங்கிரசிலிருந்து பிரிந்த பிரதி அமைச்சர் எம்.ஏல்.ஏ.எம்.அதாவுல்லாவின் பிளவுபட்ட போக்கிற்கு தற்போதைய "சமாதான சூழலை" கருப்பொருளாக அமைந்துள்ளதென்பது மறைக்க முடியாத உண்மையாகும். இலங்கை வாழ் அனைத்து மக்களிலும் பெரும்பான்மையானவர்கள் சமாதான இலக்கை நோக்கி நகருகிறார்கள் என்பதில் எள்ளளவும் ஐயம் தேவையில்லை.

இந்த சமாதான நகர்வை எந்த சக்திகள் எதிர்த்தாலும், அவை "கதிரவன் கண்ட பனி"யாக மறையும் என்பது முற்றிலும் யதார்த்த உண்மையாகும்.

சமாதான முன்னெடுப்புக்கள் நடந்து கொண்டிருக்கையிலே ஒக்டோபர் 15ம் திகதி அக்கரைப்பற்றுப் பகுதியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரின் சகோதரனை எஸ்.எம்.அப்துல் வஜீட் என்பவர் புலிகளால் கடத்தப்பட்டு விட்டார் என, உருவகித்து விடப்பட்ட வதந்தியை முஸ்லீம் மக்களிடையே கிளப்பிவிட்டு அதில் குளிர் காய நினைத்த "கேடு கெட்ட" அரசியல் பின்னணியை மக்கள் இலகுவில் மறந்துவிட முடியாது.

அது, இதுவரைக்கும் வெளிச்சத்திற்கு வராமலே கிடப்பிலே கிடப்பது ஒரு புறமிருக்க, இதற்கான சூத்திரதாரிகளை மக்கள் இனங் கண்டிருப்பதையும் அவதானித்துத்தான் ஆக வேண்டும். அந்த "கடத்தல் நாடகம்" அரங்கேறியிருந்தால் தமிழ்-முஸ்லீம் மக்களின் குருதியில், கிழக்கு மாகாணம் மிதந்திருக்கும் என்ற உண்மையை சகல மக்களும் உணர்தல் அவசிய மாகிறது.

சமாதான தீபத்தை அணைப்பதற்கான பல சக்திகள் பல வழிகளிலும் இன்று வரை பல முன்னெடுப்புக்களை நடாத்திக் கொண்டிருப்பது கண்கூடு. இவைகளுக்கெல்லாம் ஆரம்பம் முதல் இன்று வரை நிலை குலையாது நேர்மையாக முஸ்லீம் காங்கிரஸ் சிந்தித்து செயலாற்றியமையால் அனர்த் தங்கள் தவிர்க்கப்பட்டதை வெளிச் சொல்லாமல் இருக்க முடியாது.

பிசாசுகள் எந்த ரூபத்திலும் வந்தாலும் சமாதானத்தை குழப்ப அனுமதிக்கலாகாது. ஆகவேதான், இன. மொழி, மதம், கட்சி களுக்கப்பால் சமாதானத்தை நேசிக்கிற வர்கள் முஸ்லீம் காங்கிரசின் பிளவுகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தேசத்தின் சௌன்னிய வாழ்வில் அனைவருக்கும் பங்குண்டு. முஸ்லீம் காங்கிரசின் சிதைவுகளை தளமாகவும். களமாகவும் கொண்டு தீய சக்திகள் "நெருப்பு மூட்ட" ஆரம்பித்தால், அதுவே. யுத்தமாக வெடித்தால் விளைவுகள் எப்படி திசை மாறும் என்பதை உணர்ந்து கொள்ளல் காலத்தின் தேவையாகிறது.

மூண்டெரியும் யுத்தத்தீயின் மத்தியில் "தனி அலகுகள்" பற்றி யார் யாரிடம் பேசுவது? "உரிமைகள்" பெறுவது பற்றி யாரிடம் பேசுவது? ஆட்சியிலுள்ள சிங்கள அரசுடன் பேசிப் பெறலாம் என எண்ணியிருப்பின். அவைகளை கடந்த தசாப்தங்களில் பெற்றிருக்க முடியாமையை வரலாறு கூறும்!

மேலும். முஸ்லீம் காங்கிரசின் தற்போதைய உடைவினால் ஏற்படுகின்ற "தலைமை" கள் அமைதிப் பேச்சுக்களின் நகர்வுகளில் பாதிப்புக்களை அல்லது மாற்றங்களை ஏற்படுத்துமாயின் கடந்த காலங்களில் வடகிழக்கு தமிழ் மக்கள் அநுபவித்த இன்னல்களை விட பன்மடங்கு அனைவரும் பெற வாய்க்காலாகி விடலாம்.

எனவே தூர நோக்கு அவசியமாகிறது. தனித்தனியே தமது பதவிகளையும், கௌரவங்களையும், சுயநலன்களையும் பற்றி சிந்திக்காது முஸ்லீம்களினதும், நாட்டு மக்களினதும் நலன்களை மையப்படுத்தி சிந்தித்தால் விடயங்கள் தெளிவாகும்.

தனக்கு தானே சூட நினைக்கும் மாலைகள், தன் தன் தலையில் போடுகின்ற மண்ணாக அமைந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

வரலாற்றுப் பிழையாளிகளாக மாறி விடலாகாது. அனைத்தையும் மக்களின் சுயநிர்ணய வாழ்வை அடிப்படையாகக் கருதி. பிளவுபட்ட முஸ்லீம் காங்கிரஸ் ஒன்று சேர்ந்து "சமாதானப் பாதை"யில் ஏனையவர்களுடன் கைகோர்த்து நடக்க வேண்டும்.

இதுவே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும்!

இதயத்து மூலையில் எங்கோ அலி (ரலி) அவர்கள் "மகனுக்கு" என்ற நூலில் கூறிய இந்த வாசகம் மென்மையாக வெளிவருகிறது.

"நடந்து போனதை வைத்து நடக்கப் போவதை சரிப்படுத்து. அறிவுரைகளுக்கு முக்கியத்துவம் கொடு. திருந்தி நடக்கும் எண்ணம் எப்போதும் உன் மனதில் இருக்கட்டும். அறிவுரைகளை கேட்டுத் திருந்தும் மனிதனாயிரு. அடிபட்டுத் திருந்தும் மிருகமாய் இராதே!".

**கனகசபை தேவகடாட்சம்**
**திருகோணமலை**

# நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

## கம்பனிச் சொத்து

ஔவையாரைக் கூழுக்குப்பாடி என்றும் கம்பரைப் பொன்னுக்குப்பாடி என்றும் சொல்வார்கள். சங்ககால ஔவை வேறு நாம் அறிந்த நீதி நூல்களின் படைப்பாளியான ஔவை வேறு. உண்மையில் கம்பரை விட நன்கு அறியப்பட்டவர் ஔவைதான். என்றாலும் ஔவையார் மன்றங்களோ சங்கங்களோ கழகங்களோ நம்மிடை இல்லை. நம் பெண்ணியவாதிகளுக்குக் கூட அப்படி ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியதில்லை. கம்பர் கதை வேறு.

கம்பரை இலக்கிய நோக்கில் சுவைத்தவர்கள் முதல் அறிவுபூர்வமாக ஆராய்ந்து நயந்தவர்கள் வரை தமிழகத்தில் நிறையப்பேர் இருந்துள்ளனர். கம்பரை இந்துத்துவ நோக்கில் பயன்படுத்திய பார்ப்பானிய நிறுவனங்களும் இருந்தன. கம்பரை ஆரியமாலையின் தொடர்ச்சியாகக் கருதி "கம்பரசம்" என்ற பேரில் அபத்தமான விமர்சனங்களை முன்வைத்த ஒரு மரபும் இன்னமும் உயிரோடுள்ளது. என்றாலும் கம்ப ராமாயணம் பற்றிய ரசனையையும் ஆராய்வையும் முன்வைத்தே பழமைவாதக் கம்பன் கழகங்கள் கூடத் தமிழகத்தில் இயங்குகின்றன.

கம்பரின் சமுதாய நோக்குப் பற்றிய ஆய்வுகள் இடதுசாரிகள் மத்தியிலிருந்து எழுந்து பயனுள்ள முடிவுகளை நமக்கு வழங்கியுள்ளன. இலங்கையிலோ கம்பன் கழகம் என்பது காசு சேர்க்கிற ஒரு புண்ணிய கருமத்துக்காகவே இயங்கி வருகிறது.

பொதுசன அங்கீகாரத்துக்காக ஏங்கும் கொழும்புத் தமிழ் முதலாளிமார். சிறு கோவில்களின் உடைமையாளர்கள் போன்றோரின் சபல புத்தியை வைத்து நிறையவே பணம் பண்ணப்பட்டுள்ளது. இப்போது அது 24 லட்சம் பெறுமதியான ஒரு வீடாகவும் கொழும்பில் உருவாகியிருக்கிறது.

பண்டார வேடத்துக்கும் பணப்பைக்கும் எப்போதுமே உறவு நெருக்கமானதுதான். கம்பன் பொன்னுக்குப்பாடி என்றால் கம்பனி பொன்னுக்காகப் புகழ்பாடி என வேண்டும். வாழ்க கம்பன் புகழ். வளர்க கம்பனிப் பொருள்.

## அமெரிக்க நாட்டாண்மைக்காரர்

நெடுந்தீவில் விடுதலைப் புலிகளின் படகு தொடர்பான சம்பவத்தைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் உள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான சில தெளிவீனங்களின் விளைவாக இவ்வாறான சிக்கல்கள் ஏற்படலாம். போர் நிறுத்தத்தைக் குழப்பத் தருணம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இவ்வாறான விடயங்களைப் பெரிதுபடுத்துவதும் இயல்பானதே.

முற்றிலும் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகட்கும் அல்லது அவர்களது பிரதிநிதிகட்கும் கண்காணிப்புக் குழுவுக்குமிடையே உள்ள இவ் விடயத்தில் அதிகார பூர்வமற்ற கருத்துக்கள் வெளியிட யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் அமெரிக்கத் தூதரகத்துடைய பங்கு என்ன? அமெரிக்க அரசாங்கத்தின் பங்கு என்ன?

அவசர அவசரமாக அமெரிக்கா நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் மீதே குற்றம் சுமத்தும் தேவை என்ன? இந்திய மேலாதிக்கவாதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் உள்ள உறவு பேச்சுவார்த்தைகள் குழம்பினால் மேலும் நெருக்கமடையலாம் என்பதால் சமாதானக் குதிரையிலும் சமாதான எதிர்ப்புக் குதிரையிலும் பணம் கட்டுகிற முயற்சியா இது? அல்லது பழக்கப்பட்டுப் போன நாட்டாண்மைத் தனம் மட்டுந்தானா?

## கண்காணிப்புக் குழுவா? கண்டுங்காணாத குழுவா?

யாழ்ப்பாணத்தில் பெண் விடுதலைப் புலிகளுடன் ராணுவத்தினரது சண்டித்தனம் காரணமாக நிகழ்ந்த சம்பவத்தில் அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டதை மட்டுமே கண்காணிப்புக் குழு கண்டித்துள்ளது. அப்பாவிகளோ இல்லையோ அமைதியைக் குழப்பும் விதமாக ஆயுதப்படைகள் நடந்து கொள்வதைக் கண்காணிப்புக் குழு ஏன் கண்டிக்கவில்லை? இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாகப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் என்ன. எந்த விதமான சம்பவங்களால் யாழ்ப்பாணத்தில் இளைஞர் வன்முறை வெடித்துக் கிளம்பியது என்பதை யாராவது கண்காணிப்புக் குழுவுக்கு எடுத்துச் சொல்வார்களா?

## அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே!

சுரேஷ் பிரேமச்சந்திரன் போல இந்திய மேலாதிக்கத் தாயின் தாசாதி தாசனைக் காணுவது அரிதிலும் அரிது. அவர் சில நாடகள் முன்பு, இந்தியா நம்மை அடித்தாலும் உதைத்தாலும் அதன் காலடியில்தான் அண்டிக் கிடக்க வேண்டும் என்று ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார் என்று தகவல். நாய் நன்றியுள்ள மிருகம் என்கிறார்கள். நாய் கூடத் தன்னைத் துன்புறுத்துகிற எசமானை ஒரு வேளை கடிக்கவோ அல்லாது போனால் எசமானை நோக்கிக் குரைக்கவோ துணியும்! தமிழர்கள் அதிலும் கீழானவர்களா?

கற்பின் இலக்கணம் என்று சொல்கிற சில பெண்கள் கூட பிரேமச்சந்திரன் இந்தியாவிடம் தாம் காட்ட வேண்டிய விசுவாசத்தைத் தங்களை இம்சித்த கணவர்களிடம் காட்டியிருக்கமாட்டார்கள். அடிமை விசுவாசத்துக்கு ஒரு சுரேஷ் பிரேமச்சந்திரன் என்று சொல்லலாமா? இந்த விசுவாசத்தின் பின்னாலுள்ள நன்றிக் கடன் என்ன என்பது இன்னொரு விடயம்.

இப்போது சுரேஷ் ஐயா ஞாயிறு தினக்குரலுக்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் எதிர்க்கட்சிகள் இந்தியா அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதாகப் பொய்ப் பிரசாரம் செய்வதாகவும் இந்திய அரசாங்கம் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆதரிப்பதாகச் சொல்லி அவர்களை வாயடைக்க வைத்திருப்பதாகவும் சொல்லுகிறார்.

இந்திய அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சமாதான முயற்சிகளைக் குழப்ப எடுத்த நடவடிக்கைகளை எல்லாம் மறப்பதற்கு அவர் அழைப்பு விடுக்கிறாரா? அல்லது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கிறாரா?

## தினக்குரலில் சாதி வெறியர்கள் உள்ளனரா?

யாழ்ப்பாண நூலகத் திறப்புப் பற்றிய ஞாயிறு தினக்குரல் (16.02.2003) கேலிச்சித்திரம் ஒன்றில், யாழ் முதல்வரை சாதி அடையாளத்துடன் காணுமாறு வரையப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணப் பதிப்பில் மட்டுமே பிரசுரமாகியுள்ளது. இது ஏன்? சாதி வெறியர்களைக் கவரும் நோக்கமா? இவ்விதமான கீழ்த்தரமான படத்தை வரையத் தூண்டியவர் யார்? தினக்குரல் நிருவாகம் இதனைத் தனது கவனத்தில் எடுக்குமா?

## அரிசி ஊழலும் தமிழ் எம்.பி.யும்

வடக்கு கிழக்கு மக்களுக்கென அனுப்பப்படும் நிவாரண அரிசியில் ஊழல் மோசடி என்பது தொடரும் சங்கதியாகும். பாவனைக்குதவாத அரிசியை புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக நல்ல விலைக்கு புறக்கோட்டை பெரும் அரிசி வர்த்தகர்கள் தமது உயர் செல்வாக்கைச் செலுத்தி விற்று விடுவார்கள். அதனையே நிவாரண அரிசி என மக்கள் பெற வேண்டிய அவலம். இது பற்றி அண்மையில் வடபகுதியில் பெரும் சலசலப்பு . இந்த ஊழல் பற்றிய முழுத் தகவலும் வடபகுதி தமிழர் கூட்டமைப்பு எம்.பி. ஒருவருக்கு வழங்கப்பட்டது.ஆனால் அவர் அதனை பாராளுமன்றத்தில் பிரச்சினையாகக் கிளப்பவில்லை. அவ் ஊழல் விடயத்தை ஜே.வி.பி. எம்.பி. ஹேரத்திடம் கொடுத்து விட்டு தான் நல்ல பிள்ளையாகக் கழன்று கொண்டார். இனவாதம் பேசும் ஜே.வி.பி. இதனை வைத்து வடபகுதி மக்களுக்காக கண்ணீர் வடித்துக் கொண்டது. குறிப்பிட்ட தமிழ் எம்.பி. தானே அரிசி ஊழலை அம்பலப்படுத்தினால் புனர்வாழ்வு அமைச்சரும் பிரதமரும் கோபப்படுவார்கள் என்பதைத் தவிர்க்கவே ஜே.வி.பி.யை நாடினர். என்னே யூஎன்.பி. விசுவாசம். அது மட்டுமன்றி கூட்டமைப்பு எம்.பி. மாருக்கும் அரசி வியாபாரிகளுக்கும் நல்ல உறவும் கூட. எல்லாம் தமிழ்ப் பற்றின் வெளிப்பாடுதான்.

www.padippakam.com



# கூட்டமைப்பு எம்.பி.யின் இரட்டைவேடம்

யாழ்ப்பாண நூலக திறப்பு விழா தொடர்பாக யாழ் மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) எம்.பி. விநாயகமூர்த்தி இரட்டை நிலைப்பாடு கொண்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாண நூலக திறப்பு விழாவுக்கு வாழ்த்து தெரிவித்து ஒரு கடிதத்தையும், எதிர்ப்பு தெரிவித்து இன்னொரு கடிதத்தையும் யாழ் (முன்னாள்) முதல்வர் செல்லன் கந்தையனுக்கு விநாயகமூர்த்தி அனுப்பி வைத்திருந்ததாக தெரிய வருகிறது.

வாழ்த்து தெரிவித்து அனுப்பிய கடிதம் பிந்தியும் எதிர்ப்பு தெரிவித்து அனுப்பிய கடிதம் முந்தியும் கிடைத்ததாகத் தெரிகிறது.

குறிப்பிட்டபடி யாழ்ப்பாண நூலகத்தை கடந்த மாதம் 14ஆம் திகதி திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 13ம் திகதியிட்டு அனுப்பிவைத்திருந்த ∴பக்ஸ் 13ஆம் திகதியே கிடைக்கப்பெற்றுள்ளது. 13ஆம் திகதிக்கு முன்னர் திகதியிடப்பட்டு அனுப்பியிருந்த வாழ்த்துக் கடிதம் 15ம் திகதி முதல்வரின் வீட்டில் ஒரு நபரினால் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வாழ்த்துத் தெரிவித்து அனுப்பிய கடிதத்தை கொழும்பிலிருந்து 14ஆம் திகதி யாழ்ப்பாணம் பயணம் செய்த ஒருவரிடம் கொடுத்தனுப்பியிருந்ததாக தெரிகிறது. எதிர்ப்பு கடிதம் 13ஆம் திகதி நேரடியாக முதல்வருக்கு ∴பக்ஸ் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

எனவே யாழ் நூலக திறப்பு விழா தடைப்பட்டால் தடுத்தவர்களிடம் நல்ல பெயர் வாங்க எதிர்ப்பு கடிதமும், திறக்கப்பட்டுவிட்டால் திறந்தவர்களுடன் உறவு வைத்துக்கொள்வதற்கு வாழ்த்துக்கடிதத்தையும் அனுப்பி வைத்திருக்கலாம் என்ற முடிவுக்கே வரமுடிகிறது.

ஏற்கனவே விநாயகமூர்த்திக்கென யாழ் நூலக திறப்புவிழா பற்றி எவ்வித சொந்த முடிவும் இருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது. தற்போது திறப்பு விழாவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதே அவரின் முடிவாக இருக்கும். ஏனெனலில் திறப்புவிழா தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதுதானே!

விநாயகமூர்த்தியை மட்டுமல்ல அதிகமான தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டோர்களை உன்னிப்பாக கவனித்து வந்தால் அவர்களின் இரட்டை நிலைப்பாட்டையும் இரட்டை வேடத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

எது பிழை எது சரி என்று முடிவெடுக்க முடியாமல் தங்களுக்கு தனிப்பட ஏற்படப்போகும் நன்மை தீமைகளை பொறுத்து தங்களது முடிவுகளை எடுக்கும் இரட்டை வேடமிடுபவர்கள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தலைவர்கள் என்பது தமிழ் மக்களின் சாபக்கேடாகும்.

விநாயகமூர்த்தியின் அ.இ.த. காங்கிரஸின் முந்திய தலைவர்களது நிலைப்பாடும் இத்தகையதுதான். டி.எஸ். சேனநாயக்காவை திட்டோதிட்டென்று திட்டிய அதேவேளை மிகவும் கீழ்ப்படிபவராக ஜி.ஜி. பொன்னம்பலம் நடந்து கொண்டார் என்பது வரலாறு. அதேபோன்று அரசியல்ரீதியாகக் கடுமையாகச் சாடிய ஒரு தலைவரின் விருந்துகளுக்கு செல்வதில் பின்நிற்காதவர் குமார் பொன்னம்பலம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# யூ.என்.பி.யின் ஒரு வருட ஆட்சியில் இயற்றப்பட்ட சட்டங்களும் உயர்த்தப்பட்ட விலைகளும்

அரிசியின் விலை 50 ரூபாவிற்கு மேல் உயரும் என்று பிரதமர் பதவியை பொறுப்பேற்கும்போது ரணில் விக்கிரமசிங்ஹ கூறியது உண்மையாகிவிட்டது. ஒரு றாத்தல் பாணின் விலை ரூ.14.00 இற்கு மேல் உயர்ந்துள்ளது. அதாவது ரூ.14.00க்கு கூடிய பல விலைகளில் பாண் விற்பனை செய்யப்படுகிறது. கோதுமை மாவின் விலையும் 28 ரூபாவிற்கு மேல் கூடியுள்ளது. மண்ணெண்ணை யின் விலை அடிக்கடி அதிகரிக்கப்பட்டுள்ளது. மருந்துப் பொருட்களின் விலையை எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது.

யூஎன்.பி. அரசாங்கத்தை பொறுப்பேற்கின்ற போது திரைசேரியில் பணமில்லாமல், பெருங்கடனுடன் பொறுப்பேற்றபடியால் விலைகளை பரிபாலணம் செய்ய முடியவில்லை என்பது அரசாங்கத்தினர் தொடர்ந்து கூறிக்கொண்டு வருகின்றனர்.

முன்பு யுத்தத்தினால் விலைகள் அதிகரிப்பதை தடுக்க முடியாதென்றனர். கடந்த ஒருவருடமாக யுத்தம் நடைபெறவில்லை. ஆனால் யுத்தம் நடைபெறும் காலத்தில் இருந்ததைவிட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பலமடங்கு அதிகரித்துள்ளன.

அத்துடன் இந்நாட்டின் தொழிலாளர்கள் இதுவரை அனுபவித்துவந்த உரிமைகளுக்கு தடைவிதிக்கும் வகையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் கட்டளைச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டு பெண்கள் இரவிலும் தொழிற்சாலைகளில் வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகின்றனர். மேலதிக கொடுப்பனவுடனான மேலதிக வேலை நேரத்தின் எல்லையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒருவர் கூடியநேரம் வேலைசெய்ய நிர்பந்திக்கப்படுவார்.

ஒரு கம்பெனி அல்லது வேலைதருநர் ஊழியர் ஒருவரை விரும்பியபடி வேலையிலிருந்து நீக்குவதற்கு உரிமையை வழங்கும் விதத்தில் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஓரிரு மாத சம்பளத்தை நட்டஈடாக கொடுத்து விரும்பிய எவரையும், விரும்பிய நேரம் வேலை நீக்கம் செய்ய தொழிழ்தருநர்களுக்கு கொடுக்கப்படும் உரிமை மிகவும் பாரதூரமானதாகும். எழுத்திலாவது உறுதிசெய்யப்பட்டிருந்த வேலை உரிமை பறிக்கப்பட்டுவிட்டது.

கடைகள் காரியாலயங்கள் ஊழியர்கள் சட்ட ஏற்பாடுகள் எவ்வாறிருந்தபோதும் பொதுவாக கடை காரியாலய ஊழியர்களுக்கு உரிய விடுமுறைகள், வழங்கப்படுவதுமில்லை. நேரவரை யறையின்றி வேலைசெய்ய ஊழியர்கள் நிர்பந்திக்கப்பட்டனர். அச்சட்டத்திற்கு தற்போது கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தின்படி நேர வரையறையின்றி வேலைவாங்குவதற்கு இடமளிப்பதுடன் பெண் ஊழியர்களை கடைகளிலும், காரியாலயங்களிலும் இரவு நேரங்களிலும் வேலைக்கமர்த்தவும் இடமளிக்கப்படுகிறது.

இன்னும் பல சட்டங்கள் தொழிலாளர்களுக்குவிரோதமாகவும் கம்பனிகள் முதலாளிகளுக்கு சார்பாகவும் கொண்டுவரப்பட இருப்பதாக அறிய முடிகிறது. இவற்றை பொருளாதார மறுசீரமைப்பு நிர்வாக கட்டமைப்பில் மாற்றங்கள் என்ற பெயரில் உலகமயமாக்கலுக்கு ஏற்றவிதமாகவே கொண்டுவரப்படுகின்றன. இதனால் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

# தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

தேயிலை ஏற்றுமதி ஏல விற்பனையில் ஏற்பட்ட மோசடியினால் இலங்கைக்கு 400 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. லிபியாவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய ஏல விற்பனையிலே மேற்படி நட்டம் ஏற்பட்டுள்ளது. மிகவும் குறைந்த விலையை கோரியதாலே நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தாராள பொருளாதாரத்தின் சந்தை நடவடிக்கைகளின் விளைவாகும். இதனால் கடந்த மாத தேயிலை வியாபாரத்தில் உற்பத்தி செலவைக் கூட ஈடு செய்யக் கூடிய விலை கிடைக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா யுத்தத்தை நடத்தலாம் என்ற எதிர்பார்ப்பினாலும் மத்திய கிழக்கு நாடுகள் தேயிலையை கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றன. இலங்கை மத்திய கிழக்கு நாடுகளுக்கே தேயிலையை அதிகமாக ஏற்றுமதி செய்து வருகிறது. ஈராக் மீது யுத்தம் நடத்தப்பட்டால் ஏற்படபோகும் பின் விளைவுகளை கருத்திற் கொண்டு தேயிலையை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தி வைக்க முடியாது என்பதனால் எமது நாட்டு தேயிலையை கொள்வனவு செய்யும் மத்திய கிழக்கு நாடுகள் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டவில்லை.

இதனால் எமது நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் அத்துடன் யுத்தம் ஏற்பட்டால் எண்ணெய் வர்த்தகம் பாதிக்கப்படும். அதனால் எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலை மேலும் அதிகரிக்கப்படலாம்.

ஆனால் அமெரிக்காவிற்கு பூரணமான ஆதரவை வழங்கும் ஐ.தே.மு. அரசாங்கம் வெளிப்படையாக ஈராக மீதான யுத்தத்தை தவிர்க்கும்படி உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அதேபோன்று ஜனாதிபதி சந்திரிகாவும் இன்னும் முடிவெடுக்கவில்லை. மாறாக யுத்தம் ஏற்பட்டால் இலங்கைக்கு ஏற்படப் போகும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவொன்றை நியமித்துள்ளார். யுத்தமொன்றின் அநியாயத்தையும் பார்க்காமல் பாதிப்புகள் பற்றியும் கவலை கொள்ளாமல் உள்நாட்டில் யுத்தம் செய்தவர்களுக்கு யுத்தமொன்றின் வேதனை எங்கே புரியப்போகிறது.

# தோட்டத் தொழிலாளர்கள் ரொட்டி கேட்கிறார்கள் பிரதமர் ரணில் கேக் சாப்பிடுமாறு கூறுகிறார்

நாட்டில் கோதுமை மாவின் பாவனை பரவலானது. அதனைச் சாதாரண மக்களே அதிகம் உணவாகக் கொண்டுள்ளனர். அத்தகைய மாவின் விலை அடிக்கடி அதிகரிக்கப்பட்டே வந்துள்ளது. இப்பொழுது ஒரு கிலோ மாவின் விலை ரூபா 28. கிராமப்புறங்களில் ரூபா 29 ஆகவும் விற்கப்படுகின்றது. தோட்டத் தொழிலாளர்களின் உணவில் மா பிரதான இடத்தை வகிக்கிறது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் தமது காலை மதிய உணவை இழக்க வேண்டியே உள்ளது. இந்த விலையேற்றப் பிரச்சினைக்கு பிரதமர் மாற்று நடவடிக்கையாக அரிசி மாவைப் பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். அரிசிமாவைப் பொதியில் அடைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறியுள்ளார். ஆனால் ஒரு கிலோ அரிசி மாவின் விலை ரூபா.50 ஆகும். இது பாண் இல்லையென்றால் கேக்கைச் சாப்பிடலாம் தானே என்ற கூற்றையே நினைவுபடுத்துகிறது. மேலே உள்ள சீமான்கள் சீமாட்டிகளுக்கு கீழே உள்ள மக்களது அன்றாட வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை எங்கே புரியப்போகிறது.

# இ.தொ.கா மாநாட்டின் செலவு 20 லட்சம்

கண்டியில் நடைபெற்ற இ.தொ.கா மாநாட்டிற்கான செலவு 20 லட்சம் ரூபாவிற்கு அதிகமாகும் என்று தெரியவருகிறது.

ஆடம்பரமான அலங்காரங்கள். தென்னிந்திய கலைஞர்களின் டப்பான் கூத்துக்கள். மாநாட்டு பிரதிநிதிகளுக்கு தடல்புடலான சௌகரியங்கள் எல்லாவற்றுக்கும் 20 லட்சத்துக்கு மேலாகவே செலவழிந்திருக்கும்.

இந்த செலவுகளுக்கு எங்கிருந்து பணம் திரட்டப்பட்டது. இ.தொ.கா அங்கத்தினர்களான தொழிலாளர்களுக்கே வெளிச்சம்.

# அமைச்சர் கனவான் யாரென்று கூறுங்கள்

கொழும்பில் வெள்ளவத்தைப் பகுதியைக்குட்டி யாழ்ப்பாணம் என அழைப்பது வழக்கம். அது மட்டுமன்றி சேரியில் வாழ்ந்தாலும் வெள்ளவத்தைச் சேரியில் வாழ்வதை அந்தஸ்தாகவும் கௌரவமாகவும் கணிக்கும் தமிழ் மேட்டுக்குடி மனப்பான்மை கொண்ட சிலர் இப்போதும் உள்ளனர். இந்த வெள்ளவத்தையில் ஒரு பேர்ச் காணித்துண்டின் விலை குறைந்தது பத்து லட்சம் ரூபா. அங்கு ஹமார்ஸ் அவெனியூவில் பதினாறு பேச் காணியை ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா விலைக்கு ஒரு தமிழ் அமைச்சர் தனது நம்பிக்கைக்குரிய உறவினரின் பெயரில் வாங்கியுள்ளார். இவர் ஏற்கனவேயும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கடந்த இரண்டு வருடங்களில் தனக்குக் கிடைத்த பா.உ., அமைச்சர் பதவியைக் கொண்டு நிறையச் சொத்துடமைகளும் பணமும் சேர்த்துக் கொண்டதாக மக்கள் பேசிக் கொள்கின்றனர். கொள்ளை லாபமும் ஏமாற்றும் சுரண்டலும் கொண்டு சொத்துடமை சேர்த்துப் பெருக்குவது இன்றைய ஏற்றத்தாழ்வு கொண்ட சமூக அமைப்பிலே புதுமையான ஒன்றல்ல. ஆனால் தமிழ், தமிழன், இந்து மதம் என்பனவற்றின் பேரால் வசனங்கள் பேசி அறிக்கைகள் விட்டு அவற்றின் மறைவிலே சொத்துடமை சேர்த்துவரும் கேடுகெட்ட அரசியல் ஏமாற்றுத்தனத்தையே நாம் சுட்டிக் காட்டுகின்றோம். தமிழ் மக்கள் வெறும் இன உணர்வால் ஏமாறத் தயாராக இருக்கும் வரை ஏமாற்றும் பேர்வழிகள் காலத்திற்குக் காலம் ஏமாற்றவே செய்வார்கள். அந்தச் சொத்துச் சேர்க்கும் அமைச்சர் கனவான் யாரென்று கண்டுபிடியுங்கள்.

# 50 லட்சம் ரூபாவில் வாகனம்

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக யூ என். பி. அரசினால் நியமிக்கப்பட்டிருப்பவர் முன்னை நாள் தோட்டத்துரை. கூட்டுத்தாபனத்திற்கு தலைவராகும் தகுதி யூ என். பி. ஆதரவாளர் என்பதே. அண்மையிலே அவருக்கு ஐம்பது இலட்சம் ரூபாவில் ஆடம்பர வாகனம் வாங்கப்பட்டது.

பலவருடங்களாக மூடியிருக்கும் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியருக்கு 3 லட்சம் ரூபாய் நட்டஈட்டை கொடுக்க முன் வந்த போது அது போதாதென ஊழியர்கள் ஆட்சேபித்தனர். தமிழ் ஊழியர்களைக் கட்டாயமாக வேலையிலிருந்து அப்புறப்படுத்தும் அதே வேளை தலைமையகத்தில் தலைவர் புதியவர்களை நியமித்துள்ளார். காங்கேசன்துறை சீமெந்து ஆலையின் வருவாயில் வாங்கிய கட்டிடங்கள் மூலம் அதற்கு வருவாய் வருவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது பற்றி நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப முடியாதா? இந்திய அடிவருடிகளான இவர்கள் சீமெந்து தொழிற்சாலையை இந்தியா பொறுப்பேற்பதற்கு ஒத்துழைக்கின்றனரா?

# அரசின் அப்பட்டமான சுரண்டல்

நமது நாட்டில் முதலாளித்துவ அமைப்பு இருக்கிறது என்பதை சிறுபிள்ளைகளும் அறிந்திருப்பார்கள். முதலாளிகளின் நலன்களைப் பாதுகாப்பது மட்டுமல்ல அரசாங்கமே நேரடியாகத் தொழிலாளர்களைச் சுரண்டி வருகின்றது என்பதற்கு ஒரு உதாரணம்.

வெளிநாடுகளில் வேலை செய்வோரின் நலன்களைப் பாதுகாப்பதென்ற போர்வையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பணியகம் மத்திய கிழக்கில் பணிப்பெண்களாகக் கடமை புரியும் யுவதிகள் படும் சித்திரவதை, பாலியல் வல்லுறவு, சம்பளக் கொடுப்பனவு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் ஏனோ தானோ என்ற நிலையிலேயே இயங்குகிறது. அதேவேளை மத்திய கிழக்கில் இயங்கும் எமது தூதரகங்களின் அதிகாரிகள்-வியாபாரம் செய்வதாகவும் புகாரர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நமது நாட்டுப் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு அரபு நாட்டுப் பணக்காரர்களுக்கு நமது தூதரக அதிகாரிகள் சிலர் துணை போகிறார்கள் என்றும் அதனால் இலகுவாக அங்கே பணம் சுருட்டிக் கொள்வதாகவும் பேசப்படுகிறது.

2002ம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் பதினாறு கோடி அறுபது இலட்சம் (166 மில்லியன்) ரூபாயை வருமானமாகப் பெற்றது.

2001ம் ஆண்டில் இதே காலப் பகுதியில் பெற்ற வருமானத்தை விட 2002ம் ஆண்டில் 75மு வருமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வேலை பெற்றுச் செல்வோரின் ஒப்பந்தப் பதிவும் இந்தப் பாரிய வருமான அதிகரிப்புக்கு காரணம் என பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ தெரிவிக்கிறார்.

2002ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கட்டுநாயக்கா காரியாலயத்தில் பதிவுக் கட்டண வசூலாக 30 இலட்சம் ரூபாய். ஒக்டோபர் மாதத்தில் ஒரு கோடி ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. நம்மவர்கள் அங்கும் சுரண்டப்படுகின்றனர். இங்கிருந்து செல்லும் போதும் பணம் பறிக்கப்படுகின்றனர். இதுதான் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதன் லட்சணம்.

# பாடசாலைகளுக்கு மூடுவிழா

தென் மாகாணத்தில் மட்டும் இதுவரை எழுபத்திரண்டு (72) பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது.

வசதி படைத்தவர்களின் கல்விக்கான செலவை இப்பாடசாலைகளை மூடுவதன் மூலம் பெறப்படுகிறது.

இது உலகவங்கியின் கல்விச் சீர்திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். இது போன்று நாட்டின் சகல பகுதிகளிலும் சிறிய பாடசாலைகளுக்கு மூடு விழா செய்யும் செயற்பாடு கல்வித் திணைக்களத்தால் கணக்கிடப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தொழிலாளர்களின் உரிமைகள் பேசப்படாத

## இ.தொ.கா.வின் தொழிற்சங்க மாநாடு

அஸ்கிரிய பௌத்த பீடாதிபதியின் ஆசியுடன் ஆரம்பித்து தென்னிந்திய நடிக, நடிகைகளினதும் கலைஞர்களினுடைய டப்பான் கூத்துகளுடன் முடிவடைந்தது ஒரு பெரிய தொழிற் சங்கத்தின் தேசிய மாநாடு. அது இரண்டு வாரங்களுக்கு முன்பு கண்டியில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய மாநாடாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ, எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் அநுரபண்டாரநாயக்க உட்பட பலர் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். பிரதமர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கப்படும் என்று பல வாக்குறுதிகளை வழங்கினார். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தால் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு மிகவும் பொறுப்பு வாய்ந்த அமைச்சொன்றை வழங்குவதாக அநுரபண்டாரநாயக்க வாக்குறுதி அளித்தார்.

ஐ.தே.முன்னணிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் இ.தொ.கா.வின் பலத்தை காட்டுவதாகவே அம்மாநாடு அமைந்திருந்தது. இ.தொ.கா. மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் போக்குவரத்து. தங்குமிட வசதி உட்பட வேறு சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. தொழிலாளர்களின் தொழிற்சங்க மாநாடு போலன்றி பிரதிநிதிகள் வசதியாக சமுகமளித்திருந்தனர். என்.ஜி.ஓ.க்கள் நடத்தும் நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்கள் கவனிக்கப்படுவது போன்று மாநாட்டு பிரதிநிதிகள் கவனிக்கப்பட்டனர்.

தலைவர் பதவியை வேறொருவருக்கு கொடுத்தால் தனது கௌரவம் குறைஞ்சு போகும். பொதுச்செயலாளர் பதவியை இன்னொருவருக்கு கொடுத்தால் தொழிற்சங்கத்தின் சட்டரீதியான கட்டுப்பாடு அந்த இன்னொருவரிடம் ஒப்படைக்கப்பட்டு விடும். கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலும், கட்டுப்பாட்டை வைத்திருக்கும் வகையிலும் இ.தொ.கா.வின் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் ஆறுமுகம் தொண்டமானே பொறுப்பேற்றுக் கொண்டார். தலைவர், செயலாளர் ஆகிய இரண்டு பதவிகளிலும் ஒன்றை மட்டுமே ஆறுமுகம் எடுத்துக் கொள்வார். மற்றையதை தனக்கு தந்து விடுவார் என்று எதிர்பார்த்த ஏனைய இ.தொ.கா. தலைவர்களுக்கெல்லாம் பெரும் ஏமாற்றம். ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளாமலே இருந்தனர். செல்லச்சாமி முதல் யோகராஜன் வரை எல்லோருமே அமைதியாகவே இருக்க வேண்டும்.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாக இந்தியத் தூதுவர் வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்காக இந்தியத் தூதரகம் தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்திற்கூடாக செலவழிக்கும் பணம் பற்றி குறிப்பிட்டு, தோட்டத் தொழிலாளர்களை இந்தியத் தூதரகம் கைவிட்டு விடவில்லை என்று கூறியுள்ளார்.

கம்பொளையில் நடைபெற்ற இ.தொ.கா.வின் முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எடுத்துப் பார்த்தால் அதில் இருக்கும் பிரஜா உரிமைப் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை, குடியிருப்பு பிரச்சினை, கல்விப் பிரச்சினை என்பன இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன.

வேடிக்கை என்னவென்றால் அப்பிரச்சினைகள் பற்றி எதுவும் பேசப்படாத நிலையில், வென்றெடுக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் பற்றி பேசப்படாத நிலையில் இந்த மாநாடு நிறைவெய்தியது.

ஐ.தே.மு. தலைவருக்கு தனது செல்வாக்கை காட்டுவதாக இம்மாநாட்டை ஆறுமுகம் நடத்தினார் என்று கூறலாம். மேல்கொத்மலைத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றுமானால் இ.தொ.கா. ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு வழங்கி வரும் ஆதரவை மீள் பரிசீலனை செய்ய வேண்டி வரும் என்று பிரதமர் ரணிலை தனது மேடையில் வைத்துக் கொண்டு ஆறுமுகம் பேசியமை கூட ஒரு பயமுறுத்தலே ஆகும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்தாலும் ஆறுமுகத்திற்கு அமைச்சர் பதவி உண்டு என்பதை அநுரா பண்டாரநாயக்க உறுதி செய்துள்ளார். ஆக, ஆறுமுகத்தைப் பொறுத்தவரை மாநாட்டின் நோக்கம் நிறைவேறியுள்ளது எனலாம்.

தோட்டத் தொழிலாளர்களினதும், மலையகத் தமிழ் மக்களினதும் பெரிய அமைப்பு என்று சொல்லப்படுகின்ற இ.தொ.கா.வின் மாநாடு அம்மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஓரளவாவது பிரதிபலித்ததா என்பதுதான் கேள்வி. தோட்டக் கம்பெனிகளின் மிதமிஞ்சிய சுரண்டலுக்குள்ளாக்கப்பட்டு, உரிய சம்பளமின்றி, வேலைப்பளு கூட்டப்பட்ட நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் கஷ்டப்படுகின்றனர். ஏற்கனவே உறுதி செய்யப்பட்டிருந்த உரிமைகளை ஒவ்வொன்றாக நடைமுறையில் தோட்டக் கம்பெனிகள் பறித்து வருகின்றன. தொழிற்சட்டங்களுக்கு திருத்தம் கொண்டு வரப்பட்டு ஒவ்வொரு உரிமையாக மறுக்கப்பட்டு வருகின்றது.

- ம. அழகேசன் -

மலையகத் தமிழ் மக்கள் இனரீதியாக மிகவும் மோசமாக ஒடுக்கப்பட்டு வருகின்றனர். தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதற் காக எடுக்கப்படுகின்ற முயற்சிகளில் மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக இல்லை.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கூட்டப்பட்ட மாநாட்டில் மேற்படி விடயங்கள் பற்றி எவ்வித கவனிப்புமின்றி திருவிழாவாக, பெருவிழாவாக நடைபெற்ற இ.தொ.கா. மாநாடு எதை உணர்த்துகிறது? ஆறுமுகம் போன்றவர்களின் பதவிகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், இந்திய ஆளும் வர்க்கப் பிடியை இலங்கை மீது தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான தோட்டத் தொழிலாளர்களின், மலையகத் தமிழ் மக்களின் சார்பில் கொண்டு இழுக்கப்படும் இ.தொ.கா. என்ற அமைப்பின் மாநாடு என்பதுதான் உணர்த்தப்படுகிறது.

இலங்கையின் அதிகக் கூடிய தொழிலாளர்களின் அமைப்பிற்கு ஆறுமுகம் போன்ற நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் நிலைப்பாட்டுடன் தலைமைதாங்க முடியாது என்பது உணர்த்தப்படுகிறது.



இ.தொ.கா.வை திருத்தியமைக்க முற்படுவதாக கூறியவர்கள் ம.ம.மு.வை அமைத்து இன்னுமொரு இ.தொ.கா.வாக மாற்றியுள்ளனர். அதனால் இ.தொ.கா.வும் ம.ம.மு.யும் மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரே மாதிரியான அமைப்புகள்தான். அதனால் ம.ம.மு.யும் அதனது பலத்தை நிலைநாட்ட இன்னுமொரு மாநாட்டை பெரும்பெரும் விழாவாக நடத்தலாம். இவற்றால் தோட்டத் தொழிலாளர் வர்க்கத்திற்கும், அடக்கப்படும் மலையகத் தமிழ் தேசிய இனத்துக்கும் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

தோட்டத் தொழிலாளர்களும், மலையகத் தமிழ் மக்களும் தொழிலாளர் வர்க்க அடிப்படையிலான புரட்சிகர அமைப்பொன்றின் கீழ் அணிதிரள்வதே விடுதலைக்கும் விமோசனத்திற்குமான மாற்று வழியாகும்.

# எட்டி உதைப்பவர்கள் நண்பர்களா?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் பதில் கூறட்டும்

இந்தியா எட்டி உதைத்தாலும் இலங்கை தமிழ் மக்கள் தொடர்ந்தும் இந்தியாவின் நண்பர்களாகவே இருக்க வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் பொதுச்செயலாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன் இலங்கை தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படை தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள், சமாதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதெல்லாம் அவற்றை குழப்புவதற்கு இந்தியா எடுத்து வந்த நடவடிக்கைகள் என்பன இலங்கை தமிழ் மக்களை எட்டி உதைத்த நடவடிக்கைகளல்ல, அவர்களின் முதுகில் கத்தியால் குத்திய நடவடிக்கைகளாகும் என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு விளங்கிக் கொள்ள முடியாது.

எட்டி உதைப்பவர்களை உதை வாங்கியவர்கள் நண்பர்களாகக் கொள்ள முடியாது. எட்டி உதைப்பவர்களுக்கு இணங்கிப் போவது அடிமைத்தனமேயன்றி விடுதலை உணர்வல்ல.

இருந்தும் எட்டி உதைக்கும் இந்தியாவை இலங்கை தமிழ் மக்கள் நண்பர்களாகவே கொள்ள வேண்டும் என்று கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

அக்கருத்தரங்கில் பேசிய ரெலோ முதல்வர் சிறிகாந்தா தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தியாவை தமது பக்கம் வைத்திருக்க தவறிவிட்டது. அதனாலேயே இந்தியா சமாதான முயற்சிகளை குழப்புபவர்களின் பக்கத்தில் இருப்பதாக கூறியுள்ளார். இதுவும் இந்திய அடிமை விசுவாசத்தையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் மக்களின் போராட்டத்தை பாவித்து இலங்கையை குழப்பி இந்திய மேலாதிக்க நலன்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை இருந்த போது இந்திய ஆளும் வர்க்கம் அச்சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தியது. அதனை தமிழ் மக்கள் மீதான இந்திய ஆளும் வர்க்கத்தின் கருணை என்று பறை சாற்றியவர்கள்தான் இலங்கை தமிழ்த் தலைவர்கள்.

தற்போதைய சமாதான சூழ்நிலைகளை குழப்பி இலங்கையின் பேரினவாதத்திற்கு துணைபோவதன் மூலமே இந்திய மேலாதிக்க அக்கறைகளை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதில் இந்திய ஆளும் வர்க்கம் முனைப்பாக இருக்கிறது. இதனை தமிழ்த் தலைவர்களின் அடிமை விசுவாசத்தால் திசை திருப்பிவிட முடியாது. அவ்வாறான முயற்சிகளை செய்து இந்தியாவை தாஜா பண்ணவில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பை குறைகூறும் சிறிகாந்தா அக்கூட்டமைப்பில் ரெலோவும் அங்கத்துவக் கட்சி என்பதை மறந்து பேசுகிறார்.


தென்னாசிய பிராந்தியத்தின் மீதான மேலாதிக்க விஸ்தரிப்பு எண்ணம் கொண்ட இந்திய ஆளும் வர்க்கத்தினருக்கு அவர்களின் நோக்கத்தில் தெளிவிருக்கிறது. இந்திய ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்க விஸ்தரிப்பு வாதத்திற்கு தமிழ் தலைமைகள் ஆதரவாக இருப்பது என்றால் அதன் தெளிவாக கூறிவிட்டு செயற்படுவது நல்லது. அதனுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் எப்போதுமே இசைந்து போக முடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை ஜே.வி.பி. உட்பட பேரினவாதிகள் இந்திய ஆளும் வர்க்கத்தின் துணையுடன் தற்போதைய சமாதான சூழ்நிலைகளை குழப்ப திட்டமிட்டு செயற்படுகின்றன. இந்திய ஆளும் வர்க்கமும் அந்நிலைமை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இவ்வாறான நிலைமையில் மேற்படி தமிழ்த் தலைமைகள் இந்திய ஆளும் வர்க்கத்துடன் இணங்கிப் போக வேண்டும் என்று கூறுவதன் மூலம் தற்போதைய சமாதான சூழ்நிலையை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களாக இருக்க முடியாது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்காவின் ஏகாதிபத்திய அக்கறைகள், இந்திய மேலாதிக்க அக்கறைகள் என்பனவல்ல முக்கியம். மாறாக இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளே முக்கியமானவையாகும்.

# அமெரிக்கத் தூதுவரின் தூதுவர்

## மிலிந்த மொறகொடவின் அடிமை விசுவாசம்



அமெரிக்க தூதுவர் ஏதாவது ஒரு காரியத்தை செய்யும்படி கேட்டுக் கொண்டால் ஏன், எதற்கு என்று கேள்வி கேட்காமலே அதனை செய்து முடிப்பதாக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலக நாடுகளுக்கு, கேள்விக்குட்படுத்தப்படாத மேலாதிக்க தலைமையாக அமெரிக்கா விளங்குவதை அவர் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவரின் கட்டளையை சிரமேற் கொண்டு செயற்படுவதாக இலங்கையின் அமைச்சர் ஒருவர் இருப்பாரானால் அவரின் இறைமை, தனித்துவம் எல்லாம் எங்கே போய் விட்டது என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

கொழும்பிலுள்ள உலக வர்த்தக நிலையக் கட்டிடத்தில் நடைபெற்ற சர்வதேச நிறைவேற்று சேவைகளுக்கான கம்பெனிகளின் கூட்டமொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மிலிந்த மொறகொட இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்லிஸ் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அக்கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அக்கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் அமைச்சருக்கு முறைப்படி அழைப்பு விடுத்திருக்கவில்லை. அழைப்பில்லாமலே அக்கூட்டத்திற்கு சென்றிருக்கிறார். இலங்கையிலிருக்கும் அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்லிஸ் கேட்டுக் கொண்டதற் கிணங்கவே அக்கூட்டத் தில் கலந்து கொள்வதாக வும் தெரிவித்துள்ளார். அமெரிக்க தூதுவர் எதைச் செய்யச் சொன்னாலும் காரணம் எதனையும் கேட்காமல் அவ்விடயத் தைச் செய்து முடிப்பதாக அமைச்சர் மொறகொட தெரிவித்துள்ளார். அக் கூட்டம் நடைபெற்ற கொழும்பிலுள்ள உலக வர்த்தக நிலையத்திற்கு சென்ற பிறகே எதற்காக அக் கூட்டம் நடத்தப்பட்டது என்பதை எனக்கு அமெரிக்க தூதுவர் தெரிவித்தார் என்றும் கூறியுள்ளார். அது உலகம் முழுவதும் தாராள வர்த்தகத்தை நடத்துவதற்கான தொண்டர் நிறைவேற்றுனர்களுக்கும், ஆலோசகர்களுக்குமான கூட்டமாகும்.

சில காலத்திற்கு முன்பு ஹவாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது உலக நாடுகளுக்கு கேள்விக் குட்படுத்தப்படாத மேலாதிக்க தலைமையாக அமெரிக்கா விளங்குவதை அவர் வரவேற்பதாக தெரிவித்திருந்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியமாட்டோம் என உலக மக்களில் பெரும்பாலானோர் சபதம் எடுத்து சவாலாக செயற்படும்போது அது இடுகின்ற கட்டளைகளை சிரமேற் கொண்டு செயற்படுவதாக வெளிப்படையாக இலங்கையின் அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது இதுதான் முதற்தடவை என்று கூறுவதில் பிழையிருக்காது.

இவ்வாறு கூறுகின்ற அமைச்சர் எவ்வாறு வீழ்ந்திருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மறுசீரமைக்கப் போகிறார்?

சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கை வகிக்கின்ற அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அரசியல் தீர்வுகளுக்கு இடமளிப்பாரா?

இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் பற்றி பேசும்போது கெப்பட்டிப்பொல்ல, வீரபுராங் அப்பு போன்றோரை நினைவுபடுத்தும் இலங்கை மக்கள் இனி மிலிந்த மொறகொட போன்றோரர் பற்றி பேச வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

# இந்திய நச்சுப் பூண்டு

1987ம் ஆண்டு அமைதி காக்கவென நாட்டுக்குள் அத்துமீறிப் புகுந்த இந்தியப் படையினர் செய்த அட்டூழியங்கள் பல. கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவு எனப் பட்டியல் நீளமானது.

இந்தியப் படை வந்த போது அவர்களுடன் செம்மறி ஆடுகளும் படையினரின் சாப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. வந்த செம்மறி ஆடுகளின் தோலில் ஒட்டியிருந்த "பாதீனம்" வடக்கு கிழக்கில் விதைக்கப்பட்டன. இது மனிதருக்கும் கால் நடைகளுக்கும் நச்சுத் தன்மையை ஏற்படுத்தும் ஒரு நச்சுச் செடியாகும். இதன்பரவல் மிக வேகமானதாகும்.

இந்தப் "பாதீனம்" இன்று வட-கிழக்கில் குறிப்பாக விவசாயிகளுக்கு ஒரு பரம எதிரியாக விளங்குகிறது. இந்தப் "பாதீனம்" என்ற நச்சுப் பூண்டை அழிப்பது எப்படியென்று விவசாயத் திணைக்களம் தனது மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறது. ஏனெனில் அழிக்க அழிக்க மீண்டும் மீண்டும் பரந்தளவில் வளர்ந்து கொண்டே செல்கிறது.

விவசாயத் திணைக்கள அதிகாரிகளின் கூற்றுப்படி இந்த பூண்டின் விதையானது இருபது வருடங்களானாலும் செயலற்றுப் போகாதாம். இந்தியப் படையினருக்கு மாலை போட்டு வரவேற்றவர்களுக்கு இது சமர்ப்பணம்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 10 மார்ச் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 56

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757

## சமாதானத்திற்கான விலையை யார் கொடுப்பது?

இலங்கை மக்களின் அடிப்படை உணவுப் பொருட்களான அரிசி, மா என்பவற்றின் விலை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. எரிபொருட்களின் விலையும் அடிக்கடி கூட்டப்படுகின்றது. அவற்றுக்கு ஏற்ப மக்களின் வருமானம் கூடுவதற்கு வாய்ப்பில்லை. அரசாங்க, தனியார் ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படுவதுமில்லை. மிச்ச சொச்சமிருந்த அரசாங்க கூட்டுத்தாபனங்கள், தொழிற்துறைகள், பல்தேசிய கம்பெனிகளுக்கு விற்று தீர்க்கப்படுகின்றன. பல்தேசிய கம்பெனிகளில் வேலை செய்வோரின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது. அதனால் அரசாங்கத் துறைகளில் மட்டுமன்றி தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு குறைவடைந்துள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். உள்ளூர் உணவு, உப உணவு உற்பத்திகளுக்கும் விலை கிடைப்பதில்லை.

தொழிலாளர்களை சேவையிலிருந்து கண்டபடி நீக்க முடியாதபடியும், அவர்களின் உடல், உள பாதிப்புகள் ஏற்படாத வகையிலும் இதுவரையும் இருந்த தொழிற்சட்டங்களுக்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் தொழிலாளர்களை கண்டபடி வேலை நீக்கம் செய்யும், அவர்களின் உடலுக்கும் உளத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க கம்பெனிகளுக்கும் தொழில்தருனர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் அதிக நேரம் வேலை செய்ய தொழிலாளர்களை நிர்ப்பந்திக்கும், பெண்களை இரவு நேரத்தில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கும் வகையில் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது. தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கும் உரிமையை தாராளப்படுத்தும் வகையில் கைத்தொழிற் பிணக்கு சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது. கடைகளிலும், காரியாலயங்களிலும்பெண்களை இரவு நேரத்தில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கும், ஊழியர்களை அதிக நேரம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கும் வகையிலும் கடைகள், காரியாலயங்கள் ஊழியர் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தாராள பொருளாதார நடவடிக்கையாலும் மேற்படி மாற்றங்களாலும் தொழிற்சங்க இயக்கம் செயலிழந்துள்ளது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் அடக்கு முறைகளை விதிக்கும் சட்டங்களைக் கொண்டு வருவதை தடுக்குமளவிற்கு தற்போது நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க இயக்கம் பலமாக இல்லை.

ஐ.தே.மு. அரசாங்கம் மிக வேகமாக மேற்கொண்டு வரும் மேற்படி நடவடிக்கைகள் அது முன்னெடுத்து வரும் சமாதான நடவடிக்கைகளால் மூடி மறைக்கப்படுகின்றன. யுத்த நடவடிக்கைகளினால் மூடி மறைக்கப்பட்டு மக்கள் மீது பொருளாதார சுமைகளை சுமத்தப்பட்டது போன்று, மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது போன்று சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கும் காலத்திலும் மக்கள் மீது என்றுமில்லாதவாறு பொருளாதார சுமைகள் கூடியுள்ளன.

யுத்தமில்லாத அமைதியான சூழ்நிலை நிலவுவதற்கு நிபந்தனையாக முழு மக்கள் மீதும் பொருளாதார சுமைகளும் அடக்குமுறைகளும் சுமத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவை நிபந்தனையாகவும் இருக்க முடியாது.

மேலும் அரசாங்க ஓய்வூதியத் திணைக்களத்தில் பெருந்தொகைப் பணம் கையளிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்து ஒரு சில மாதங்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. ஓய்வூதியம் ஒன்றையே நம்பி அரசாங்க சேவையில் ஈடுபட்டோர் அதிகம். அந்நிலை மாற்றப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள பொதுமக்கள் பணத்தை அரசாங்கம் அதன் திட்டங்களுக்கு பயன்படுத்திவிட்டு திருப்பிச் செலுத்த முடியாதிருக்கிறது.

உழைக்கும் மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டுவதற்கு ஆதரவாக நடந்து கொள்வது மட்டுமன்றி, உழைக்கும் மக்களுக்கென்றிருந்த உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்படுவதற்கும் அரசாங்கம் துணை போகிறது. ஐ.தே.கட்சி ஆட்சியிலிருக்கும் போது தொழிலாளர்களின் உரிமைகள் திட்டமிட்ட ரீதியில் பறிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் வழமையானதாகும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதாக கூறிக்கொண்டு இம்முறை ஐ.தே.கட்சி தலைமையிலான ஐ.தே.மு. அரசாங்கம் மிகவும் வசதியாகவும் இலேசாகவும் உழைக்கும் மக்களின் உரிமைகளை பறிப்பதுடன் நாட்டு மக்கள் மீது பொருளாதார சுமைகளை சுமத்தி வருகிறது.

வேகமும் உறுதியும் குறைவாக இருந்த போதும் ஐ.தே.மு. அரசாங்கம் இதுவரை எடுத்துவரும் சமாதான நடவடிக்கைகள் வரவேற்கப்படக் கூடியன. அந்நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக முதலாளித்துவ நாடுகளினதும், உலக வங்கி உட்பட பல சர்வதேச நிறுவனங்களினதும் நிதியுதவிகளை பெற்றுக் கொள்வதற்காக அவைகள் கூறுகின்றவாறு ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க எமது நாட்டு மக்களின் மீது பொருளாதார சுமைகளை சுமத்துவதிலும், உழைக்கும் மக்களின் உரிமைகளை பறிப்பதிலும், மறுப்பதிலும் அவர்களின் நலன்புரித் திட்டங்களை நீக்குவதிலும் ஐ.தே.மு. அக்கறையாக செயற்பட்டு வருகிறது. இதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

20 வருடங்கள் யுத்தம் நடைபெற்றதற்கு இந்த நாட்டை தொடர்ந்து ஆண்டு வந்த இரண்டு கட்சிகளுமே காரணமாகும். அவர்களின் கொள்கையாலும் நடைமுறையாலும் நாட்டில் ஏற்பட்ட அழிவுக்கு அவர்களே பதில் சொல்ல வேண்டும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான விலையை அவர்களே கொடுக்க வேண்டும். இந்நாட்டு உழைக்கும் மக்களும், சாதாரண மக்களும் அவர்களின் உரிமைகளை சமாதானத்திற்கான விலையாக விட்டுக் கொடுக்க முடியாது.

சமாதான முயற்சிகளை ஆதரிக்கும் அதேவேளை சாதாரண மக்கள் மீது பொருளாதார சுமைகள் சுமத்தப்படுவதற்கும், உழைக்கும் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கும் எதிராக அரசியல் ரீதியான நடவடிக்கைகள் இல்லாமலிருப்பது பலவீனமானதாகும். சமாதான முயற்சிகளை எதிர்ப்பவர்களே மேற்படி வேண்டப்படுகின்ற அரசியல் நடவடிக்கைகளையும் உள்வாங்க முயற்சிப்பதால் ஐ.தே.மு. அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியாமல் இருக்கிறது.

சமாதான முயற்சிகளை எதிர்த்துக் கொண்டு வழமையான ஐ.தே.கட்சி எதிர்ப்பு முன்னணியை கட்டுவதற்கு சுதந்திரக்கட்சி தலைமை நினைப்பது தவறு. அத்துடன் ஐ.தே.கட்சியின் தாராள பொருளாதார கொள்கைக்கு எவ்வித மாற்றுமில்லாது ஐ.தே.கட்சியை எதிர்ப்பதாகவும், அவ்வெதிர்ப்பில் இனவாத அடிப்படையைக் கொண்ட ஜே.வி.பி.யை பிரதானமாக இணைத்துக் கொள்வதாகவும் சுதந்திரக்கட்சி கூறுகின்றது. இது அர்த்தமற்ற நிலைப்பாடாகும்.

சமாதான முயற்சிகள் அர்த்தமுள்ளதாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் சாதாரண மக்கள் மீது பொருளாதார சுமையை சுமத்துவதையும் உழைக்கும் மக்களின் உரிமைகள் பறிப்பதை கைவிடும்படி வலியுறுத்தியும் சமகாலத்தில் மக்கள் இயக்கங்களும், அரசியல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் மூலமே உண்மையான சமாதானத்தை அடையவும் முடியும். ஐ.தே.மு. அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும் முடியும்.

- ஆசிரியர் குழு -

# அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியும் பேச்சுவார்த்தையின் எதிர்காலமும்

இலங்கையின் சமகால அரசியல் நிகழ்வுகளை உற்று நோக்குவோருக்கு பல உண்மைகள் புலப்படவே செய்யும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை பேரினவாத ஒடுக்குமுறையாக வளர்த்தெடுப்பதற்கும் அதனை யுத்தமாக்கிக் கொள்வதற்கும் அந்நிய அயல் ஆதிக்க சக்திகளான அமெரிக்காவும் இந்தியாவும் எவ்வாறு மறைவாகவும் நேரடியாகவும் செயல்பட்டு வந்தன என்பது இன்றைய போக்குகளின் மூலம் தெளிவாகக் காண முடிகின்றது.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் அமெரிக்காவும் இந்தியாவில் இலங்கையில் தத்தமது ஆதிக்கப் பிடியை பொருளாதார, அரசியல், பண்பாட்டுத தளங்களில் மட்டுமன்றி ராணுவ ரீதியிலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளையே பின்பற்றி



வந்தன. தங்களுக்கு விசுவாசமான ஆளும் தரப்பு கட்சிகளையும் எதிர்க் கட்சிகளையும் அவற்றின் வர்க்க. இன. மத அடிப்படைகள் அறிந்து பயன்படுத்தி வந்தன. அரசியல் கட்சிகளை மட்டுமன்றி ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர் இயக்கங்களையும் ஊக்குவித்து வளர்த்து பாதுகாத்தும் வந்தன. அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொண்ட போதிலும் அமெரிக்க இந்திய ஆதிக்க சக்திகளின் நலன்களுக்காகச் செயல்படுபவர்களாகவே தம்மை தகவமைத்துக் கொண்டனர். இந்திய ரூபாய்க் கட்டுகளிலும் அமெரிக்க டொலர் தாள்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உண்டு களித்து "விடுதலைப் போராட்டம்" நடாத்திக் கொண்ட கறை படிந்த வரலாற்றுப் பக்கங்களை எத்தகைய உரத்த தேசியவாத முழக்கங்களாலும் நீண்ட காலத்திற்கு மறைத்து விட முடியாது. ஆனால் இங்கே துரோகம் நிறைந்த சோகம் என்னவெனில் பல்லாயிரக் கணக்கான இளம் தளிர்கள் விடுதலை என நம்பிச் சென்று பலியாகிக் கொண்டமைதான். பேரினவாதத்தை முன் தள்ளி அதன் மறைவிலே தத்தமது ஆதிக்க உள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்நாட்டின் பெறுமதி மிக்க மனித உயிர்களும் சொத்துக்களும் தமிழ், முஸ்லீம், சிங்களம் என்ற பெயர்களில் அழித்தொழிக்கப்பட்டு இவ் அமெரிக்க-இந்திய ஆளும் வர்க்கங்கள் வழி வகுத்து நின்றனர். ஒரு இளம் தலைமுறை இலங்கையில் அழிந்தொழிந்து போவது தூரநோக்கில் ஆதிக்க சக்திகளுக்கு அவசியமானதேயாகும்.

இலங்கை தென்னாசியப் பிராந்தியத்தில் தனக்கு அருகே உள்ள ஒரு சிறிய தீவு என்றும் அதன் தலைவிதியைத் தானே தீர்மானித்து தமது ஆதிக்கத்தின் கீழ் என்றென்றும் வைத்திருக்க வேண்டும் என்பதே இந்திய மேலாதிக்க இந்துத்துவக் கொள்கை வகுக்கும் உயர் வர்க்க சக்திகளின் நிலைப்பாடாகும். தமது பொருளாதார, வர்த்தக நலன்கள் நிலைபெற்று சீரும் சிறப்புடன் செயல்பட வேண்டும். தென்னாசியாவில் மட்டுமன்றி முழு ஆசியாவிலும் தமது வல்லரசு ஆதிக்கத்தை விஸ்தரித்து நாடுகளைத் தமது அகன்ற பாரதப் பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதும் இந்தியாவின் மேலாதிக்கத் திட்டமாகும். அதற்கு இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூகோள அமைவிடமாகவும் இருந்து வருகின்றது.

இதனாலேயே முன்பு இலங்கை இனப்பிரச்சினையைத் தனது கரங்களில் எடுத்து தமிழர்களையும் சிங்களவர்களையும் தலையில் குட்டி இருத்திக் கொள்ள முயன்றது. ஆனால் இந்தியா விரும்பியபடி விடயங்கள் நடந்தேறவில்லை. எவ்வளவோ விலை கொடுத்து தற்காலிகமாக ஒதுங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழி அதற்கு இருக்கவில்லை. இருப்பினும் இலங்கையை விட்டு முற்றாகத் தன்னை அந்நியப்படுத்தி அகன்று விடவில்லை.

இவ்வாறு இந்தியா-இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட்டு நின்றபோது அமெரிக்கா அதனைக் குழப்புவதற்கும் இந்தியப் படைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு திரை மறைவு உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து நின்றது. இந்தியா இலங்கையில் இருந்து அகன்று செல்ல வேண்டுமென விரும்பி அதற்கான சகல வழிகளிலும் செயலாற்றிய அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு ஆயுதங்களையும் வழங்கி வழிகாட்டியது.

இன்று நிலைமை மறுதலையாக மாறியிருக்கிறது. சமாதானத்தின் மூலம் யுத்தம் என்ற சந்திரிகா-ரத்வத்தை-கதிர்காமர் முன்னெடுத்த யுத்தக் கொள்கையை முன் தள்ளி ஒரே கல்லில் அமெரிக்கா இரண்டு மாங்காய்களை வீழ்த்தியது. ஒன்று பொதுசன முன்னணி ஆட்சியையும் சந்திரிகாவையும் செல்வாக்கிழக்கச் செய்து கொண்ட அதேவேளை தமது நெஞ்சுக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சியையும் ரணிலையும் பதவிக்குக் கொண்டு வரவும் முடிந்தது. அத்துடன் இப்பொழுது நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையின் பின்னால் வந்து நின்று கொண்டு விரல் காட்டி நிற்கவும் செய்கிறது. அரசாங்கத்தையும் புலிகளையும் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து இருப்பதற்கு அமெரிக்கா தனது ஆகக் கூடிய செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. ஒரு புறத்தால் மிரட்டலும் மறு புறத்தால் டொலர் கட்டுகளையும் காட்டி நிற்கிறது. அண்மையில் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆற்றிய வாஷிங்டன் உரையில் இவை இரண்டையும் காணலாம்.

**வெகுஜனன்**

அதேவேளை இந்தியா மறுமுனைக்குச் சென்று நிற்கிறது. இலங்கையில் அமெரிக்காவின் கரங்கள் ஓங்குவதைத் தடுக்க வேறு வழியின்றி இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையைக் குழப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. டில்லிக்கு காவடி எடுத்துச் செல்லும் பொதுசன முன்னணித் தலைவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளித்து அபயக்கரம் காட்டி நிற்கிறார்கள் இந்தியத் தலைவர்கள். அது மட்டுமன்றி வீதியில் இறங்கி நின்று பிரிவினை, புலி-ரணில் கூட்டு எனச் சத்தமிடும் ஜே.வி.பி.க்குத் தட்டிக் கொடுத்து பணக் கட்டுக்களையும் வாரி வழங்கி வருகிறது இந்தியா. முன்னாள் தமிழ் இயக்கங்கள் சகல வழிகளிலும் வலிமை இழந்து பாராளுமன்றத்தில் மட்டும் இருப்பதால் அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்க முடியாது இந்தியா நெளிகிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் உரியவர்களின் கைகளில் ஆயுதங்களைக் கொடுக்கவும் தயாராகவே அது இருந்து வருகின்றது.

இவ்வாறு முன்பு இந்தியாவும் இப்போது அமெரிக்காவும் இலங்கை இனப் பிரச்சினையில் புகுந்து ஒருமுறை தீர்வுக்கு ஆதரவாகவும் மறுமுறை தீர்வுக்கு எதிராகவும் மாறி மாறி நிற்பதன் உட்கிடைதான் என்ன? நமது நாட்டின் ஆளும் வர்க்க உயர் மேட்டுக்குடி அரசியல் தலைமைகள் சிங்கள. தமிழ், முஸ்லீம், மலையகமாக இருந்த போதிலும் அவர்கள் அனைவரும் இந்திய பிராந்திய மேலாதிக்கத்திற்கும் அமெரிக்க உலக மேலாதிக்கத்திற்கும் அடிபணிந்து செல்லும் அடிமை விசுவாசிகளே அன்றி இவர்கள் மக்களுக்கு உண்மை உரைக்காது அந்நிய விசுவாசத்திற்கு தங்களை அடகு வைத்த துரோகத் தனத்தையே புரிந்து வருகிறார்கள். முன்பும் செய்து நாட்டையும் அனைத்து மக்களையும் நாசங்களுக்குள் இட்டு வந்தனர். இன்றும் அதனையே தொடர்கின்றனர். இது யுத்தத்தின் பெயராலும் சமாதானத்தின் பெயராலும் நடைபெறுகின்றன.

இன்று சமாதானத்தின் பெயரால்



அமெரிக்கா தனது பொருளாதார நலன்களை இலங்கையில் விரிவுபடுத்தி வருகின்றது. அதற்கேற்ற வகையில் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படுவதை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் மூலம் உறுதிப்படுத்தி வருகின்றது. தாராள மயம், தனியார் மயம் அதன் தாரக மந்திரங்களாக இருக்கின்றன. அவை மட்டுமன்றி ராணுவ ரீதியில் இலங்கையில் தனது ஆதிக்கப்பிடியை வலுப்படுத்தியும் வருகின்றது. அவற்றுடன் அரசியல் கருத்துக்களில் நவதாராளவாதத்தைப் பரப்பி வருகின்றது. அத்துடன் பண்பாட்டுச் சீரழிவைக் கருத்தாலும் செயலாலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஒட்டு மொத்தத்தில் அமெரிக்க ஆதிக்க விஸ்தரிப்பு சமாதான சூழலுக்கு ஊடாக விரிவடைந்து வருகின்றது.

இதனைப் பார்த்துக் கொண்டு வாளாதிருக்க இந்திய பிராந்திய மேலாதிக்கத்தால் முடியவில்லை. தனது பொருளாதார வர்த்தக நலன்களை மட்டுமன்றி ராணுவ மேலாதிக்கத்தையும் திணித்து நிலைப்படுத்த முன் நிற்கிறது. ரணில் தலைமையிலான யூஎன்.பி. ஆட்சி தனது அமெரிக்க மேற்குலக விசுவாசத்தை பகிரங்கமாகவே செயலில் காண்பித்து வருகின்றது. அதேவேளை இந்தியாவைக் கோபப்படுத்தாது அவ்வப்போது தாஜா செய்தும் கொள்கிறது. இந்தியாவை மீறிச் செயல்படவில்லை என்ற பணிவான போக்கினை எடுத்துக் கூறியும் வருகின்றது. அத்தகைய நிலையை தனது பிடிக்குரிய இடமாக வைத்து இந்தியா இலங்கைக்குள் வர்த்தக முன்னுரிமையினையும் பொருளாதார ஊடுருவல்களையும் செய்து வருகின்றது. திருகோணமலை எண்ணெய்க் குதங்களையும் பெற்றோலிய விற்பனைக்கான நூறு நிலையங்களையும் பெற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் இந்தியப் பெரும் முதலாளிகளும் கம்பனிகளும் வந்த வண்ணமே உள்ளனர். இந்தியப் படைத் தளபதிகளின் வருகையும் பேச்சுவார்த்தைகளும் தற்செயலானவைகளோ வெறும் சம்பிரதாய பூர்வமானவைகளோ அல்ல.

இவ்வாறு இலங்கையில் இந்திய அமெரிக்க ஆதிக்கப் போட்டி என்றுமில்லாதவாறு முன்னெழுந்து

படிப்பகம்

www.padippakam.com

# சுயநிர்ணயம்

## அகமும் புறமும் அக நோக்கங்களும்

கொஞ்சக் காலமாக உள்ளக சுயநிர்ணயம் என்ற ஒரு கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டு வருகிறது. இதன்படி, அந்நிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஒரு நாடு, அதாவது முன்னைய கொலனிய யுகத்தில் இருந்தது போல அல்ல ரஷ்யப் பேரரசின் கீழ் நாடுகள் வெளியாரால் ஆளப்பட்டது போல ஆளப்படும் தேசங்கட்குரியது புறச் சுயநிர்ணயம் என்றும் ஒரு நாட்டுக்குள் பல தேசங்களோ தேசிய இனப்பிரிவுகட்கோ உரியது அகச் சுயநிர்ணயம் என்றும் பிரித்துப் பேசப்படுகிறது. இதன் உண்மையான நோக்கத்தைப் பார்ப்போம்.

இன்று உலகில் கொலனிகள் இல்லை எனலாம். பிரித்தானியாவால் ஆக்கிரமிக்கப்பட்ட மல்வினாஸ் (ஃபோக்லண்ட்ஸ் தீவுகள்), ஜிப்ரால்ற்றர் போன்ற பிரதேசங்களும் அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள புவெர்ட்டோ றிக்கோ மற்றும் உலகின் பல பகுதிகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் பிரான்சினதும் அவுஸ்திரேலியாவினதும் ஆதிக்கத்திலுள்ள பசிபிக் சமுத்திரத் தீவுகள் என்பவை தேசிய விடுதலைக்காக எழுச்சி கொள்ளாத காரணங்கள் அவற்றின் பொருளாதாரமும் அயல் ஆதிக்கத்தின் வலிமையுமே. எனினும் இவை பற்றி நமது புறச் சுயநிர்ணயக் காரர்கள் கண்டு கொள்வதில்லை.

அடிப்படையில் வேறுபாடே இல்லை. ஏனெனில் சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் திரளின் ஒட்டுமொத்தமான அடையாளஞ் சார்ந்த விடயம். அது அவர்களது இருப்புத் தொடர்பான ஒரு தீர்மானம். சுருங்கச் சொன்னால், சுயநிர்ணயம் என்பது பிரிக்க முடியாதது. அகம், புறம் என்பது சுயநிர்ணயத்தைப் பொருளற்றதாக்கும் ஒரு கேவலமான சதி முயற்சியே ஒழிய வேறெதுவுமல்ல.

அகச் சுயநிர்ணயம் என்று வரும்போது, ஒரு தேசத்தால் தனது சுயாட்சி அதிகாரம் பற்றிப் பேரம் பேச முடியுமே ஒழியத் தன் இருப்பைச் சுயாதீனமாகத் தீர்மானிக்க இயலாது. இதுதான்

மீளத்தரப்படக் கூடாது. சுயவிருப்பில் ஒன்றாக இணைந்த பாக்கிஸ்தானின் கிழக்குப் பகுதி பிரிந்து வங்காள தேசமாகியது சரி என்பவர்கள் ஏன் இந்த வாய்ப்பாட்டை அயல் மண்ணில் ஆயுதப்படைகளை நிறுவியுள்ள வல்லரசுகட்குப் பாவிக்கக் கூடாது?

இன்று, இப் புறச் சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டை விடுதலை வேண்டி நிற்கிற ஒவ்வொரு தேசத்துக்கும் தேசிய இனத்துக்கும் மறுக்கக் கூடிய விதமாகத் தேச அரசுகள் வரையறுக்கப்பட்டு விட்டன. பழைய நேரடிக் கொலனிய முறையின் இடத்தில்

ளாக இருப்பதையும் அதேவேளை தாங்கள் ஒடுக்கப்பட்ட தேசங்களின் நண்பர்களாக நடிப்பதையும் வேண்டிய தால் இவர்கள் வரையறைக்குட்பட்ட இறைமை, வரையறைக்குட்பட்ட சுயநிர்ணயம் ஆகிய கோட்பாடுகளைப் புகுத்தினர்.

இவர்களது வஞ்சக நோக்கத்தைத் தெட்டத் தெளிவாக அறிந்த லெனின் திட்டவட்டமாகவே "சுயநிர்ணயம் என்பது பிரிந்து போவதற்கான உரிமையே அன்றி வேறல்ல" என்று மறுத்துரைத்தார். இந்தக் கூற்றைக் குழப்பமாக விளங்கிக் கொண்ட சிலர் "சுயநிர்ணயம் என்றால் பிரிந்து போவது மட்டுமே" என்று முழங்கி வந்தது சிறுபிள்ளைத்தனம். பிரிந்து போகும் உரிமையை லெனின் வற்புறுத்தியது பிரிவினையைத் தூண்டி விடுவதாக அல்ல. ஒடுக்கப்பட்ட ஒரு தேசத்துக்கு ஒடுக்குமுறை நீக்கப்பட்ட சூழலில் சுயவிருப்பின் பேரில் இணைந்து வாழுகிற வாய்ப்பாகவே அவர் சுயநிர்ணயத்தைக் கருதினார்.

லெனின் முன்வைத்த சுயநிர்ணயக் கோட்பாடே, ஒரு தேசத்துக்குத் தன் தலைவிதியை நிர்ணயிக்கும் முழு உரிமை உண்டு என்பதை அறஞ்சார்ந்த, அரசியலடிப்படையிலான ஒரு உரிமையின் முதலாவது முன்மொழிவு. லெனினை விடத் தெளிவாக எவருமே அவருக்குப் பின்னர் வரையறுக்கத் தேவையின்றித் தேசம் ஒன்றன் சுயநிர்ணயம் என்பது பிரிந்து போவதற்கான உரிமையே என்று சொன்னார். இதனாலேயே இன்று அரைச் சுயநிர்ணயமும் குறைச் சுயநிர்ணயமும் அகச் சுயநிர்ணயமும் பற்றிப் பேசுகிறவர்கள் லெனினே. சுயநிர்ணயக் கோட்பாட்டை முதன் முதலாக ஒரு அரசியற் கோட்பாடா

பற்றியும் ஸ்தாலின் எச்சரித்திருப்பதையும் சிலர் வேண்டுமென்றே புறக்கணிப்பதையும் நாம் காணலாம்.

எனவே ஒரு விடயம் தெளிவாகிறது. தேச அரசு முதலாளியத்தின் தோற்றத்தை ஒட்டி உருவான போதும் தேசம் என்றால் என்ன அதன் அரசியல் அந்தஸ்து என்ன என்ற கேள்விகள் தேசங்கள் ஒன்றையொன்று அடிமை கொண்டு அடிமையாக்கப்பட்ட


சுயநிர்ணய உரிமையை வகுத்தளித்த தோழர் லெனின்

தேசம் தனது விடுதலைக்காக கிளர்ந்தெழும் வரை எழவில்லை. அப்படியான எழுச்சி ஏற்பட்டபோது மாக்ஸியர்களே அதற்கான கொள்கை அடிப்படையிலான ஆதரவை வழங்கினர். இந்த ஆதரவு தேசம் என்பது வரலாற்றில் மாறாத ஒரு புனிதப் பொருள் என்ற நோக்கிலல்லாது, வர்க்க சமுதாயம், சுரண்டல், வர்க்க ஒடுக்குமுறை, மனித விடுதலை என்ற கேள்விகள் சார்பான நடைமுறையை யொட்டியே விருத்தி பெற்றன. ஐரோப்பாவில் பேரரசுகளின் ஆதிக்கத்தை முன்வைத்துப் பெறப்பட்ட ஒரு நடைமுறை அனுபவமே லெனினால் சுயநிர்ணயம் என்ற முழுமையான தேச விடுதலைக் கோட்பாடாக விரிவு பெற்றது. அதுவே ஸ்தாலினின் காலத்தில் கொலனிகளின் விடுதலைக்கு சோவியத் யூனியனின் நிபந்தனையற்ற ஆதரவாகப் பரிணமித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் சில பிரித்தானிய கொலனிகளின் விடுதலையை இரண்டாம் உலகப்போரின் பின்பு

சுயநிர்ணயம் என்றால் அதற்கும் லெனின் கண்டிப்பாக நிராகரித்த வரையறுக்கப்பட்ட சுயநிர்ணயத்துக்கும் வேறுபாடு என்ன? எவரும் தம் நோக்கங்களைக் குறிக்கும் சொற்களை மாற்றலாம். ஆனால் அவர்களது நோக்கங்கள் மாறிவிடாது . பருந்தைப் புறா என்று அழைப்பதால், பருந்து வேறு பறவையாகிவிடாது. அது போலவே சுயநிர்ணய மறுப்பை அகச் சுயநிர்ணயம் என்பதால் அது எவ்விதமான சுயநிர்ணயமுமாகி விடாது.

மறுபுறம், பிரிந்து செல்ல இயலாத நிலையில் உள்ள தேசிய இனங்களின் இருப்புப் பற்றி இந்த அகச் சுயநிர்ணயக் காரர்கள் ஏன் பேசத் தயங்குகிறார்கள்? தேசியங்களுக்கும் தேசங்களாக விருத்தி பெறும் தேசிய இனங்களுக்கும் இயலுமான பிரிந்து போகும் வசதி எல்லாச் சிறுபான்மைத் தேசிய இனங்கட்குமில்லை. இவ்வாறான இடங்களிற் சுயநிர்ணயத்தின் பிரயோகம் தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் சாராம்சத்தை ஏற்று, ஒடுக்கப்பட்ட



அதைவிட, அலாஸ்கா, ஹவாயத்தீவுகள் போன்ற பகுதிகள் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்காவால் விழுங்கப்பட்டு அமெரிக்காவின் ஒரு பகுதியாக்கப்பட்டு விட்டன. இது போலவே காஷ்மீரிலும் சிக்கிமிலும் இந்திய மேலாதிக்கம் நடந்து கொண்டுள்ளது.

இந்தக் கண்ணோட்டத்திற் பார்த்தால் புறச் சுயநிர்ணயம் என்ற பிரச்சனை இன்று இல்லவே இல்லை எனலாம். வரலாற்றின் சில ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றால் 1947ல் இந்தோனேசியா தனதாக்கிக் கொண்ட கிழக்கு திமோருக்கு புறச் சுயநிர்ணய உரிமை இருந்திருக்க முடியாது. வேண்டுமானால், அங்கு கால் நூற்றாண்டுக் காலமாக, மட்டுமே இந்தோனேசிய ஆக்கிரமிப்பு இருந்தது என்று நியாயப்படுத்தலாம். போர்த்துக்கல், பிரான்ஸ் ஆகிய கொலனி ஆதிக்க நாடுகள் தமது கொலனிகளை எல்லாம் தமது கடல்கடந்த மாகாணங்கள் என்றும் அங்குள்ள மக்கள் தமது பிரசைகள் என்றும் கூறி வந்துள்ளன. அங்கெல்லாம் பயன்படுவது, அகச் சுயநிர்ணயமா, அல்லாமல் புறச் சுயநிர்ணயமா?

கடல்கடந்த பிரதேசங்களுக்கு உரிமை கொண்டாடுவது கொலனிய முறை என்றால், அமெரிக்காவிடமிருந்து ஹவாயும், அலஸ்காவும் ஏன் பிரித்தெடுக்கப்பட்டுச் சுதேசிய மக்களிடம்

நவகொலனிய முறை வந்துவிட்டது. எனவே புறச் சுயநிர்ணயம் என்று சொல்லப்படுவது எவரும் கோர முடியாத ஒரு உரிமையாகி விடுகிறது. இதையேதான் புறச் சுயநிர்ணயக் கோட்பாட்டுக்காரர் வேண்டுகின்றனர்.

புறச் சுயநிர்ணயம் பிரிந்து போகும் உரிமையை உள்ளடக்குகிறது, அகச்

**சுயநிர்ணயத்திற்கு ஒரே ஒரு முகம் மட்டுமே உண்டு.**
**அமெரிக்காவின் சுயநிர்ணயத்திற்கு இரண்டு முகங்கள்.**

சுயநிர்ணயம் உள்ளடக்கவில்லை என்பதன் பொருள் என்ன? யாருக்குமே புறச் சுயநிர்ணயம் பொருந்தி வராது என்றால், சுயநிர்ணயம் என்பது அகச் சுயநிர்ணயம் மட்டுமே என்று ஆகி விடும். எனவே சுயநிர்ணயம் என்றால் பிரிந்து போகிற உரிமை இல்லாத சுயாட்சிக்கான உரிமை என்று ஆகிவிடும்.

இது பச்சையான ஏமாற்று. இதை நாம் வரலாற்றில் சந்திப்பது இதுதான் முதற் தடவையல்ல. லெனினின் காலத்திலும் சமூக சனநாயகவாதிகள் எனப்பட்டோர் தமது நாடுகளால் அடக்கி ஆளப்பட்ட நாடுகளின் சுயநிர்ணயத்தை ஏற்கத் தயங்கினர். தமது நாடுகள் பேரரசுக

கவும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வாகவும் முன்வைத்தார் என்பதை மறுக்கவும் மழுப்பவும் முயல்கின்றனர்.

தேசம் என்றால் என்ன என்ற வரைவிலக்கணம் ஸ்தாலினால் முன்வைக்கப்பட்டது. லெனினின் தேசிய சுயநிர்ணயப் பிரச்சினையின் அடிப்படையிலேயே நின்று நிலைக்கக் கூடிய ஒரு தேச அரசுக்குரிய அத்தியாவசியமான பண்புகள் எவை என்பதை ஆராயும் எவரும் தேசம் என்பதற்கு ஸ்தாலின் முன்வைத்த வரைவிலக்கணத்துடன் உடன்படுவர். ஸ்தாலினின் வரைவிலக் கணத்தை மூர்க்கத்தனமாகவும் விறைப்பாகவும் பயன்படுத்துவது

ஆதரித்தது உண்மை. ஆனால் வூட்றோவில்சனால் முன்வைக்கப்பட்ட சுயநிர்ணயத்துக்கு இரண்டு முகங்கள். அமெரிக்காவுக்கு உபயோகமாக இருந்தால் தேசங்களுக்குப் பிரிந்து போகும் உரிமை. ஏனென்றால் பழைய கொலனி எசமானின் இடத்தில் அமெரிக்கா போய் அமரலாம். அதேவேளை, அமெரிக்காவால் அடக்கி ஆளப்படும் மக்களுக்கு எதுவிதமான சுயநிர்ணயமும் இல்லை. இது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் கால வரலாறு.

சுயநிர்ணயத்தை வரையறுக்கப்பட்ட சுயநிர்ணயமாக்கிய முயற்சிக்கும் அகம் புறமென்று பிரிக்கிற முயற்சிக்கும்

தேசிய இனங்களது முழுமையான சுயாட்சிக்கு வழி செய்ய வேண்டும்.

அகம், புறம் என்ற பகுப்பு பிரிந்து போகும் உரிமையை மறுப்பது. தமிழில் இக் கோட்பாடு முன்வைக்கப்படு முன்னமே, ஜே.வி.பி. தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கொள்கையை மறுக்க, சுயநிர்ணயம் என்பது கொலனி ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகட்கே செல்லுபடியாகும் என்று பிரகடனம் செய்துவிட்டது. உண்மையில் ஜே.வி.பி.யின் இனவாதம் இந்த அகச் சுயநிர்ணயக் கொள்கையை விட வெளி வெளியானதும் நேர்மையானதும் எனலாம்.

**நமது விஷேட நிருபர்**

# யாழ் - பொது நூலகத் திறப்பு விழா தடுத்து நிறுத்தப்பட்டது ஏன்?

யாழ்ப்பாண பொது நூலகம் 1981ன் ஜே.ஆர். தலைமையிலான யூஎன்.பி. ஆட்சிக் காலத்தில் பேரினவாத வெறியர்களால் 96,000 ஆயிரம் நூல்களுடன் எரியூட்டப்பட்டது. இன்று அதனை நினைவுபடுத்த சிலர் விரும்புவதில்லை. பின்பு ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் "ஒரு செங்கல்லும் ஒரு புத்தகமும்" என்ற வாசகத்தின் கீழ் அதனைப் புனரமைக்க நிதி ஒதுக்கினார். புனரமைப்பும் இடம்பெற்று வந்தது. இந்தப் பொது நூலகப் புனரமைப்பின் மூலம் தமிழ் மக்களிடம் தான் நடாத்திய யுத்தத்தின் மத்தியிலும் செல்வாக்குப் பெறலாம் என நம்பினார். அது

முடியாதுவிடினும் நூலகப் புனரமைப்பு இடம்பெற்று பூர்த்தியாகும் கட்டத்தை அடைந்து கொண்டது.

இந்நிலையிலேயே யாழ் மாநகரசபை தனது அதிகாரத்திற்கு உட்பட்ட மேற்படி நூல் நிலையத்தை திறப்பு விழா நடத்த முன் வந்தது. ஆனால் கடந்த பதின்நான்காம் திகதி இடம்பெற இருந்த திறப்பு விழா நிறுத்தப்பட்டது. மறியல், கதவடைப்பு நடத்தப் போவதாக பொது அமைப்புகளின் ஒன்றியம், ஆசிரிய சங்கம், மாணவர் அமைப்பு என்பன போராட்டக் கொடி தூக்கி நின்றன. இனந்தெரியாதோர் நூலகக் காவலாளியைக் கட்டி வைத்து திறப்புக் கோர்வையைப் பறித்தும் சென்றனர். திறந்து வைக்க இருந்த தமிழர் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி இறுதியில் அதனைக் கைவிட்டார். தலைமை தாங்க இருந்த மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் திறப்புவிழா ரத்துச் செய்யப்பட்டதாக அறிவித்து தானும் மாநகர சபை உறுப்பினர்களும் தமது பதவிகளை ராஜினா மாச் செய்வதாகக் கூறி அவ்வாறே செய்தும் கொண்டனர்.

தமது ஜனநாயக உரிமையில் தலையிட்டு தடுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத்





தெரிவிப்பதாக அவ் ராஜினாமாக்கள் அமைந்தன. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் நூலகத் திறப்பு விழா தடுக்கப்பட்டமை பற்றிய வாதப் பிரதிவாதம் சூடாகவே நடைபெற்றது. இது ஜனநாயகமா அல்லது ஜனநாயக மறுப்பா என்பதே தொனிப் பொருளாக இருந்தது.

யாழ். பொது நூலகத் திறப்பு விழா தடுத்து நிறுத்தப்பட்டதன் தாற்பரியம் தான் என்ன? ஆதிக்கம், அரசியல், சாதியம் ஆகிய மூன்றும் இணைந்தே இதில் செயலாற்றிக் கொண்டன என்ற உண்மையை எவ்வகையிலும் மறைக்கவோ மழுப்பவோ முடியாது.

தொடர்ச்சி 11ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (11)

திரைப்படங்கள் ஒரு தகவல் ஊடகமாகச் சில வகைகளிற் பயன்பட்டிருக்கின்றன. பெரிய ஆங்கில, அமெரிக்கத் திரைப்படக் கம்பெனிகள் சில, தமது திரைப்பட விநியோகஸ்தர்கள் திரைப் படங்களின் தொடக்கத்திற்கு முன்போ இடைவேளையை அடுத்தோ காண்பிப்பதற்கான "செய்திச் சுருள்களை" இலவசமாக விநியோகித்து வந்த காலம் ஒன்று இருந்தது. சினிமா ஒரு வலுவான வெகுசன ஊடகமாக இருந்த காலத்தில் இச் செய்திச் சுருள்கள் ஒரு பயனுள்ள பங்கை யாற்றின. ஒருவார ஏடோ, மாதச் சஞ்சிகையோ செய்திகளைத் தொகுத்து வெளியிடும் முறையில் இவ்வாறான செய்திச் சுருள்களும் முக்கியமான செய்திகளைப் பற்றிய சிறு விவரணங்களாக அமைந்தன. செய்தித் தெரிவு பற்றியோ விளக்கம் பற்றியோ கம்பனிகளது பார்வை நாட்டின் முதலாளிய நிறுவனச் சார்பாக அமைந்திருந்தும் அவற்றின் பிரசார நோக்கமும் பற்றி யாரும் வியப்பதற்கில்லை.

இவற்றைவிட டொக்கியூமென்ற்றறி எனப்பட்ட ஆவணப் படங்களும் தயாரிக்கப்பட்டன. இவை, செய்தி விமர்சனச் சஞ்சிகைகள் போன்ற வற்றி

**ஒடுக்கப்பட்ட நாடுகளின் பண்பாட்டுச் சீரழிவு ஏகாதிபத்தியத்தின் அவசியத் தேவைகளில் ஒன்று**

னை ஒத்த பணியை ஆற்றின. இன்று, இவ்வாறான படங்கள், அரசாங்கத் தகவற் துறை, கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள்: வணிக நிறுவனங்கள் போன்றவற்றால் பெருமளவில் தொலைக்காட்சிக்காகத் தயாரிக்கப்படுகின்றன. டிஸ்கவரி, பி.பி.ஸி.யின் இயற்கை பற்றிய படங்கள் போன்றவை பொழுது போக்குப் பண்புடன் தகவல்களை வழங்குகின்றன. இவற்றைவிடப் பிரித்தானிய திறந்த பல்கலைக்கழகம் போன்ற பல கல்வி நிறுவனங்கள் பாட விடயங்களை வீடியோ படங்களாக விநியோகிக்கின்றன.

எனினும், சினிமா எனப்படும் திரைப் படத் துறையைப் பொறுத்த வரை, அது நம்மளவில் பொழுது போக்குக் கான ஒரு வணிக முயற்சியாகவே இருந்து வந்துள்ளது. வாசிப்பதிற் பலருக்குள்ள சோம்பல் மட்டுமன்றி நிகழ்த்தப்படும் கலைகளில் உள்ள மனித ஈடுபாடும் சினிமாவால் முற்றாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டுக்கும் முன்பு தொடங்கிய ஒலியில்லாத "ஊமைப் படங்கள்" தொட்டே சினிமாவுக்கு ஒரு வெகுசனக் கவர்ச்சி இருந்திருக்கிறது.

சினிமாவின் வலிமையை லெனின் உணர்ந்திருந்தார். சோவியத் யூனியனில் திரைப்படங்கள் கல்வி, சமூக முன்னேற்றம், சோஷலிஸ விழுமியங்கள், புரட்சி என்பவற்றை முதன்மைப் படுத்தின. இப்போக்கு பின்னர் சோஷலிஸ முறைக்கு மாறிய ஒவ்வொரு நாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இலக்கியம் பற்றிய கொள்கை சினிமாவுக்கும் செல்லுபடியாகும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அதே வேளை, சினிமாத் தயாரிப்பு அதிகளவில் மூலதனத்தை வேண்டி நிற்பது என்பதும் பெருந்தொகையானோரது நுகர்வுக்கு உகந்தது என்பதும் கவனிக்கத்தக்கவை. எனவே ஒரு சமூகத்தில் எத்தகைய சிந்தனை ஆதிக்கம் செலுத்துகிறதோ அதுவே சினிமாவின் தன்மையையும் தீர்மானித்து வந்துள்ளது.

இந்திய சினிமா தொழில்நுட்ப நோக்கில் வெகுவாக முன்னேறியுள்ள போதும் சமூக நோக்கில் அது கடந்த 40 வருடங்களில் பெரும் சரிவையே குறித்து நிற்கிறது. சமூகப் பார்வையுடனும் முற்போக்கான அரசியல் இலக்குடனும் சினிமாவில் கால் பதித்தவர்கள் அப்போது இருந்தது போல இப்போதும் சிலர் இருக்கிறார்கள் எனினும் நமது கவனத்துக்குரியது சினிமாவின் பொதுவான போக்குத் தான்.

சினிமா மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த இயலாது. ஆனால் மாற்றத்துக்கு ஆயத்தமாக உள்ள ஒரு சமூகத்தில் சினிமா மூலம் ஒரு சிறு

**தேசபக்தன்**

## சினிமா காசேதான் கடவுளடா

பங்களிப்பை வழங்க முடியும்.

இந்திய சினிமாவின் சீரழிவு, இன்று இந்திய சமுதாயத்தின் சீரழிவின் ஒரு அளவுகோலாக உள்ளது. அது மட்டுமன்றி அது இன்று ஒரு தொற்றுநோய் போல மாநில, மொழி எல்லைகளையும் இந்திய எல்லையையுங் கடந்து சீரழிவைப் பரவலாக்குகிறது. சினிமா தான் சமூகத்தைச் சீரழிக்கிறது என்பது என் வாதமல்ல. ஆனால் சமூகச் சீரழிவின் மூலம் சம்பாதிக்க விரும்புகிறவர்களுக்கு சினிமா ஒரு மிகவும் பயனுள்ள கருவியாகவே இருந்து வருகிறது.

நிர்வாணக் காட்சிகள், பாலுறவுக் காட்சிகள், பயங்கரச் சண்டை, குரூரமான வன்முறைக் காட்சிகள் என்பன மனிதரின் கீழ்த்தரமான ரசனைக்குத் தீனி போடும் முறையிலேயே திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. ஒரு காலத்தில் சட்ட விரோதமாக இரகசியமான முறையில் காண்பிக்கப்பட்ட "நீலப்படங்கள்" (ப்:.பிலிம்ஸ்) எல்லாமே அற்ப விடயங்கள் எனக் கூறக் கூடிய விதமாக இன்று ஆபாச சினிமாப் படங்கள் பகிரங்கமாக விளம்பரப்படுத்தப்பட்டுப் பிரபல திரை அரங்குகளிற் காண்பிக்கப்படுகின்றன. இப் படங்கள் இளவயதினரையே முக்கியமாகக் குறி வைக்கின்றன. இப்படங்களுக்கு மொழியோ கதையமைப்போ முக்கியமல்ல என்பது இவற்றைக் காண முண்டியடித்துக் கொண்டு நிற்கும் கூட்டத்தினரது வேறுபட்ட சமூகப் பின்னணிகளிலிருந்து தெரிய வரும்.

தமிழ்த் திரைப்படங்களில் ஒரு காலத்தில் ஆபாசமான காட்சிகட்குக் கடுந் தணிக்கை இருந்தது. வாயில் முத்தமிடுவதைத் திரையிற் காட்டத் தடை இருந்தது. ஆபாச வசனங்கட்குக் கூடத் தடை இருந்தது. இருந்தும் என்ன? நிர்வாணக் காட்சிகளை விட ஆபாசமான கட்டியணைத்தல்களும், நடனங்களும் இரட்டை அர்த்தமுள்ள பாடல்களும் கீழ்த்தரமான உணர்வுகட்குத் தீனி போடுவது கூடிக் கொண்டே வந்துள்ளது. இன்னும் நடிகையரின் அரை நிர்வாணத் தோற்றமும் மேலைநாட்டு சில வீடியோ இசை நிகழ்ச்சிகளின் ஆபாச அங்க அசைவுகள் பலவும் அப்படியே தமிழ், இந்திப் படங்களில் எடுத்தாளப்படுவதை நாம் காணுகிறோம்.

காதல் பற்றிய கற்பனைவாதக் கனவுகளிற் தொடங்கிய இந்திய சினிமா அதைப் பச்சையான காமக்களி யாட்டமாக உருமாற்றுவதில் கணிசமாக வெற்றி பெற்றுள்ளது. இது தென்னாசிய சமுதாயத்தில் நவகொலனியத்தின் கீழும் இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் விளைவுகளின் ஒரு பகுதியேயாகும். ஒடுக்கப்பட்ட நாடுகளின் பண்பாட்டுச் சீரழிவு, ஏகாதிபத்தியத்தின் அவசியமான தேவைகளில் ஒன்று.

இன்று சினிமாவின் ஆபாசக் கவர்ச்சியைப் பரவலாக்குவதற்குப் பல கீழ்த்தரமான சஞ்சிகைகளும் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வருகின்றன. வெறுமனே சினிமா தொடர்பான தகவல்கட்கும் சினிமாப் பிரபலங்கள் தொடர்பான மயக்கங்களைக் கட்டியெழுப்பும் சினிமாச் சஞ்சிகைகட்கும் மேலாக ஆபாசமான விடயங்களுக்கே முதன்மை கொடுக்கும் சஞ்சிகைளும் பாலியற் கல்வி என்ற பாசாங்கில் வரும் சஞ்சிகைகளும் இச் சமூகச் சீரழிவில் முக்கியமானதொரு பங்கை வழங்குகின்றன.

நமது செய்தி ஏடுகளும் சினிமாக் கிளுகிளுப்பைத் தவிர்த்தால் தமது விற்பனை விழுந்து விடும் என்ற நோக்கில் சினிமா அரட்டைகளையும் நடிகையரின் அரை நிர்வாணத் தோற்றங்களையும் விரசமான காட்சிகளையும் வாரந் தவறாது வெளியிட்டு வருகின்றன. இந்த ஏடுகளின் விளம்பர வருமானத்தில் மிகச் சிறிய ஒரு பகுதியைப் பெற்றுத் தரும் ஆபாச சினிமா விளம்பரங்கள் "வயது வந்தோருக்கு மட்டும்" என்ற சொற்கள் தெளிவாகவும் பெரிதாகவும் தோன்றுமாறு வருகின்றன. அறமும் ஆன்மிகமும் அறநெறிகளும் பற்றிய போதனைகள் நிறைந்துள்ள அதே ஏடுகளில் இவ்வாறான ஆபாசங்களும் ஆபாச விளம்பரங்களும் வருவது நமக்குச் சொல்வது என்ன? "காசே தான் கடவுளடா" என்ற முதலாளிய மந்திரத்தைத் தானா?

---

# யாழ்ப்பாணமும் நீர்வளமும்

## யாழ் குடா நாடு பாலைவனமாகுமா?

நிலநீர் ஆய்வாளர் க. நடனசபாபதி

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயிர்த் தொழில் மேற்கொண்டு வாழ்பவர்கள், மர, இரும்பு, பொன் தொழிலாளர் வாழ்பவர்கள், உல்லாச வாழ்வு வாழ்வோர், வசதியொன்றுமற்று இருப்போர் எல்லோரும் தொடர்ந்து வாழ்கிறார்களே. இவர்கள் வாழ நீர் பெரிதும் தேவைப்படுகிறதே!

குடாநாட்டில் ஜீவநதிகள் இல்லை. நீரைத் தன்னகத்தே கொண்ட ஆறுகளுமில்லை, குளங்களுமில்லை. தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய எதனை நம்பி வாழுகிறார்கள்.

யாழ்ப்பாண பூகற்ப அமைப்பு இந்நாட்டின் பிறபகுதிகளைக் காட்டிலும் மாறுபட்டது. சூழவுள்ள கடலின் தாக்கமே இப்பிரதேசம் உருவாக்கக் காரணமாயுள்ளது. கடலிலிருந்து கரைக்கு ஒதுங்கிய சுண்ணப் பாறைகளே அடிப்படையாக அமைந்துள்ளது. பூகற்பவியலாளர்கள் இப்பாறை அமைப்பின் காலத்தை 'மயோசின்' காலம் என்று அழைப்பர். இப்பாறைகளில் நுண்றுழைகள் ஏராளம் உண்டு. இந்நுண்றுழைகள் நீரைத்தம் முள் ஏந்தியபடி இருக்கும். யாழ்ப்பாண நிலத்தில் பெய்கின்ற மழை நீரெல்லாம் நிலத்திற்குள் கசிந்து, புகுந்து இப்பாறைகள் தம்முள் கொண்டுள்ள நுண்றுழைகளில் நிரம்பியிருக்கும்.

மழை வளியூடாகப் பெய்யும்போது தம்மகத்தே கொண்டுள்ள காபனீரொட்சைட்டுடன் தாக்கமுற்று காபோனிக் அமிலமாகின்றது. இவ்வமிலம் சுண்ணப் பாறைகளின் கல்சியம் காபனேற்றைக் கரைத்து விடுகின்றது. கரையாத கல்சியம் காபனேற் கரையும் கல்சியம் இரு காபனேற்றாக மாற்றம் அடைகிறது. சுண்ணாம்புப்பாறைகள் கரைந்து நில நீரை வன்னீர் ஆக்குகிறது.

பாறையும் கரைவுபட்டு பெரும் பள்ளங்களை உருவாக்குகிறது. நாட்டின் பல பகுதிகளிலும் இத்தகைய பள்ளங்களைக் காணலாம். புத்தூர்-நிலாவரைக்குன்று, மானிப்பாயில் இடிகுண்டுக் கிணறு, குரும்பசிட்டியில் பேய்க்கிணறு, கரவெட்டியில் அத்துளு, ஊரேழுவில் பொக்கணை, மாயக்கையில் சின்னக் கந்தன் கிணறு எனப் பலவற்றை உதாரணமாகக் கூறலாம்.

சுண்ணப்பாறைகளில் தேங்கி இருக்கும் நீர்-நிலத்திற்கு அடியிலேயே இருக்கும். நில அடி நீர் அல்லது நிலநீர் என்றே சுருக்கமாக அழைப்பர். இந்த நிலநீர் ஓர் அழகான உருவில் காணப்படும். இரு வில்லைகள் ஒன்றன் மீது ஒன்று கவிழ்க்கப்பட்டபடி ஒரு கிண்ண அமைப்பைக் கொண்டிருக்கும். இந்த உருவம் நடுவில் பெருத்தும் ஓரங்கள்

## நடுப்பகுதிகள் நன்னீரும் ஓரங்களில் உவர்நீரும் உண்டு

சிறுத்தும் காணப்படும். இதன் காரணமாகவே குடாநாட்டின் ஓரங்கள் அல்லது கரைப்பகுதிகள் மெலிந்தும், நடுப்பிரதேசங்கள் பெருத்தும் காணப்படும். நன்னீரின் அடர்த்தி உவர்நீரைக் காட்டிலும் குறைவாக இருப்பதனால் மேல்மட்டத்தில் இருக்கிறது. நாம் கிணறுகள் மூலம் இந்நில நீரை எமது தேவைகளுக்கு எடுக்கிறோம். அந்நாட்களில் நாம் கிணறுகளிலிருந்து நிரைப்பெற துலாக்களையும் கப்பிகளையும் பயன்படுத்தி வந்தோம். வசதியாக நீரைப் பெற நீர் இறைப்பு எந்திரங்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம். எந்திரங்கள் இரக்கமின்றி நீரைவெளிக் கொண்டு வந்ததனால் நன்னீர் எடுபட எடுபட உவர்நீர் வெளிவர ஆரம்பித்தது. நீரின் தன்மையே பாதிப்புக்குள்ளாகி

உவர்நீராக வெளிவர ஆரம்பித்தது. நீரின் தன்மையே பாதிப்புக்குள்ளாகி உவர்நீராக மாறத்தலைப்பட்டது. இம் மாற்றம் முதலில் தனது கொடூரத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள சிறிய தீவுகளின் மக்கள் மீது பிரயோகித்தது. இதன் விளைவாகவே பெரும்பாலான மக்கள் வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். தாங்கள் விரும்பியவர் ஒருவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பக்கூடிய ஆட்பலத்தை தற்போது கிளிநொச்சிப் பகுதிகளில் வாழும் தீவுப்பகுதிகளில் வாழ்ந்தோர் பெற்றுள்ளனர்.

இதேபோன்ற நிலை யாழ்க் குடாநாட்டு மக்களையும் காலப்போக்கில் பாதிக்கும் என நீர்வளவல்லோர் நன்கு அறிந்தனர். அவ்வப்போது தமது அச்சத்தை வெளிப்படுத்தினர்.

இதற்கிடையே 1964ம் ஆண்டு இலங்கைக்கு இஸ்ரேலிய நீரியல் நிபுணர்களை யாழ்ப்பாணத்திற்கும் அழைத்து வந்தனர். இவர்கள் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் கூடிய பத்திரிகையாளர் மாநாட்டில் "யாழ்ப்பாணம் விரைவில் ஒரு பாலைவனமாக மாறும்" இதனை அக்காலத்தில் வெளிவந்த செய்தித்தாள்கள் அனைத்திலும் காணமுடிந்தது. வாசித்த எல்லோரும் அதிர்ச்சியடைந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீரின் கையிருப்பையும் தேவையையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நிர்பாசனத் திணைக்களம் பணிக்கப் பட்டது. நிலநீர்ச் சாதனங்களாக குடாநாட்டுக் கிணறுகளும் பாவனை அல்லது தேவையை அறிய பயிர் நிலங்களும் நீர்த்தேவையும் மக்கள் தொகையும் மக்களுக்கான நீர்த் தேவையும் கணக்கிடப்பட்டு ஆராய்வுகளை மேற்கொள்ள 4 பரிசோதனைக் கிணறுகள் குடாநாட்டின் பல்வேறு இடங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றிலிருந்து நீர் மாதிரியை மாதமொருமுறை சேகரித்து கிணற்று நீர் மட்டத்தின் அளவை மாதம் இருமுறையும் கணிக்கும் பொறுப்பு யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த கிராம சேவையாளரிடமும், மாதிரி நீரின் இரசாயனப் பகுப்பை பாடசாலைகளில் இரசாயனப் பாடம் போதித்து வந்த விஞ்ஞான ஆசிரியர் பொறுப்பிலும் வழங்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு கிராமசேவையாளரும் சில விஞ்ஞான ஆசிரியர்களும் சமர்ப்பித்த பெறுபேறுகளில் திருப்தியடையாதபடியால் திணைக்களமே முழுப்பொறுப்பையும் தன் வசமே எடுத்துக்கொண்டு அனைத்துப் பணிகளையும் தமது மத்திய ஆய்வுகூடத்திலேயே எடுத்துக் கொண்டது. தரப்பட்ட, பெறப்பட்ட ஆய்வு முடிவுகளை தலைமையகத்தில் பணியாற்றி வந்த விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் ஆகியோரின் ஆராய்ச்சிக்கு எடுக்கப்பட்டது. கிணற்று நீர் குடாநாட்டின் மத்திய பகுதிகளான கோண்டாவில் சுன்னாகம் வரை நன்னீரைப் பெருவாரியாகக் கொண்டு இருக்கக் காணப்பட்டது. ஓரப்பகுதிகள் சிறிது சிறிதாக உவர்த்தன்மை அடைந்து வருவது கண்கூடு.

பொதுவாக கோடைக்காலங்களில் மேலதிகமாக நீர் பாவிக்கப்படுவதால் கிணற்றுநீர் உவர்த்தன்மை அடைந்து வருவதையும் மாரி மழைக்குப் பிறகு நீர் திருந்தி வருவதையும் காணலாம்.

சில வித்தியாசங்கள் காணப்பட்டன. சில கிணறுகள் மாரிகாலங்களில் உவர் நிலை அடைவதையும் கோடைக்காலங்களில் திருந்தி நன்னீராவதும் மலைக்க வைக்கிறது. இதற்குரிய பொருத்தமான காரணத்தை அறிய முடியாது மயங்குகின்றனர். இந்த நிலைக்குள்ளான கிணறுகள் வெள்ள வாய்க்கால் பாயும் பகுதிகளில் இருப்பதனாலும் மழையோடு சம்பந்தப்பட்டிருப்பதனாலும் தரைமேல் இருக்கும் பொருளே காரணமாயிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. தரைமீது படிந்த உப்பு கழுவப்பட்டுப்போவது காரணமாகுமோ என்று நினைக்க வைக்கிறது.

---

**அமெரிக்க....**

5ம் பக்க தொடர்ச்சி..

நிற்கிறது. ஆனால் பகிரங்க மோதல் என்ற அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை. ராஜதந்திர நிலை நின்று ஆனால் கடும் போட்டி என்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முன்னெடுப்பின் எதிர்காலம் மிகுந்த கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. பேச்சுவார்த்தை மேசையில் நகர்த்தப்படும் காய்கள் ஒவ்வொன்றின் பின்னாலும் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியின் உள்ளார்ந்த நலன்கள் படிந்திருப்பதை மறுத்துவிட முடியாது. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் முக்கிய அம்சங்களைப் புறக்கணித்து விட்டு அந்நிய சக்திகளின் அயல் ஆதிக்கத்தின் தேவைகளுக்காக பேச்சுவார்த்தை திசைமாறிச் செல்லுமானால் அரசியல் சதுரங்கமாகி அனைத்தும் பாழாகிக் கொள்ளவே செய்யும்.

தமிழ் மக்களினதும் நிரந்தர சமாதானத்தை விரும்பும் சகல மக்களினதும் அபிலாஷைகளும் எதிர்பார்ப்புகளும் புறக் குடத்து நீராகிக் கொள்ளவே செய்யும்.

படிப்பகம்

www.padippakam.com



# எல்லாம் உலகமயம் V

## மதோன்மத்தம்

- ஐ. ஐ. ஓ. -

இன்று நிலவும் அரசுகள் மதச்சார்புள்ளவை என்றும் மதச்சார்பு அற்றவை என்றும் பாகுபடுத்திப் பார்க்கக் கூடியனவாய் உள்ளன. அப்படிப் பார்க்கும் போது நாம் "மதம்" என்னும் சொல்லுக்குக் கொடுக்கும் கருத்து என்ன?

மதம் என்னும் பதம் தமிழில் சமயம்-அதாவது. தெய்வம். உயிர். உலகம் பற்றிய கொள்கைகளைக் குறிக்கத்தான் இன்று வழங்கி வருகிறது. குறுகியதொரு கருத்தில் அது தெய்வ வழிபாடு பற்றிய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் குறித்து நிற்கிறது. இது சுருங்கியதொரு வரையறுப்பு ஆகும்.

ஆனால் "மதம்" என்பதற்கு, பொதுவாக எதனைப்பற்றி என்றாலும் ஒரு தனி ஆளோ பலர் சேர்ந்த குழுவோ ஏற்றுக் கொண்டிருக்கும் "கருத்து " என்ற அர்த்தமும் உண்டு. "மத்" என்ற வடமொழி வேர்ச்சொல்லின் அடியாகவே "மதம்" என்ற பிரயோகம் வந்தது என்று மொழி வல்லுநர்கள் எடுத்துக் காட்டுவார்கள். அந்தப் பொதுவான விளக்கப்படி பார்த்தால், மதம் தெய்வம் உண்டு என்று கொள்வதாகவும் இருக்கலாம்; இல்லை என்று மறுப்பதாகவும் இருக்கலாம்.

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் சுயமரியாதைக் கட்சி. திராவிடக் கழகம். திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க.) ஆகியவற்றின் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிய காலத்தில் மத எதிர்ப்புப் போக்கும் கடவுள் மறுப்புக் கொள்கையும் மேலோங்கலாயின. பாராதியாரைப் பெரிதும் போற்றிப் பின்பற்றியவர் பாரதிதாசன். என்றாலும், "எதிர்பாராத முத்தம்". "சுப்பிரமணியர் துதியமுது". "குமரகுருபரர்" போன்ற தொடக்க காலத்து ஆக்கங்களைத் தவிர. ஏனைய நூல்களில் எல்லாம் பாரதிதாசன் கடவுளின் இருப்பை மறுத்தவர்; சமயங்களைச் சாடியவர்; மதங்களை மூர்க்கமாக எதிர்த்தவர்; கிண்டல் பண்ணியவர்; பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் கொள்கையை இறுகப் பற்றிக் கொண்டவர். அந்தக் கொள்கையையே ஒரு விதத்திலே அவருடைய மதமும் ஆயிற்று.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன?

மதம் என்றால் அது தெய்வ வழிபாட்டை ஏற்றுக் கொள்வதாய் மாத்திரம் இருக்கத் தேவையில்லை. எந்தவொரு கோட்பாட்டையும் இறுகப் பற்றி. அந்தக் கோட்பாட்டின் வரம்புகளுக்குள்ளே ஒருவரை மட்டுப்படுத்தி மடக்கி வைக்கும் தன்மை உடையது மதம். இந்தப் பற்றிறுக்கத்தை "டொக்மற்றிசும்" என்பார்கள். தமிழில் அதைப் "பிடிவாதியம்" என்றும் சொல்லலாம்.

மதங்கள் தம்மை நிலைநாட்டிக் கொள்வதற்குத் தருக்க நியாயங்களை ஆயுதங்களாகக் கொள்வதுண்டு. "மணிமேகலை" என்பது ஒரு தமிழ்க் காப்பியம். அது பௌத்த மதம் சார்ந்தது. "சமயக் கணக்கர் திறம் உரைத்த காதை" என்ற பகுதி அதில் வருகிறது. அது பௌத்த மதம் பற்றிய விரிவான வாதப் பிரதிவாதங்களைக் கொண்டு விளங்குகிறது. அப்பகுதியில் கடவுளின் இருப்பையும் உயிர்களின் இருப்பையும் மறுக்கும் நியாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த நியாயங்கள் "மணிமேகலை" எழுந்த காலத்திலே தமிழ் நாட்டவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தருக்க நெறிகளைத் துணையாக்கிப் பேசப்பட்டுள்ளன. இவ்வாறுதான் ஒவ்வொரு மதமும் தாந்தாம் நிறுவனமயமாக்கப்பட்ட காலங்களில் நிலவிய தருக்கவியல் நியமங்களுக்கு இசைவாக வகுக்கப்பட்டுள்ளன.

ஆனால், பழைய காலங்களில், உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் காலந்தோறும் வெவ்வேறு தருக்க நெறிகள் வழக்கில் இருந்து வந்துள்ளன. இன்று உயர்தர வகுப்புகளில், "லொஜிக் அன்ட் சயன்ற்றி.:.விக் மெதட்" என்று ஒரு பாடம் படிப்பிக்கப்படுகிறது. அந்தப் பாடம் தமிழில் "அளவையியலும் அறிவியல் முறைகளும்" என்று சொல்லப்படுகிறது. முன்னைய காலங்களில் அளவையியலானது அறிவியல் முறைகளுடன் சேர்த்து எண்ணப்பட்டதாய் இருக்கவில்லை. ஆனால். "விஞ்ஞான யுகம்" என்று பேசப்படும் இந்தக் காலத்திலே. அளவை இயலை அறிவியல் முறைகளிலிருந்து பிரித்துத் தனியாகப் பரிசீலனை செய்வது ஏறத்தாழ அசாத்தியமானதொரு காரியம் ஆகிவிட்டதென்பது உண்மை.

இத்துடன் தொடர்புபட்ட வகையில், நாம் மற்றுமோர் உண்மையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். அளவை இயலும் அறிவியல் முறைகளுங் கூட. எல்லாக் காலங்களிலும் ஒரே விதமாக இருந்ததில்லை. தருக்கவியல்கள் எல்லாமே காலந்தோறும், இடந்தோறும் சிற் சில வேறுபாடுகளுடன் தான் நிலவி வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, குறியீட்டுத் தருக்கவியல் என்பது நவீன காலப்பகுதிகளில் மிகவும் நுட்பமாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. கணனிகளின் வருகையும் பயன்பாடும் புதுப்புது விதமான தருக்கவியற் சிந்தனைகளுக்கு ஊக்கம் தந்துள்ளன. ஒருவேளை. பண்பளவில் அல்லாவிட்டாலும். தொகையளவிலே ஆயினும் மனிதமூளையின் ஆற்றலை இந்தப் புத்தம்புதிய அபிவிருத்திகள் மேம்படுத்தி உள்ளன. ஆகவே, காலந்தோறும் நிலவிய கொள்கைகளை நிறுவி நிலைநாட்டுவதற்குப் பயன்பட்ட நெறிமுறைகளின் செல்லுபடித்தன்மை-நெடுங்கால நோக்கிலே பார்க்கும்போது-பல்வேறு வகைப்பட்ட மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள்ளன. இதை நாம் மறந்துவிடக் கூடாது. அதாவது கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் மதங்களுக்கும் கூட ஒவ்வோர் இயங்கியல் உண்டு.

பழைய காலங்களில் இந்திய மெய்யியல் சுருதி. யுக்தி. அனுபவம் என்று மூன்று பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சுருதி என்பது வேதம். அது ஆப்தவாக்கியம் என்றும் வழங்கப்பட்டது. ஆப்தர்கள் என்றால் உயர்ந்தவர்கள்-ஞான விழிப்புக் கைவரப் பெற்றவர்கள். அந்த ஞானிகள் கடவுளுக்குச் சமானமாக மதிக்கப்பட்டவர்கள். அந்த "உயர்ந்தோரின்" உபதேசங்கள்தான். உண்மைகளை நிச்சயிப்பதற்குப் பிரமாணமாக-அளவுகோல்கள் போல-அமையத்தக்கவை என்று நம்பப்பட்டன. இது பழைய தருக்கவியல் ஏற்கப்பட்டிருந்த ஒரு நடைமுறை. சுருதி என்ற வாய்மொழிகள் தான் வேதங்கள் என்றனர் ஒருசாரர். இல்லை. இல்லை-சித்தாந்த சாத்திரங்கள்தான் என்றார்கள் மற்றொரு சாரர். அவையும் அல்ல, தோத்திரங்கள் (அல்லது திருமுறைகள்)தான் என்றார்கள். இன்னொருநாரர். சுருக்கமாகச் சொல்வதானால், எது மெய் என்று தீர்மானிப்பதிலே பெரிய பெரிய தடுமாற்றங்கள் தலையெடுத்தன. சமயவாதிகள் தத்தம் மதங்களே சரியானவை-மெய்யானவை என்று சண்டைபோடத் தொடங்கிவிட்டார்கள். சமயப்பற்றாளர்களான "பெரியவர்கள்" கூட. இந்த நிலைமை பற்றி மனவெறுப்புடன் வெளிவெளியாகப் பேசவேண்டிய கட்டங்கள் அடிக்கடி தலைதூக்கின. பழைய தருக்கவியலின் முதலாவது பிராமாணமான சுருதி அல்லது ஆப்தவாக்கியம் அல்லது உரை என்பதிலிருந்து வெளிக்கிளம்பும் பிரச்சினைகள் இப்படிப்பட்டவை "சுருதி" என்ற முதலாவது பிரமாணத்தைத் தமிழ் நூலார் "உரை" என்று குறித்தனர்.

இரண்டாவது பிராமாணம் யுக்தி என்பது. அது சில கூற்றுகளை அடிப்படை உண்மைகள் என எடுத்துக் கொண்டு அவற்றிலிருந்து தருக்க முறைப்படி விடயங்களை உய்த்து அறிவது. இதை அனுமானம் என்றும் சொல்லுவார்கள். தமிழ் நூலார் அனுமானத்தைக் "கருதல்" என்று குறித்தனர். தருக்கவியலின் உயிர்மையமாய் விளங்குவது "கருதல்" தான். இது அரங்கத்தில் "டிடக்ஷன்" என்று சுட்டப்படுகிறது.

மூன்றாவது பிரமாணம் அனுபவம். எந்த ஒரு தோற்றப்பாட்டையும் கண்கூடாக. வெளிப்படையாய்-நேரிலே-பார்த்து நிச்சயம் செய்வதே அது. அதனை வடமொழியாளர்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (13)

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் எடுத்த இளைஞர்கள் பல்வேறு அணிகளில் திரண்டு தமது வாழ்வை அர்ப்பணித்தனர். அதன் விளைவாக சிங்களப் பேரினவாத அரசு பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளது. பேச்சுவார்த்தையில் பங்கு பற்றி தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயத்தை விட்டுக் கொடுக்காமலும் இலங்கைப் பல்லின மக்களின் ஆதரவைப் பெற்றும் முன்னெடுக்கும் வல்லமை தமிழர் தரப்புக்கு உண்டா. இல்லையா என்ற வினாவை முன்வைத்து நாம் விடைதேடுதல் மூலம் எமது சமூகத்தின் இருப்பையும் எதிர் காலத்தையும் பற்றிய சிந்தனைகளாய் பரவச்செய்தல் இயலுமாயிருக்கும்.

இலங்கையில் 77ல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரத்துக்குப் பலியாகிப்போன சமூகத்தில்ள முன்னிலை வகிப்போராக தமிழர் சமூகத்தைக் கருதல் தவறில்லையென நம்புகிறேன். பூகோளமயமாக்கத்தின் புளுகத்தில் தம்மை மறந்து தன் நாமம் கெட்ட சமூகச் சீரழிவிலிருந்து தமிழ் மக்களை மீள்வித்தல் என்பது மிகப் பெருஞ் சிரமமான காரியமாகும்.

ஆயுதத்துக்கு ஓய்வுகொடுத்து யுத்தத்தைத் தவிர்த்து ஓராண்டு பூர்த்தியாகும் பூமியிலே வாழும் பல்லினச் சமூகத்தவர்களும் ஆறுதல் பெருமூச்சு விடும் அமைதிச் சூழலில் தமிழ் ஊடகங்களின் வியாபாரப் புத்தியில் மக்கள் மூழ்கடிக்கப்படுகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேரின வாதக் கட்சியொன்றின் தலைவரெனிலும் ஊடகங்களுக்கு யுத்த நிறுத்த ஓராண்டு பூர்த்திபற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும்போது தமிழர் தரப்பினரின் நியாயங்களைப் பகிரங்கப் படுத்தியிருந்தார். ஆனால் எமது தமிழ் பத்திரிகைகள் எதுவும் அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்காதது மட்டுமன்றி ஏனோதானோ மனப் பாங்கில் வெகுஜன ஒன்றியம் என்ற பெயரில் நடந்த ஹர்த்தால் செய்திகளுக்கு முக்கியத்துவமளித்து இனவெறியை கக்கி வியாபாரம் செய்துள்ளன.

இனவெறியையும் துவேசத்தையும் பரஸ்பரம்தமிழ்-சிங்கள ஏடுகள் தமது வாழ்நாள் முழுவதும் தீனியாக்கி வியாபாரத்தில் ஊதிப்பெருத்துள்ள 'டைனோஷர்கள்' ஆகி வரலாற்றைப் பின்னுக்கிழுப்பதில் முழுப்பலத்துடன் செயற்படுகின்றன. இச்சூழலில் தமிழர் தரப்பினர் ஒதுக்கப்பட்ட சமூகத்தினரின் குரலாய் ஒலித்து வெற்றிபெற வேண்டுமெனில் அரசியல் தளத்தில் ஆல்போல் வேரூன்றி அறுகுபோல் தளைத்து நிலைக்கத் தம்மைத் தயார்படுத்த வேண்டும்.

## போராட்டப் பலத்தில் விளைந்ததை அரசியல் தளத்தில் அறுத்தல் இயலுமா?

இதைவிடுத்து அரசியல் என்பது ஆதிக்க நோக்கிலும் தத்தமது இருப்புக்களை உத்தரவாதம் செய்வதிலும். மாற்றுக் கருத்துக்களை துரோகமானவை என்பதிலும். சாதியத்தை மிக நுணுக்கமாகக் கடைப்பிடிப்பதும் பண்டைப் பெருமைகளில் மகிழ்ந்து நிற்றலும் தொடர்ச்சியான தமிழர் அரசியல் என்றாகிவிட்டது.

**செண்பகன்**

பொதுமக்களை மதித்தல். அவர்களின் கருத்துக்குச் செவிமடுத்தல். பொதுமக்களை அரசியல் பேசும்படி ஊக்குவித்தல். அரசியல் ரீதியான ஆக்கபூர்வமான விமர்சனங்களைப் பகரங்கமாக முன்வைத்தல். மாற்றுக் கருத்துக்களை கௌரவமாக உள்வாங்கல். பல்லினப் பலமத பண்பாட்டு விழுமியங்களையும் வேறுபாடுகளையும் அங்கிகரித்தல். ஒரே இனத்திலுள்ளேயே பல்வேறு வர்க்கத் தரப்பினரின் இருப்பை ஏற்றுக் கொள்ளுதல். அவரவர் வர்க்க குணாம் சத்திற்கேற்ப கருத்துப் பரிமாற்றங்களின் பரிணாமங்களைப் புரிந்துகொள்ளல். மக்களை ஏவலர்கள் என்ற கண்ணோட்டத்துக்கப்பால் எசமானர்கள் என்ற எண்ணக்கருவில் வைத்துப் போற்றுதல். மக்களுக்குக் கட்டளையிடுவதைக் காட்டிலும் மக்களுக்குத் தலைசாய்த்துச் சேவை செய்யத் தயாராயிருத்தல் ஆகிய அரசியல் பண்பாட்டை பரவலாக்கும் பரந்த மனப்பாங்கை விருத்தி செய்வதன் மூலம் மட்டுமே அரசியல் தளத்தில் பலம் பெற முடியும். இவை இல்லையாயின் தமிழர் தரப்பின் எதிர் காலம் பூஜ்ஜியமாகி விடுமென்பதுடன் இருப்பும் கேள்விக்குறியாகும்.

தமிழர் அரசியல் என்ற யதார்த்தத்திலிருந்து இத்தகைய தமிழ்த்தரப்பு அரசியல் பண்பாட்டுக்குத் தம்மை நகர்த்திச் செல்லுதல் அவசியத் தேவையாகும். மக்களுடைய அடிப்படை அபிலாஷைகளையும் எதிர்பார்ப்பு களையும் குறுகிய நிலை நின்று நோக்கினால் தமிழ் மக்களுக்கு விடுதலை என்பது வென்றெடுக்க முடியாததாகிவிடும். தமிழ்த் தேசிய இனத்தின் மீது அக்கறையும் ஆர்வமும் மட்டுமன்றி பழைய படிப்பினைகளில் இருந்தும் படிக்க முற்படும் எவரும் புதிய அரசியல் பண்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாதுவிடின் பழைய பல்லவிகள்தான் அரங்கேறிக்கொள்ள இயலும்.

'இரத்தம் சிந்தாத யுத்தமாகிய அரசியல்' நடாத்தும் வல்லமை தாராரோ? தக்கபடி நடவாரோ?

'அரங்கின்றி ஆடமுடியுமா.' அரசியல் அரங்கென்று ஒன்று பாராளுமன்றப் படிதாண்டாத பண்போடு மக்கள் மத்தியில் உருவாக முடியுமா? அரசியல் என்பது ஓர் சமூக விஞ்ஞானம் என்பது எப்போது புரிந்து கொள்ளப்படப் போகிறது.

# இந்திய தூதுவருக்கு பகிரங்க கடிதம்

இந்திய தூதுவர் திரு. நிருபம் சென் அவர்களுக்கு,

இந்தியாவிற்கு மாறான கருத்துக்களை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராக சொல் மூலமாகவன்றி, செயல் மூலமாக ஓரிரு மாதங்களில் இந்தியா பதிலளிக்கப் போவதாக கண்டியில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தேசிய மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது மிரட்டியிருக்கிறீர்கள்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான சூழ்நிலைகளை குழப்பும் நோக்கில் செய்திகளை வெளியிடும் இந்திய ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறக்கூடிய நிலைப்பாடும் துணிவும் கொண்ட இலங்கை தூதுவர் இந்தியாவில் இல்லை என்பதும், இலங்கை அரசத் தலைவர்களும் கூட இல்லை என்பதும் துரதிஷ்டவசமானதுதான்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்திய ஆளும் வர்க்கத்தினர் அவர்களின் மேலாதிக்க, விஸ்தரிப்புவாத அக்கறையை நிலைநாட்டும் வகையில் இலங்கையையும் மக்களையும் பாதிக்கும் பல விடயங்களை செயல்பூர்வமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளனர். அவற்றில் சில விடயங்கள் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழ் இளைஞர் இயக்கங்களுக்கு ஆயுதங்களையும் பயிற்சியையும் வழங்கி இந்திய மண்ணில் முகாமிட்டு செயற்பட அனுமதித்தனர்.

1985ல் இலங்கையின் பௌத்தர்கள் புனிதநகரமாகக் கொள்ளும் அனுராதபுரத்தில் ஒரு இயக்கத்தைப் பயன்படுத்தி சில சிங்கள மக்களை கொலை செய்தது. அத்தாக்குதலால் 'புனித வெள்ளரசு' மரமும், பௌத்த விகாரையும் பாதிப்பிற்குள்ளாயின.

1986ல் இலங்கையின் யாழ்ப்பாண வான்பரப்பில் அத்துமீறி பிரவேசித்த இந்திய விமானங்கள் உணவுப் பொருட்டலங்களை போட்டன. இது இலங்கையின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு, சுதந்திரம் என்பவற்றின் மீதான அப்பட்டமான தலையீடாகும்.

இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவை பலமுறை இந்திய தலைவர்கள் மிரட்டியதாக அவரே வெளிப்படையாக கூறியிருந்தார்.

1987ம் ஆண்டு இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதனைக் கைச்சாத்திட இலங்கை வந்திருந்த அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியை ரோஹன குமார என்ற பாதுகாப்பு படைவீரர் கொலை செய்ய முயற்சித்தார். குறித்த சமாதான உடன்படிக்கையில் இந்தியாவுக்கு அதிகமான நன்மைகள் இருந்ததால் அக்கொலை முயற்சியை இந்தியா மன்னித்தது. அவ்வுடன்படிக்கையில் திருகோணமலை துறைமுகம், அங்குள்ள எண்ணெய் குதங்கள் என்பவற்றை இந்தியாவிற்கு வழங்கப்பட அடிப்படை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அமைதி காக்கும் படை என்ற பேரில் இங்கு வந்த இந்தியப்படையினர் ஒரு ஆக்கிரமிப்பு படையைப் போன்று தாக்குதல்களிலும். கொலைகளிலும். கொள்ளைகளிலும். பாலியல் வல்லுறவுகளிலும் ஈடுபட்டனர்.

இலங்கையில் 'இந்திய அமைதி காக்கும் படையினர்' செய்த அட்டூழியங்கள் பற்றி குரல் கொடுத்தவர்களில் ஒருவரான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவராக இருந்த காலஞ்சென்ற குமார் பொன்னம்பலத்திற்கு இந்தியா செல்வதற்கான விசா மறுக்கப்பட்டது.

இந்தியாவுக்கு ஆகக் கூடிய நன்மைகளை கொடுக்கக் கூடிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை இலங்கையுடன் இந்தியா செய்து கொண்டது.



திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்கள், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கையிலுள்ள நூறு எரிபொருள் நிரப்பும் நிலையங்களை இந்தியா பெற்றுக் கொண்டது.

இவ்வாறு இலங்கையை. இலங்கையின் சகல இன மக்களையும், தமிழ் மக்களின் போராட்டத்தையும் பாதிக்கும் பல விடயங்களை திட்டமிட்ட வகையில் இந்திய ஆளும் வர்க்கம் செய்து வருகிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி அவ்வப்போது இந்திய அரச தலைவர்கள் கேட்டு வருகின்றனர். பொருளாதார ரீதியாக இலங்கைக்கு உதவி செய்யப் போவதாகக் கூறிக் கொண்டு முன் வருகின்ற ஜப்பான் போன்ற நாடுகளையும் மிரட்டும் வகையில் இந்திய அரச தலைவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

பேச்சளவில் இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாகக் கூறினாலும் உள்ளார்ந்த ரீதியாக அவற்றைக் குழப்பும் முயற்சிகளில் இந்திய அரசத் தலைவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

படிப்பகம்

# மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம்

# பெண்கள் விடுதலைச் சிந்தனை

## சமூக வலிமை பெறவேண்டும்

மனித குல வளர்ச்சியில் மனித வாழ்வு நிறைவுடையதாக முன்னோக்கிச் செல்வதில் பெண்களும் ஆண்களும் சம பங்காளிகள். மனித குலம் பல நூறு லட்சம் ஆண்டுகளைக் கடந்து இன்றைய வளர்ச்சி நிலை கண்டு நிற்கின்றமைக்கு அடிப்படையாக அமைந்து கொண்டது பெண் ஆண் இணைந்த சமூக வாழ்வேயாகும்.

அவ்வாறு இருந்த போதிலும் பெண்கள் பற்றிய கருத்தியலும் நடைமுறை வாழ்விற்கான கண்ணோட்டங்களும் சமமற்ற இரண்டாம் தர நோக்கு நிலை கொண்டதாகவே நீடித்துச் செல்கிறது. பெண்கள் சமூக வாழ்விலே தாயாக, சகோதரியாக, மனைவியாக, பிள்ளையாக, உறவினர்களாக, சக வேலை செய்பவர்களாக இன்னும் பல்வேறு நிலைகளில் ஆண்களோடு இணைந்து உடன் செல்பவர்களாக இருந்து வருகிறார்கள். அவ்வாறு இருந்த போதிலும் பெண்கள் ஒவ்வொரு நிலையிலும் பெண் என்ற காரணத்தால் இரண்டாம் தர நிலையில் வைத்து நோக்கப்படும் போக்கே முனைப்புடன் காணப்படுகின்றது.

இந்த நிலை தற்செயலான ஒரு வளர்ச்சி அல்ல. சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலிருந்தே பெண்களைப் பால் ரீதியாக இரண்டாம் தர நிலைக்குத் தள்ளிய வரலாற்று நிகழ்வு இடம்பெற்று வளர்ச்சியடைந்து வந்தது. இது நிலவுடமைக் காலத்தில் மேன் மேலும் உறுதி பெற்று திட்டவட்டமான பெண் ஒடுக்குமுறைக் கருத்தியலாகிக் கொண்டது. இக் கருத்தியல் மத. பண்பாட்டுத் தளங்களின் ஊடே வலிமை பெற்று மீற முடியாத சமூக நியதியாகவும் விதிகளாகவும் மாற்றம் பெற்று நிலை பெற்றுக் கொண்டன.

பெண்கள் வீட்டுக்குரியவர்கள் ஆண்களுக்குச் சமமானவர்கள் அல்லர் அறிவு. ஆற்றல். உடற் பலம் என்பன ஏற்கனவே விதித்துக் கொண்ட எல்லைகளுக்குள் மட்டுமே பெண்கள் தங்களை இருத்திக் கொள்ள வேண்டும். அவற்றை மீறுவது பாவமானது. தெய்வ நிந்தனையானது. சமூக அவமானம் தரக் கூடியது. சக பெண்கள் உட்பட முழுச் சமூகமுமே பழி சொல்லி நிராகரித்து விடத்தக்கது என்றே இன்று வரை பெண்கள் பற்றிய கண்ணோட்டம் சமூகக் கருத்தியலாக இருந்து வருகின்றது.

வீட்டு வேலைகள் அனைத்திற்கும் உரியவள் பெண். அவளே சகல குடும்பச் சுமைகளுக்கும் பொறுப்புதாரி. பெண்களது வீட்டு உழைப்புக்கு எவ்வித பெறுமதியும் கணக்கிடப்படுவதில்லை. அழகாகவும், பணிவாகவும் இருந்து ஆண்களின் காம இச்சைக்குப் போகப் பொருளாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு ஆண் எவ்வகையிலும் நடந்து கொள்ளலாம். அதற்கு விதிகளோ வரம்புகளோ கிடையாது. ஆனால் பெண் என்றால் அவர்களுக்குரிய விதிகள் வரம்புகளில் அணுவளவும் மீறக் கூடாது. கடமை. கண்ணியம். கட்டுப்பாடு. ஒழுக்கம் என்பனவற்றில் நூற்றுக்கு நூறாக இருப்பவளாகப் பெண் இருத்தல் வேண்டும்.

அதேவேளை குழந்தைகள் பெறுபவளாக மட்டுமன்றி குழந்தைகளை வளர்த்து பெரியவர்களாக்கும் பொறுப்பிற்கும் பெண்களே ஆளாக வேண்டியுள்ளது. பெண்கள் உடல் உழைப்பிலாயினும் அன்றி மூளை உழைப்பிலாயினும் ஈடுபடும் போது அங்கேயும் பெண் என்ற



காரணத்தால் இரண்டாம் தர நிலை வைத்தே நோக்கப்பட்டு நடாத்தப்படுகின்றாள். வழங்கப்படும் வேதனத்திலும் ஏனைய உரிமைகளிலும் பெண் வேறுபாடு காட்டப்படுகின்றது. ஆண்களுடைய அதிகாரத்திற்கும் விருப்பங்களுக்கும் இணங்கிப் போகுமாறு பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் பாலியல் சித்திரவதைகளுக்கு பெண்கள் ஆளாக்கப்படுகின்றனர்.

தமது வேலைத்தல நேரம் முடிந்து வீடு வந்து சேரும் பெண்களை வீட்டு வேலைகள் காத்துக் கிடக்கின்றன. இதனால் பெண்கள் இரட்டைச் சுமைகளைத் தாங்கி நிற்கின்றனர். இவ் அனைத்துச் சுமைகளையும் சுமந்து குடும்ப வாழ்வை நடாத்தும் பெண்கள் அவற்றை பெண்களுக்கான கடமைகளாகவும் இறைவன் என்பவன் வகுத்துக் கொடுத்த நெறிமுறை களாகவும் யாவற்றுக்கும் மேலாகத் தமக்குரிய தலைவிதியாகவும் காணுகின்ற போக்கே நமது சமூகத்தில் விரவிக் காணப்படுகின்றது.

பெண்கள் இவ்வாறுதான் வாழ வேண்டும் என்பதைச் சகல மதங்களும் பண்பாடுகளும் அரசியலும் திட்டவட்டமான கருத்தியல்கள் மூலம் வலியுறுத்தியே வருகின்றன. இது அடிப்படையில் ஆணாதிக்கத்தின் ஆதிக்க கருத்தியலேயாகும். ஆண் ஆதிக்க கருத்தியல் என்பது தனி மனித விருப்பு வெறுப்பு சார்ந்து உருவாக்கி வழி நடாத்தப்பட்ட ஒன்றல்ல. உற்பத்தி முறைமையும் அதன் வளர்ச்சியான சொத்துடமையின் பெருக்கமும். அவற்றை தமதாக்கி ஆதிக்கம் பெற்றுக் கொள்வதையும், வர்க்க வேறுபாடுகளை நிலை நிறுத்துவதன் வாயிலாகவுமே பெண்கள் மீதான ஒடுக்குமுறைக் கருத்தியல்கள் ஆண்களால் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. மதங்களும் பண்பாடு களும் ஏனைய சமூக நடைமுறைகளும் இப் பெண் ஒடுக்குமுறைக்கான கருத்தியல் கருவிகளாக்கப்பட்டன. இவற்றின் அழுக்கத்தால் மூடுண்டு கிடக்கும் ஒரு சமூகத்திலேதான் மூன்றாம் உலக நாடுகளின் பெண்களது வாழ்வு விழிப்பற்று வரண்டதாகக் காணப்படுகின்றது.

நமது பண்பாட்டுச் சூழலில் பூவாலும் பொட்டாலும் பட்டாலும் பவுணாலும் மொட்டாலும் முத்தாலும் அலங்கரிக்கப் படுவதன் மூலம் மனநிறைவு கொள்ளுமாறு பெண்களது உணர்வுகள் மழுங்கடிக்கப்படுகின்றது. அவற்றைப் பெற முடியாதவர்கள் அவற்றுக்காக முயல வேண்டும் என்றே வழி காட்டப் படுகிறார்கள்.

நமது சமூகச் சூழலில் பெண்களைப் பிணைத்திருக்கும் கண்களுக்குத் தெரியாத பெண்ணடிமைச் சங்கிலிகளை அடையாளம் காண்பது உடனடித் தேவையாகிறது. அவ்வாறு காணும் போது ஆண்களுக்கு எதிராக அன்றி ஆணாதிக்க கருத்தியலை உடைத்துக் கொள்வதில் மீறல்கள் பலவற்றைச் செய்தல் வேண்டும். பெண்களது விடுதலை என்பது மேற்குலகம் சார்ந்ததாகவோ அரச சார்பற்ற நிறுவனங்களின் அதி தீவிரப் பெண்ணிய முழக்கங்களாகவோ அமைந்து விட முடியாது. மூடுண்டு அழுக்கப்பட்டுள்ள பெண்களது பிரச்சினைகளுக்கான விடுதலைச் சிந்தனைகளை வெளிக் கொண்டு வரல் வேண்டும். இதற்கு பெண்களது தீவிர முன் முயற்சிகள் அவசியம். மேல் தட்டு வர்க்கச் சிந்தனைகளை மட்டும் வைத்து பெண்களது விடுதலைக் கனவுகளை நிறைவேற்ற முடியாது. அத்துடன் ஆண்களைப் பிரதான எதிரிகளாகக் கொண்ட பெண்ணிய விடுதலை என்ற முழக்கங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிழைப்புக்கு மட்டுமே உதவக் கூடியதாகும். எனவே ஆக்கபூர்வமான பெண்கள் விடுதலைக்கான பாதையில் செயல்படுவதே நம் முன் உள்ள தேவையாகும்.

## வாழும் உரிமை

ஈவா. ஜோன்ஸன் (EVA Johanson), அவுஸ்ரேலியா

நான் எப்படி வாழ்வதென நீ எண்ணும் ஒரு படிமமாக என்னை மாதிரிப் படுத்தாதே
நான் ஒரு பெண், நான் கரியவள், நான் சுதந்திரமாயிருக்க வேண்டும்.
என் மீது நீ சூட்டிய உனது விழுமியங்களை நான் மீளத் தருவேன்.
என் பெருமிதத்தை, என் பண்பாட்டை, என் நிசமான அடையாளத்தை மீளப் பெறுவேன்.

எதிர்காலத்திற்காகவே நான் முயல்வேன், பின்னே நோக்குதற்கு இல்லை.
என்னை என் வழியில் ஆதரிக்க பிற பெண்களை நாடுவேன்
இச் சமுதாயத்தின் அதி முக்கிய பங்களிப்பாக மட்டுமே
இருக்கும் உரிமைக்காக ஒரு பெண் என்ற வகையில் நான் போரிடுவேன்.

ஓம், நான் ஒரு பெண், என்னில் ஒரு குறையுமில்லை என நான் அறிவேன்.
முடிவில் திறமையை அடையும் வரை நான் என் கல்வியில் முன்னேறுவேன்
என் சுயாதீனமான சிந்தனையே என்னை இவ்வளவு வலியவளாக உணரச் செய்கிறது
ஒற்றுமையில் எம் நம்பிக்கை, நாம் தவறமாட்டோம் எனப் பொருள்படும்.

எவரதும் கைப்பட்ட ரோசாவாக நான் விரும்பவுமில்லை
உன் நடுப்பக்கக் கவர்ச்சிப் பெண்ணாகும் தேவையுமில்லை
நான் ஒரு பெண், நான் கரியவள், நான் சுதந்திரமாயிருக்க வேண்டும்
நிமிர்ந்த தோற்றமும் வல்லமையுமே வாழ்வதற்கு ஒரே வழி

நன்றி
மறப்பதற்கு அழைப்பு
(தமிழாக்க கவிதை நூல்)
சி. சிவசேகரம்




## ஸ்தாலினியம்

இன்றைக்கு ஸ்தாலினையும் ஹிற்லரையும் சேர்த்துப் பேசுவது சிலருக்கு ஒரு வழக்கமாகிவிட்டது. ஒரு பகுதியினர் இதைத் திட்டமிட்டே செய்கின்றனர். இன்னொரு பகுதியினர் கிளிப் பிள்ளைகள் போல அதிகம் சிந்தனையின்றிச் செய்கின்றனர். முதலாவது பகுதியினருக்கு ஃபாஸிஸத்தையும் கம்யூனிஸத்தையும் சமன்படுத்தும் ஒரு திட்டவட்டமான நோக்கமும் தேவையும் உண்டு. மற்றவர்களுக்கு பூஷ்வா ஜனநாயகம் பற்றிய தெளிவின்மை அதிகம். அதைவிடவும். சோவியத் யூனியனின் சரிவுக்குப் பின்பான சூழலில் முதலாளிய ஊடகங்கள் மூலம் நடக்கிற கம்யூனிஸ விரோதப் பிரசாரத்திற்கு அவர்கள் முற்றாகவே பலியாகியுள்ளார்கள் என்றும் சொல்ல வேண்டும்.

நம் முன் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று ஸ்தாலின் என்ற தனிமனிதர் பற்றியது. மற்றது ஸ்தாலின் மூலம் வளர்த்தெடுக்கப்பட்ட மாக்ஸிய-லெனினியச் சிந்தனையும் நடைமுறையும் பற்றியது. ஸ்தாலின் தலைமையிலான ஆட்சி ஒரு தனி மனிதக் கொடுங்கோன்மை என்ற படிமம் வலிந்து திணிக்கப்படுவதன் முக்கியத்துவம் ஸ்தாலினை ஹிற்லரை விடவுங் கொடிய, ஈவிரக்கமற்ற கொலை பாதகனாகச் சித்தரிப்பதன் மூலம் ஸ்தாலினின் வரலாற்றுப் பங்களிப்பை மதிப்பிறக்கம் செய்வது. மற்றது. அவ்வாறு செய்வதன் மூலம் ஸ்தாலினுடன் தொடர்புபடுத்தக் கூடிய மாக்ஸிய-லெனினியச் சிந்தனையையும் அரசியல் இயக்கங்களையும் ஓரங்கட்டுவது.

ஸ்தாலின் தனி மனிதர் என்ற முறையிலோ. ஒரு மாக்ஸிய-லெனினியத் தலைவர் என்ற முறையிலோ தவறுகள் செய்தவர் என்பது ஸ்தாலினின் காலத்திலேயே உணரப்பட்டு உலகக் கம்யூனிஸ இயக்கத்தினுள் அத்தவறுகள் நடைமுறையில் நிராகரிக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளன. குருட்டுத்தனமான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியைப் பின்பற்றிய பிரித்தானியக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தூண்டுதலால் அதே பாதையைப் பின்பற்றிய இலங்கை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் க்ருஷ்சொவ் அதிகாரத்துக்கு வந்தவுடன் ஸ்தாலினைப் பகிரங்கமாகக் கண்டித்து அறிக்கை விட்டவுடன். முன்னைய குருட்டு விசுவாசத்துடன் குருவை மிஞ்சிய சீடர்களாக ஸ்தாலினைக் கண்டித்துப் பேச முற்பட்டார்கள்.

மறுபுறம். ஸ்தாலின் தவறுகளை உணர்ந்து. அதேவேளை. ஸ்தாலினின் பங்களிப்பைச் சரியாக எடைபோட்ட மாஓசேதுங் ஹோசிமின். கிம் இல் ஸுங் போன்ற தலைவர்கள் க்ருஷ்ச்சொவ் சொன்னதை ஏற்க மறுத்தனர். ஏனெனில் ஸ்தாலின் மிகவும் கடுமையாகவும். கண்டிப்பாகவும் நடந்த சூழல் அறிவதனால் அதை வெறுமனே பாதிக்கப்பட்ட அப்பாவிகள் எனப்படுவோரை வைத்து மதிப்பிட முடியாது. அன்று சோவியத் யூனியனுக்கு உள்ளே இருந்த நிலைமைகளையும் அதைவிட முக்கியமாக உலகின் முதலாவது சோஷலிச அரசைக் கவிழ்ப்பதற்காக ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தும் சேர்ந்து செய்த சூழ்ச்சிகள் பற்றியும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

ரஷ்யப் புரட்சியின் வெற்றியை உடனடியாக அடுத்துப் பன்னிரண்டு நாடுகள் ரஷ்யப் புரட்சிகர அதிகாரத்தைத் தகர்க்கப் போர் தொடங்கியதும் உலகத் தொழிலாளரது கடும் எதிர்ப்புக் காரணமாக அது துவண்டதும் பற்றி யாரும் இப்போது பேசுவதில்லை. ரஷ்யாவைத் தனிமைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் பற்றி யாரும் பேசுவதில்லை. 1930 அளவில் பிரித்தானிய ரஷ்ய உறவைக் குலைப்பதற்காக ஸினோவியெவ் பிரித்தானிய கம்யூனிஸ்ட்டுகட்கு எழுதிய இரகசியக் கடிதம் என்று ஒன்று புனையப்பட்டு பிரித்தானிய வலதுசாரி ஏடொன்றால் பிரசித்தப்படுத்தப்பட்டு, அது செய்த கேடுகளின் பின்பே உண்மை வெளியானது பற்றிப் பேசுவாரில்லை. ஏகாதிபத்தியம் ரஷ்யப் புரட்சியை எதிர்ப்பதற்கு வெறுமனே முதலாளியச் சிந்தனையாளர்களை மட்டும் நம்பியிருக்கவில்லை. சில "சனநாயக சோஷலிஸ வாதிகளையும்" த்ரொத்ஸ்கிய வாதிகளையும் அது நன்கு பயன்படுத்தியது.

இரண்டாம் உலகப் போர் ஃபாஸிஸத்துக்கு எதிரான போராக உருமாறிய நிலையில் த்ரொத்ஸ்கிய வாதிகள் இலங்கையில் நடந்து கெண்ட விதம் பற்றி இங்கு நினைவூட்டுவது போதுமானது. ஃபாஸிஸம் முறியடிக்கப்பட வேண்டிய முக்கியத்தை இந்திய தேசியவாதிகள் உணர்ந்தளவுக்குக் கூடத் த்ரொத்ஸ்கிய வாதிகள் உணரவில்லை.

இதனால், ஸ்தாலின் எல்லா நேரத்திலும் சரியாகவே நடந்து கொண்டார் என்றோ சரியான முடிவுகளையோ எடுத்தார் என்பது இன்றைய மாக்ஸிய-லெனினிய வாதிகளின் முடிவல்ல. நெருக்கடியான சூழ்நிலைகளில் எடுக்கப்படும் பொதுவான தீர்மானங்கள் குறிப்பான விடயங்களில் தவறாகப் போகலாம். அதுபோலவே, ஒரு குறிப்பிட்ட சூழலில் பிரதான முரண்பாட்டுக்கோ பிரதான முரண்பாடாக வளர்ச்சி பெறும் முரண்பாட்டுக்கோ முதன்மை வழங்கும் போது பிற முரண்பாடுகளைக் கையாள்வதிற் தவறுகள் நேரலாம். இவற்றை மனதிற் கொண்டே ஸ்தாலினின் தவறுகள் மதிப்பிடப்பட வேண்டும்.

அதேவேளை. க்ருஷ்ச்சொவ்வுக்குப் பிந்திய சில சோவியத் தலைமைகளும் கொர்பசொவ் தலைமையின் கீழ்த் தொடங்கிய பூரண சரணாகதியும் அதன் பின்பு ஏற்பட்ட முழுமையான முதலாளியத் தலைவரான யெல்ற்ஸினும் ஸ்தாலின் பற்றிய அவதூறுகட்கு வேண்டுமென்றே உரமிட்டனர். இவை ஸ்தாலின் பற்றிய திட்டமிட்ட ஒரு படிமத்தை உருவாக்கும் முயற்சியில்லாமல் வேறெதுவுமில்லை.

இவ்வாறான "கண்டுபிடிப்புகள்" ஒவ்வொன்றும் முன்வைக்கப்பட்ட போது திரிபுவாதிகள் செய்தது என்ன? எவ்வளவு குருட்டுத்தனமான ஸ்தாலின் விசுவாசிகளாக இருந்தார்களோ, அவ்வளவு குருட்டுத்தனமான ஸ்தாலின் விமர்சகர்களாக மாறினார்கள். மாக்ஸிய-லெனினிய நிலைப்பாட்டிலிருந்து விடயங்களை வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் வர்க்கப் போராட்ட யதார்த்தத்திலும் வைத்து நோக்கும் ஆற்றலை இழந்து எதைச் சொன்னால் மக்களை எளிதாகக் கவரலாமே அதையே சொல்லப் பழகிவிட்ட ஒரு அரசியற் போக்கில் நாம் அதிகம் எதிர்பார்க்க முடியாது.

மறுபுறம். த்ரொத்ஸ்கிய வாதிகளுடைய வெறும் வாய் அரசியலுக்கு ஸ்தாலின் பற்றிய "புதிய அம்பலப்படுத்தல்கள்" அவல் மாதிரி வாய்த்தது. தம்மைச் சனநாயக வாதிகளாகவும், எவ்விதமான அரச அடக்குமுறையையும் ஏற்காதவர்களாகவும் கலை-இலக்கிய-பண்பாட்டுத் தளங்களிற் தாராளவாதச் சிந்தனை கொண்டோராகவும் காட்டிக் கொள்ள முயலும் இவர்கள், அதன் மூலம் வெகுசன ஆதரவைப் பெறலாம் என்று கனவு காண்கின்றனர்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதை விவசாயிகள் மீதான அடக்குமுறையாக்க முயன்றவர் த்ரொத்ஸ்கி என்பது பற்றியோ தான் அதிகாரத்தில் பங்காளியாக இருந்த வரை பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைக் கேள்விக்கு உட்படுத்தத் தவறாதவர் என்பதையோ ரஷ்யா புரட்சியை 'ஏற்றுமதி' செய்ய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் என்பதையோ பற்றி த்ரொஸ்கியவாதிகள் பேச விரும்பமாட்டார்கள். அது மட்டுமன்றி 'நிரந்தரப் புரட்சி' என்று ரஷ்யாவின் ஜனநாயகப் புரட்சி ஸ்திரப்படுத்தப்படாமலே சோஷலிஸப் புரட்சியாகத் தொடர்வதைக் குறித்த

தொடர்ச்சி 11ம் பக்கம்...

www.padippakam.com



# எண்ணெய்க்காக இரத்தம் குடிக்க நிற்கும் அமெரிக்கா!

சில பொய்களைத் திட்டமிட்டே உருவாக்கி அவற்றைத் தமது சக்தி வாய்ந்த தகவல் ஊடகங்கள் மூலம் திரும்பத் திரும்பப் பிரச்சாரப்படுத்துவதன் மூலம் அப் பொய்கள் உண்மைகள் போன்று தோற்றமளிக்கும் என்பது அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளினதும் நம்பிக்கையாகும். அதன் அடிப் படையிலேயே ஈராக் மீது போர் தொடுப்பதற்கான பொய்களை அமெரிக்கா பரப்பி வருகின்றது. ஆனால் அமெரிக்காவின் துரதிஷ்டம் அப் பொய்களை உலகம் மட்டுமன்றி அமெரிக்க மக்களும் நம்ப மறுப்பது தான்.

புஷ் நிர்வாகத்தின் இப் பொய்யுரைகளுக்குப் பின்னால் பொதிந்திருக்கும் உண்மை. ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றும் வர்த்தகப் பேரவா என்பது பகிரங்கமானதாகும். அதனாலேயே அமெரிக்கா உட்பட உலகின் நகரங்களில் ஈராக் மீது தொடுக்கவுள்ள போரை எண்ணெய்க்கான போர் என மக்கள் வர்ணித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்துகிறார்கள்.

அரபு உலகில் எண்ணெய் வளம் மிக்க நாடுகளில் ஈராக் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதன் வளம் அடுத்த ஐம்பது ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடியது என எண்ணெய் வள ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இத்தகைய ஒரு நாடு அமெரிக்காவின் கட்டுப் பாட்டில் இல்லாதது மட்டுமன்றி அரபுத் தேசியவாத நிலை நின்று அமெரிக்காவையும் அதன் கைக் கருவியான இஸ்ரேலையும் எதிர்த்து வருவதை அமெரிக்காவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அத்துடன் அமெரிக்க நிர்வாகத்தின் ஜனாதிபதி புஷ் முதல் ஏனைய உயர் தலைவர்கள் நிர்வாகிகள் மற்றும் முதலாளிகள் இந்த எண்ணெய் வர்த்தகத்தின் பங்காளிகளாகவே இருந்தும் வருகின்றனர். எனவே ஈராக்கின் தற்போதைய ஆட்சியாள்ரான சதாமும் அவரது ஆட்சி நிர்வாகத்தையும் அப்புறப்படுத்தி விட்டு தமக்கு விசுவாசமாக இருக்கக் கூடிய ஒரு கும்பலை அதிகாரத்திற்கு கொண்டு வர யுத்தத்தைத் தவிர வேறு வழி அமெரிக்காவிற்கு இல்லை என்பதாலேயே போர்த் தயாரிப்பில் இறங்கி இருக்கிறது.

இந்த உண்மையை மறைக்கவே ஈராக்கில் மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கண்டுபிடித்து அழிக்கும் புனிதமான கடமையைச் செய்யப் போவதாக அமெரிக்கா காட்டி நிற்கிறது. முன்பு ஈரான் இஸ்லாமியப் புரட்சி வெற்றி பெற்று அமெரிக்காவும் அதன் அடிவருடியான மன்னர் ஷாவும் மூக்குடைபட்டு பின்வாங்கிய பின் அமெரிக்கா ஈராக்கையும் அதன் தலைவரான சதாமையும் பயன்படுத்தி ஈரான் மீது யுத்தம் தொடர வைத்தது. அப்போது ஈராக்கிற்கு சகல வகை ஆயுதங்களையும் வழங்கியது இதே அமெரிக்காதான். ஆனால் இன்று அதே ஈராக் மனிதப் பேரழிவுக்கான ஆயுதங்களை வைத்திருப்பதாக அமெரிக்கா ஓலமிடுகின்றது. இதில் சிரிப்பு என்னவென்றால் அமெரிக்கா வைத்திருக்கும் அணுவாயுதங்கள் உட்பட சகல வகை ஆயுதங்களும் பேரழிவைத் தரக் கூடியவை அல்ல. அவை உலக மக்களின் உணவு உற்பத்திக்கானவை என்றே உலகம் நம்ப வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்க்கிறது. ஏகாதிபத்தியத்தின் மறுபெயர் யுத்தம் என்பது எவ்வளவு பொருத்தமான உண்மையாகும்.

இன்று ஈராக் மீது போர் தொடுக்க நிற்கும் அமெரிக்காவையும் அதன் வாலாக ஆடி நிற்கும் பிரித்தானியாவையும் உலக மக்கள் எதிர்க்கிறார்கள். ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்கவில்லை. முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான முரண்பாடும் போட்டியும் அங்கே காணப்படுகின்றது. மூன்றாம் உலக நாடுகள் ஈராக் மீது போர் தொடுக்காதே என்கின்றன. அணி சேரா இயக்கம் எதிர்க்கிறது. அவுஸ்திரேலிய, யப்பானியத் தலைமைகள் மட்டுமே அமெரிக்காவின் பக்கம் உள்ளனர். ஐ.நா.வைக் கூட முழுமையாக அமெரிக்காவால் வளைத்து நிற்க முடியவில்லை. இந்நிலையில் எப்படியும் ஈராக் மீது போர் தொடுப்பதை அமெரிக்கா உறுதிப் படுத்தி நிற்கிறது. உலக மக்களும் நாடுகளும் அமெரிக்காவின் வெறித்தனமான போர்த் தொடுப்பை கடூரமாக எதிர்த்து வருகிறார்கள். நமது நாட்டு அமெரிக்க அடிவருடியாக நிற்கும் யூஎன்.பி. ஆட்சி ஈராக் மீது போர் தொடுக்காதே என்று உறுதிபடக் கூறிக் கொள்ள அஞ்சி அடங்கி ஒடுங்கி நிற்கும் கேவலத்தையே காண முடிகின்றது. எனவே மக்கள் அனைவரும் அமெரிக்காவின் ஈராக் மீதான போரைக் கைவிடும்படி வற்புறுத்துவதை மேலும் விரிவுபடுத்த வேண்டும்.



ஈராக்கில் இரத்தம் குடிக்க நிற்கும் அமெரிக்க ஆளும் வர்க்க ஓநாய்கள்

# இரண்டாம் உலக யுத்தத்தில்
## ஸ்டாலின்கிராட் சமர் மாபெரும் திருப்புமுனை

பெப்ரவரி 2ம் திகதி ஸ்டாலின் கிராட் வெற்றியின் 60வது ஆண்டு நிறைவு ரசியாவில் கொண்டாடப்பட்டது. இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் நிகழ்வின் சூழலை மிகச் சுருக்கமாகத் தருகிறோம்.

ஸ்டாலின் கிராட் மீதான நாஜிகளின் தாக்குதல் 1942ம் ஆண்டு யூலை 17ம் திகதி சிர் ஆற்றின் முனையிலிருந்து தொடுக்கப்பட்ட து. சோவியத்தின் செஞ்சேனையின் எதிர்த்தாக்குதல் தீவிரமாக இருந்தபோதும் மிகவும் அதிக எண்ணிக்கையில் இராணுவத்தையும், படைக் கலன்களையும் குவித்த நாஷிப் படையினர் ஆகஸ்ட் 17ம் திகதியளவில் ஸ்டாலின் கிராட்டை நோக்கி 60-80 கி.மீ. தூரம் முன்னேறியிருந்தன. ஆகஸ்ட் 23ம் திகதி ஸ்டாலின் கிராட்டின் பிரதான பகுதிக்குள் ஊடுருவிவிட்டனர்.

ஸ்டாலின் கிராட் முனையின் தளபதி மார்ஷல் ஏ.ஐ.ஜெரிமென் கோ பின்வருமாறு நிலைமையை விளக்கியிருந்தார்:-

"ஸ்டாலின் கிராட் தீச்சுவாலையாகியது. ஒரே புகை மண்டலம் நகரின் சகல இடங்களிலும் தீ பரவிக் கொண்டது. தொழிற்சாலைகள் எரிந்தன. எண்ணெய் தாங்கிகள் தீப்பிடித்த எரிமலைகள் போலக் காணப்பட்டன. முழு ஸ்டாலின் கிராட்டும் பதுங்கிக் கொண்டது. கருமையாகியது. நகரில் பெரும் சூறாவளி ஒன்று ஏற்பட்டது போன்று தோன்றிற்று. கட்டிடங்களின் மிச்ச சொச்சங்கள் வீதிகளிலும், பாதைகளிலும் வீழ்ந்தன. காற்று சுவாசிப்பதற்கு முடியாத அளவு மோசமாக மாசடைந்தது."

எவ்வாறாயினும் நாஷிகளால் நகரத்தைக் கைப்பற்ற முடியாது போனமை அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. செஞ்சேனையின் தற்பாதுகாப்பும், எதிர்த்தாக்குதலும் நாஷிகளின் முன்னேற்றத்தை மட்டுப்படுத்தியது.

நாஷிப்படையினர் தினமும் புதிது புதிதாக குவிக்கப்பட்டனர். செப்டம்பர் 13ம் திகதி பெரும் எடுப்பிலான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வொல்கா சமரில் சோவியத் வீரனும், அனுபவம் மிக்க தளபதிகளும் தங்களின் வெற்றியில் அபார நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்களைச் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் ரீதியாகவும் உளரீதியாகவும் புடம் போட்டிருந்ததே அதற்கான காரணமாகும்.

படையினரையும், ஏகப்பட்ட ஆயுதங்களையும் இழந்த நிலையில் ஒக்டோபர் 15ம் திகதி செஞ்சேனையை இரண்டாக ஊடறுத்து வொல்காவை நாஜிகள் அடைந்தனர். ஒரு சமயம் ஸ்டாலின் கிராட்டின் பாதுகாப்பு



அரண்கள் எழுநூறு மீட்டர் தொலைவிலேயே இருந்த போதும் செஞ்சேனை தனது நிலைகளில் இறுகப் பற்றியிருந்தது. வொல்கா நதியின் கரைகளிலேயே பேர்லினின் அஸ்த்தமனத்திற்கு வித்திடப்பட்டது.

இது தொடர்பாக 1967ல் நாப்ரன், டெரி என்ற இரு பிரித்தானிய எழுத்தாளர்கள் பின்வருமாறு கூறினர்:-

"யுத்தத்தின் சகல மட்டங்களிலும் அமெரிக்கா இழக்கவிருந்ததை விட கூடுதலான ஆட்களைத் தாரை வார்த்து ரஷ்யர்கள் நாசமாக்கப்பட்ட ஒரு நகரத்தைப் பாதுகாப்பதற்காக இழந்தனர்"

ஸ்டாலின் கிராட் சமரில் மட்டும் இருபது இலட்சம் பேர் சோவியத் தரப்பில் மரணித்தனர்.

உயிருடன் இருக்கும் அனரொலி கொஸ்லோவ் பின்வருமாறு கூறுகிறார்:-

"தளபதிகள் கண்ணீர் விட்டனர். அதிகாரிகள் கண்ணீர் விட்டனர். சாதாரண படையினர் கண்ணீர் விட்டனர். சிலர் சரண் அடைந்தனர். வேறு சிலர் பயித்தியமானர். வேறும் சிலர் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டனர். அதுதான் ஸ்டாலின் கிராட்."

இரண்டாம் உலக யுத்தத்தின் திருப்பு முனையாக 1942 நவெம்பர் 19ம் திகதி காலை செஞ்சேனை ஸ்டாலின் கிராட்டில் தனது தாக்குதலை ஆரம்பித்தது."

1943 ஜனவரி 31ம் திகதி ஜெனரல் பீஸ்ட்மாஷல் பிரெட்றிச்சும் அவரது அதிகாரிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். 1943 பெப்ரவரி 2ம் திகதி மாலை ஸ்டாலின் கிராட்டில் இருந்த முழு நாஷிப் படையினரும் அழிக்கப்பட்டனர். அப்போது சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொண்ணூற்றி ஓராயிரம் (91,000) இதில் 24 ஜெனரல்களும் அடங்கும்.

ஜேர்மனி ஒருநாள் துக்க தினத்தை அனுட்டித்த சமயம் உலகம் ஸ்டாலின் கிராட் வெற்றியை குதூகலத்துடன் கொண்டாடியது.

ஸ்டாலின் கிராட்டின் முற்றுகையை ஒரு முனையில் உடைத்து செஞ்சேனை முன்னேறுகிறது என்ற செய்தி கேட்ட போது தலைவர் மாவோ இதனை இரண்டாவது உலகயுத்தத் தில் மாபெரும் திருப்பு முனையெனக் கூறி இதனைத் தொடர்ந்து உலகில் நிகழப் போகும் மாற்றங்களை ஒரு சிறு கட்டுரையாக வெளியிட்டார்.

ஒரு ஏ4 அளவிலான அக்கட்டுரையில் அவர் தெரிவித்த எதிர்வுகள் அப்படியே யுத்த முடிவில் நாம் கண்டோம். எமது இளந்தலைமுறையினர் நிச்சயமாக அக்கட்டுரையை வாசிப்பது மிக்க பலன் உடையது.

உலகம் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த வேளை சோவியத் யூனியனை ஸ்டாலின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி சரியான தலைமை கொடுத்து சோவியத் யூனியன் பொருளாதார சிக்கலில் இருந்து காப்பாற்றியது. அதே சமயம் கிட்லரை தோற்கடித்ததன் மூலம் உலகையும் ஸ்தாலின் காப்பாற்றினார். அதற்காக இரண்டு கோடி சோவியத் மக்கள் உயிர்த்தியாகம் செய்தனர். அதனை எல்லாம் மறந்து துரோகி நிகிட்டா குருச் சோவ் ஸ்டாலின் மீது வசைபாடி 1961ல் ஸ்டாலின் கிராட்டின் பெயரை மாற்றினான்.

இப்போது திறந்த பொருளாதாரம் என்ற சகதிக்குள் சிக்கத் தவிக்கும் சோவியத் மக்கள் விழிப்படைந்து வருகின்றனர். வொல்கோ கிராட்டின் பிராந்திய பாராளுமன்றம் மீண்டும் ஸ்டாலின் கிராட் பெயரைக் கொண்டு வரவேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருக்கிறது.

ஸ்டாலின் கிராட்டின் மூத்த பிரஜைகளின் தலைவரான கொஸ்லோவ் "நாம் இறந்து போவோம். ஆனால் ஸ்டாலின் கிராட் மீண்டும் அப்பெயரைப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை" என்கிறார்.

ஸ்டாலின் கிராட்டின் தரைப் படைகளின் பகுதித் தளபதியாகவிருந்த 81 வயதுடைய அனரொலி கொஸ்லோவ் மேலும் தெரிவிப்பதாவது :-

"இளைஞர்களான உங்களுக்கு இதை விளங்கிக் கொள்ள முடியாது. அது எங்கள் உயிர். மீண்டும் ஸ்டாலின் கிராட் என்ற பெயரை சூட்டாவிடில் எங்கள் முகத்தில் அவர்கள் (ஆட்சியில் இருப்பவர்கள்) துப்புவதாகவே கொள்வோம். அதாவது அவர்கள் எங்களை உயிருடன் புதைத்துவிட்டனர்".

அவர் மேலும் கூறியதாவது :-

"ஸ்டாலின் கிராட் ஒரு தேசபக்த சொல்லாகும். அது வெற்றியின் சின்னம். அது பெருமைக்கும் புகழுக்கும் ஒரு அடையாளம். பல நூற்றாண்டுகள் சென்றாலும் அது நிலைத்து நிற்கும். முழு உலகத்திற்கும் ஸ்டாலின் கிராட்டைத் தெரியும்".

## 2002ம் ஆண்டில் ஐரோப்பாவில் வங்குரோத்தாகிப் போன முதலாளித்துவ நிறுவனங்கள்

| | |
|---|---|
| ஜேர்மனி | 82. 400 |
| பிரிட்டன் | 50. 988 |
| பிரான்ஸ் | 38. 688 |
| இத்தாலி | 15, 600 |
| ஆஸ்திரியா | 9, 023 |
| சுவிற்சலாந்து | 8, 802 |
| சுவீடன் | 8, 387 |
| பெல்ஜியம் | 7, 121 |
| நெதர்லாந்து | 6, 358 |
| நோர்வே | 4, 276 |
| பின்லாந்து | 2. 904 |
| டென்மார்க் | 2, 472 |
| போர்த்துக்கல் | 1, 924 |
| லக்சம் பேர்க் | 695 |
| ஸ்பெயன் | 448 |
| கிரேக்கம் | 512 |
| அயர்லாந்து | 379 |
| | 240.977 |

(ஏ.எப்.பி. செய்தி)

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாத முதலாளித்துவ உலகம் யுத்தத்தை தீர்வாக நினைத்து செயற்படுகின்றது. இரண்டு உலக யுத்தங்களும் அவ்வாறே நிகழ்ந்தன.

அமெரிக்கா இன்று யுத்தத்திற்கு கங்கணம் கட்டி நிற்பது உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியே காரணமென்பதை மேற்கூறிய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

~ மனோ ~

# தேவையற்ற அந்நிய உற்பத்திகளைப் பகிஷ்கரியுங்கள்!





பணத்தைப் பறிக்கும் பழக்கத்தில் அடிமையாக்கும், உடலுக்கு கேடு விளைவிக்கும் கொக்கா கோலாவை, பெப்சியை நிராகரியுங்கள்.

~ மக்கள் நலன் விரும்பிகள். ~

படிப்பகம்

www.padippakam.com



# சமூக அதிர்வை உருவாக்கிய கலைவடிவம் கந்தன் கருணை




வடபுலத்து சாதிய தீண்டாமை வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய போராட்ட காலகட்டம் 1966-71 ஆகும். அவ்வெகுஜனப் போராட்டச் சுழலில் என்.கே. ரகுநாதனினால் எழுதப்பட்ட நாடகம் கந்தன் கருணை. 1969ல் எழுதப்பட்டு 1970ல் நெல்லியடி அம்பலத்தடிகளினால் காத்தான் கூத்து மெட்டில் இசை நாடகமாக வார்க்கப்பட்டது. இளைய பத்மநாதனின் வழி காட்டலில் ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் அரங்கேறியது. அதுவே பின் நூல் உருவமும் பெற்றது.

கொழும்பில் இந்நாடகம் நடிகர் ஒன்றியத்தினால் அ. தாஸீசியஸ் நெறியாள்கையில் ஆட்டக் கூத்தாக நடிக்கப் பெற்றது. இம் மூன்று பிரதிகளையும் ஒரே நூலாக்கி தேசிய கலை இலக்கியப் பேரவை தனது 100வது நூலாக வெளியிட்டுள்ளது. சாதிய தீண்டாமைக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்கள் இடம் பெற்ற முப்பத்தேழு வருடங்களுக்குப் பின் அதன் பிரதிபலிப்பாக கந்தன் கருணை நாடக நூல் ஒரு வரலாற்று ஆவணமாக வெளிவந்துள்ளது என்று துணிந்து கூறலாம்.

# உணர்வும் உந்துதலும் தரும் கவிதை நூல்




மறப்பதற்கு அழைப்பு கவிதை நூல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 101வது வெளியீடாக வெளிவந்துள்ளது. பேராசிரியர் சி. சிவசேகரத்தின் மொழி மாற்றக் கவிதைகள் இந்நூலிலே தொகுக்கப்பட்டுள்ளது. அவரே ஆங்கிலத்தி லிருந்து தமிழுக்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் ஆண் கவிஞர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை இத்தொகுப்பில் தந்துள்ளார். சமூக ஏற்றத் தாழ்வு ஒடுக்குமுறை. சமூக நீதி மறுப்பு இன்னும் பிற அநீதிகளை எல்லாம் இக் கவிதைகள் அம்பலப்படுத்தியும் எதிர்த்தும் போர்க்குரல் எழுப்பி நிக்கின்றன. உணர்வும் உந்துதலும் தரும் இக் கவிதைகள் ஈழத்து கவிதைப் பரப்பிற்கு பயன்தரும் செழுமைமிக்க மொழிமாற்ற கவிதை நூலாகும்.

வியட்னாம் யுத்தத்தின் போது அமெரிக்க ஆக்கிரமிப்புப் படை வீசிய நேபாம் எரிகுண்டு வீச்சுக்கு உள்ளாகி தனது எரியும் உடைகளைக் களைத்தெறிந்து விட்டு தெருவழியே ஓடும் வியட்நாம் சிறுமியையும் அழுத வண்ணம் ஓடும் சிறுவனையும் இந்நூலுக்கான அட்டைப்படமாக்கி உள்ளமை நூலின் உள்ளடக்க கனதியை வெளிக்காட்டுகின்றது.

# இந்துத்துவ ஃபாஸிச முழக்கம்

இந்திய நாட்டை இந்து தேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டும். பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோவில் கட்டவேண்டும். இதனை நடைமுறைக்கு கொண்டுவர ஒரு கோடி பேரைப் பலிகோடுக்கத் தாங்கள் தயாராக இருப்பதாக இந்தியாவின் ஃபாஸிச அமைப்பான விஷ்வ ஹிந்து பரிசத் அறிவித்துள்ளது. இதனால் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி பெரும் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டுள்ளது. இந்துத்துவ வெறியைக் கிளப்பியே பாரதிய ஜனதா கட்சி பதவிக்கு வந்து கொண்டது. பாபர் மசூதி இடிப்பு இடம் பெற்ற சூழலிலேயே அத்வானியின் மதிநுட்பமான மத அரசியலும். வாஜ்பாய்யின் ஜனநாயக முகமூடிச் செயற்பாடும் இணைந்தே பாரதிய ஜனதாவை கூட்டணி மூலம் ஆட்சிபீடத்தில் அமர்த்தியது. ஆனால் இன்று ஆட்சியினரிடம் இந்துத்துவக் கடும் போக்கு காணப்படவில்லை என்று கூறி விஷ்வ ஹிந்து பரிசத். சிவசேனை போன்ற சங்கப் பரிவார அமைப்புகள் போர்க்கொடி தூக்கி நிற்கின்றன.

இந்த இந்துத்துவ ஃபாஸிச சக்திகள் குஜராத் மாநிலத்தில் நடாத்திய முஸ்லீம் விரோத வெறியாட்டத்தாலும் அதன்பின் அங்கு இடம்பெற்ற தேர்தல் வெற்றியாலும் உற்சாகமடைந்து நிற்கின்றன. எங்கும் எதிலும் இந்துத்துவ அடையாளத்தைப் பொறிக்கவும் அதனைத் தமது மேன்மையாக உயர்த்திக் கொள்ளவுமே முயன்று வருகின்றன. ஏற்கனவே கல்வியைக் காவி மயமாக்கும் கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள். அவற்றை நடைமுறைப்படுத்த ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதா ஆட்சி முயன்று பார்த்து வருகின்றது.

இந்திய உயர் மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்தாலும் பணத்தாலும் சொத்துடமைகளாலும் சுகம் பெற்றவர்களாக இருந்து ஆட்சி பீடத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்துத்துவ ஃபாஸிச நிலைப்பாடு ஆவசியமாகின்றது. எனவேதான் இந்து தேசம். பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோவில் போன்ற விடயங்கள் முழக்கங்களாகிக் கொண்டு நிற்கின்றன.

நூறு கோடிக்கு மேற்பட்ட இந்தியாவின் மக்கள் பல்லின பலமதங்களையும் பின்பற்றும் மக்களாக இருக்கும் அதேவேளை சனத்தொகையில் அரைப்பங்கினர் வரை வறுமையால் மீளமுடியாது இருந்து வருகின்றனர். இந்திய மக்கள் குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு இந்த இந்துத்துவ வாதிகள் மதவெறி முழக்கங்களைத் தவிர வேறு எதனையும் கொடுக்கத் தயாராக இல்லை. இந்தியாவின் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு இந்துத்துவம் கைகொடுத்து வருகின்றது. அவ்வாறே பாராளுமன்ற ஜனநாயகம் இந்துத்துவ ஃபாஸிச வெறியர்களைப் பாதுகாத்தும் வருகின்றது. ஆனால் இந்திய நாடும் மக்களும் பொருளாதாரச் சுரண்டலாலும் அரசியல் அடக்கு முறைகளாலும் நசுக்கப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர். இதற்கெதிரான போராட்டங்கள் அங்கு வெடித்தெழுவதை எந்த இந்துத்துவ வாதிகளாலும் எதிர்காலத்தில் தடுக்க முடியாது.

## இந்திய

8ம் பக்க தொடர்ச்சி..

இவை இவ்வாறிருந்த போதும் இலங்கையின் ஊடகங்களை அச்சுறுத்தும் உங்களின் பேச்சு மிகவும் மோசமானதாகும். இலங்கை மக்கள் மீதும் நாட்டின் மீதும் மேலாண்மை செலுத்தும் உங்களின் அந்த பேச்சை எந்தவொரு சுயமரியாதையுடைய இலங்கையனும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இலங்கையின் சகல மக்களுடன் இங்கு முற்போக்கு. ஜனநாயக. தேசபக்த. மாக்சிச-லெனினிச சக்திகள் இந்திய நாட்டினதும் மக்களினதும் இறைமை. சுதந்திரம். சுயாதிபத்தியம் என்பவற்றை மதித்து போற்றுகின்றன. அதேபோன்று இலங்கை நாட்டினதும் மக்களினதும் இறைமை. சுதந்திரம். சுயாதிபத்தியம் என்பவற்றை இந்திய மக்களுடன் இந்திய முற்போக்கு. ஜனநாயக. தேசபக்த. மாக்சிச-லெனினிச சக்திகளும் மதித்து போற்றும் என்பது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும். இந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் சிதைக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தினரின் நடவடிக்கைகளை இலங்கை மக்கள் எதிர்ப்பது போன்று இந்திய மக்களும் நிச்சயம் எதிர்ப்பார்கள்.

எனவே இவ்வாறான மிரட்டல்களையும் நடவடிக்கைகளையும் நீங்கள் கைவிடுவீர்கள் என்பதும் நமது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

நன்றி.

இவ்வண்ணம்.
எஸ்.விதானகே.
கொழும்பு

## யாழ் - பொது

6ம் பக்க தொடர்ச்சி..

பொது நூலகம் புனரமைக்கப்பட்டு பெரும்பகுதி வேலைகள் முடிவடைந்த நிலையில் யார் திறப்பு விழாவைத் தீர்மானிப்பது? யார் திறந்து வைப்பது? யாருடைய பெயர் பொறிக்கப்படப் போகின்றது? போன்ற விடயங்களில் மேற்கூறிய ஆதிக்கம். அரசியல். சாதியம் என்பன முக்கிய கவனத்தைப் பெற்றுக் கொண்டன. இந்தப் பெரும் சர்ச்சையில் புலிகள் இயக்கம் முதல் தமிழர் கூட்டணி மற்றும் தமிழ் இயக்கங்கள் வரை ஈடுபட்டு வந்தன. திரைமறைவில் பலத்த இழுபறிகள். ஒருவரை ஒருவர் நிராகரித்தமை. மிரட்டல்கள். எச்சரிக்கைகள் தாராளமாக இடம்பெற்றுள்ளன. ஆனால் வெளியே 'கட்டிட வேலைகள் முடியவில்லை'. 'மக்கள் விரும்பவில்லை' என்ற பொது வாசகம் காட்டப்பட்டது. இது இன்றைய நூலகத் திறப்பு விழா விடயத்தில் மட்டும் இடம்பெற்று விடவில்லை. ஏற்கனவே தமிழர் தலைமைகள் காலத்திற்குக் காலம் பின்பற்றி வந்த ஆதிக்க அரசியல் செயற்பாட்டின் தொடர்ச்சிதான். இதிலுள்ள மற்றொரு விடயம் யாழ்ப்பாணத்து மேட்டுக் குடியினரின் உள்ளார்ந்த விருப்பமும் நிறைவேற்றப்பட்டுள்ளமையாகும். அதனை 16.02.2003 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினக்குரல் பத்திரிகையின் முன் பக்க வர்ணக் கேலிச் சித்திரக் கருத்துப் படம் நன்றாகக் காட்டியது. யாழ்ப்பாண சாதிமான்கள் திருப்தியடைந்து கொண்டனர். மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் தமிழர் கூட்டணியைச் சேர்ந்தவராகிலும் அவர் ஒரு தாழ்த்தப்பட்டவர் என்பதே பலருக்கு ஒரு வருடமாக இருந்து வந்த பெரும் உறுத்தலும் மன உளைச்சலுமாகும். சாதியம் உக்கி உழுத்து மறைந்துவிட்டது என்பது வெறும் ஏமாற்றுத்தனமான கூற்றேயாகும்.

சகலரும் கலந்து பேசி யாழ். பொது நூலகத்தை திறந்து மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படத்தக்கதாகச் செய்திருக்கலாம். அதனையே பெரும்பாலான மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அதற்குப் பதிலாக ஒரு ஜனநாயக மறுப்பாகவே அமைந்து விட்டமை கவலைக்கும் விசனத்திற்கும் உரிய ஒன்றாகவே காண முடிந்தது. இனி எப்போது யாரால் யாழ். பொது நூலகம் திறந்து வைக்கப்படும்? யார் யாருடைய பெயர்களும் பதவிகளும் பெயர் பலகைகளில் பொறிக்கப்படும். வெளிப்படையாகப் பேச முடியாத மக்கள் மிக உன்னிப்பாக இதனை அவதானித்து வருகின்றனர்.

## மாக்ஸியத்தின்.....

9ம் பக்க தொடர்ச்சி.

சொற்றொடரில் இருந்த நிரந்தரம் என்ற சொல்லைக் கூடத் திரித்துப் பயன்படுத்தியவர்கள் இந்தத் த்ரொஸ்கியவாதிகள். சீனாவின் பண்பாட்டுப் புரட்சி வெற்றிகரமாக முன்னேறிய போது மாஓ பயன்படுத்திய 'இடையறாத புரட்சி' என்ற பதத்துக்கும் த்ரொஸ்கியின் தவறான சொற் பிரயோகமான 'நிரந்தரத்துக்கும்' வலிந்து உறவு தேடிய இவர்கள், பின்னர் மாஓவையும் ஸ்தாலினியவாதி என்று ஏசினர்.

ஸ்தாலின் பற்றி மாக்ஸிய-லெனினியவாதிகள் என்றுமே தெளிவான கண்ணோட்டத்துடனேயே உள்ளனர். எல்லாத் தகவல்களையும் அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியில் வைத்து அவர்கள் நோக்குவதால். ஸ்தாலின் பற்றிய குருட்டுத்தனமான பகையோ அல்லது பக்தியோ அவர்கட்கு இல்லை. சோவியத் யூனியனில் லெனினின் மறைவுக்குப் பின்னர், புரட்சிகர அரசையும் சோஷலிஸ நிர்மாணத்தையும் முன்னெடுத்துச் சென்றதிலும் ஃபாஸிஸ உலக மேலாதிக்கத்தை முறியடிப்பதிலும் ஸ்தாலினின் தலைமையின் பெரும் பங்கை மனதிற் கொண்டே அவர்கள் ஸ்தாலினின் தவறுகளை மதிப்பிடுகின்றனர். ஸ்தாலின் தொடர்பாக அன்று சீன. வியற்நாமிய, கொரிய. இன்னும் பிற மாக்ஸிய-லெனினியக் கட்சிகள் எடுத்த நிலைப்பாடு இன்னமும் வரலாற்றில் செல்லுபடியாவதுதான்.

ஸ்தாலினின் தவறுகளைப் பொதுமைப்படுத்தி, ஸ்தாலினை ஒரு எதேச்சாதிகார மனிதராகக் காட்டுகிறவர்கள் அவரது தனிப்பட்ட சீரிய பண்புகளை வேண்டுமென்றே புறக்கணிப்பது அறியாமையாலல்ல.

ஸ்தாலினியம் என்று முத்திரை குத்தப்படுவது வக்கிரமாகச் சிலர் அடையாளப்படுத்தி நிராகரிக்க முயல்கின்ற மாக்ஸிய-லெனினியமே. ஸ்தாலினின் குறிப்பான தவறுகளையும் ஸ்தாலியத்தின் கொள்கையாகவும் மாக்ஸிய-லெனினியத்தின் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகவும் கற்பிப்பது எவரது அறியாமையுமல்ல. எதைச் செய்கிறோம் என்ற திட்டவட்டமான பார்வையோடே அவர்கள் செய்யப்படுகின்றனர்.

மாறாக. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சூழ்நிலைகளைச் சரிவர மதிப்பிட்டு, இறுதி இலக்குப் பற்றிய தெளிவு குறையாது, உடனடியான தேவை என்ன அதை நிறைவு செய்யக்கூடிய புரட்சி எது என்று அடையாளங் கண்டு, விடுதலைப் போராட்டங்களையும் அவற்றின் மூலம் சோஷலிஸத்தையும் முடிவில் கம்யூனிஸத்தையும் நோக்கி முன்னேறுவது ஸ்தாலினியம் என்றால் ஒவ்வொரு மாக்ஸிய-லெனினிய வாதியும் ஸ்தாலினியவாதிதான்.

முதலாளிம் உள்ளளவும் சோஷலிஸ நிர்மாணத்தை நடைமுறைப்படுத்த மட்டுமல்லாமல் முதலாளியச் சிந்தனை முற்றாகத் துடைத்தழிக்கப்படும் வரை பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் தேவை என்பது ஸ்தாலினியம் என்றால், ஒவ்வொரு மாக்ஸிய-லெனினிய வாதியும் ஸ்தாலினியவாதிதான்.

முதலாளியத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் வர்க்க சமரசமில்லாது முதலாளிய பாராளுமன்றப் பாதையை நிராகரித்துப் புரட்சிகரப் பாதையில் போவது ஸ்தாலினியம் என்றால் ஒவ்வொரு மாக்ஸியவாதியும் ஸ்தாலினியவாதிதான்.

ஸ்தாலினியம் என்பது ஒரு நிந்தனைச் சொல்லாக எதிரிகளால் பாவிக்கப்படும் போது அதையிட்டு அஞ்சுவதும் தம்மீது அப் பேர் சுமத்தப்படக்கூடாது என்பதற்காகச் சமரசங்கள் செய்வதும் மாக்ஸிய-லெனினிய வாதிகட்குத் தேவையற்றது.

ஸ்தாலின். உலக சோஷலிஸ வரலாற்றில் ஒரு கால் நூற்றாண்டுக்கும் மேலாகப் பதித்த தடத்தை அப்படியே நிராகரிப்பது சோஷலிஸப் புரட்சியையே நிராகரிப்பதுதான். ஸ்தாலினின் பங்களிப்புகளை மட்டுமன்றிப் பிழைகளையும் சரிவர மதிப்பிடுவதன் மூலமே சோஷலிஸப் புரட்சியால் முன்னோக்கி நடைபோட முடியும். இதில் மாக்ஸிய-லெனினிய வாதிகளது பார்வை திரிபுவாதிகளாலும். த்ரொஸ்கியவாதிகளதும் பிற வர்க்க சமரச வாதிகளதும் நிலைப்பாட்டினின்று வேறுபட முடியாது.

- இமயவரம்பன் -

## எல்லாம் உலக மயம்..

8ம் பக்க தொடர்ச்சி.....

பிரத்தியட்சப் பிரமாணம் என்றும் சுட்டினார்கள். அனுபவப் பிரமாணத்தைத் தமிழ் நூலார் "காண்டல்" என்று குறித்தனர். காண்டல். அவதானிப்பு. "ஒப்சவேஷன்" என்பன ஒரே கருத்தினை உடைய சொற்கள். நவீன விஞ்ஞானமும் "அவதானிப்பு" ஆகிய காண்டலைத்தான் முதன்மை வாய்ந்த அடிப்படையாக ஏற்றுக் கொள்கிறது.

அறிவியல் நெறியில். ஐம்புலக்காட்சி ஆகிய காண்டலுக்குத்தான் தலைமைப் பதவி தரப்பட்டுள்ளது.

(இங்கு. மற்றுமோர் உண்மை கவனிக்கத்தக்கது-பிரமாணங்களை வரிசைப்படுத்தும்போது. வடமொழியாளர் சுருதி-யுக்தி-அனுபவம் என்னும் ஒழுங்கை கைக்கொள்ள. தமிழ்மொழியாளர் காண்டல்-கருதல்-உரை என்று அந்தப் பிரணமாங்களை (அதாவது அளவைகளை) வரிசைப்படுத்திக் கொண்டனர். இந்தத் தமிழ் நூல் வழக்கு. அறிவியல் நோக்குடன் பெரிதும் ஒத்துப்போகும் ஒன்றாய் உள்ளது.)

நவீன அரசியல் எழுச்சியுடன் இசைந்து செல்லும் மற்றுமோர் ஆய்வுமுறை "டயலெக்றிக்கல் ஐப்றோச்" எனப்படும் இயங்கியல் நெறி ஆகும். பயனுள்ள முடிபுகள் பலவற்றை இந்த அணுகுமுறை நமக்கு வழங்கியுள்ளது. அரசு. சமூகம். மெய்யியல் முதலான துறைகளில் இயங்கியல் நெறி பயனுறுதி வாய்ந்ததொரு கருவியாக விளங்குகிறது.

இந்தப் பின்னணியில். மதங்கள் பற்றிய பார்வையும் விளக்கமும் மேன்மேலும் விரிவடைந்து செய்வது கண்கூடு.

அதேவேளை மதங்கள் தொடர்பான "பிடிவாதியம்" முன் எப்போதும் இல்லாத அளவு தீவிரம் அடைந்துள்ளது. இன்றைய உலகில். மதச்சார்பான கடும் போக்குகளும் பகைமைகளும் வன்மங்களும் பல்கிப் பெருகியுள்ளன. மத்திய காலத்து ஐரோப்பிய வரலாற்றிலே சிலுவைப் போர்களும் மதத்தின் பேரால் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களும் முனைப்புப் பெற்றிருந்தன என்று சரித்திரப் புத்தகங்கிலே நாம் படித்துள்ளோம். அவற்றின் கடுமையையும் நாசகாரப் போக்கையும் வென்றுவிடக் கூடியனவாக. "உலகமயச் சூழல்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ள படுகேவலமான அச்சுறுத்தலும் நெருக்கடிகளும் இன்று உருவாக்கம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைய காலகட்டத்து உலகமயவாக்கத்தால் எழும் பிரச்சினைகளை. இந்த மதஞ்சார்ந்த "பிடிவாதியம்" மிகவும் ஆபத்தான கட்டங்கள் வரை இழுத்துச் சென்றுள்ளது. ஒரு புறத்திலே செல்வச் செருக்கும் திமிரும் ஆணவ வெறியும் கொண்ட வல்லரசுகள் ஒன்றையொன்று விழுங்கி ஏப்பமிடுவதற்குக் கச்சை கட்டிக்கொண்டு கிளம்பியுள்ளன. மறுபுறத்தில். தகவல் தொழில்நுட்பத்தினாலும் விளம்பரப் பிரசாரப் பசப்புரைகளின் வலிமையில் அதீத நம்பிக்கை வைத்தும். கண்மூடித்தனமான. மோட்டுத்தனமான நிலைப்பாடுகளை மேற்கொண்டும் வல்லாதிக்கச் சண்டப்பிரசண்டர்கள் போர்க்கோலம் பூண்டு நிற்கின்றனர்.

இவற்றினிடையே போட்டி பொறாமைகளும் பெருகி வருகின்றன. உலக அளவிலே தோற்றுவிக்கப்பட்ட ஐ.நா. போன்ற நிறுவனங்களும் ஆற்றலிழந்து பயன் குன்றித் தேய்ந்து கொண்டிருக்கின்றன.

வர்க்க அடிப்படையிலான விழிப்புணர்வும் எழுச்சிகளும் மங்கிக் கொண்டு போகின்றன. அவற்றுக்குப் பதிலாக, இந்துத்துவம் போன்ற வெறித்தனங்களும் தலைவிரித்தாடத் தொடங்கி மோசமான நிலைமைகளுக்கு நம்மை இட்டுச் செல்லத் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

உலகமயவாக்கம் நம்மை எங்கே தள்ளிக் கொண்டு போகிறது? என்று தணியும் இந்தச் சிக்கல்களும் சின்னத்தனங்களும். என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய் ஆகும்?

நம்முன் இன்று எழுந்து நிற்கும் கேள்விகள் இவை.7

படிப்பகம்

புதிய பூமி
පුදිය පුමි
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 மார்ச் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 98

## கூட்டு நல்ல கூட்டு

அனுரா பண்டாரநாயக்கா பரம்பரை புகழ்பேசும் ஒரு வலதுசாரி. அமெரிக்க விசுவாசி. அடுத்த ஜனாதிபதியாகும் கனவுடன் இருந்து வருபவர். இடதுசாரிகளை வேப்பங்காயாக வெறுப்பவர். அப்படியானவரும் தங்களை இடதுசாரிகள் எனக் கூறிவரும் ஜே.வி.பியும் விமல் வீரவன்சாவும் மிக நெருக்கமாக இணைந்து நின்று அரசியல் பேசிவருகிறார்கள். இவர்களுக்கு உள்ள ஒற்றுமை அதிகாரப்பசியும் பேரினவாத வெறியும் என்பதாகவே உள்ளது. அதிகார மோகமும் பதவிச் சுகங்களும் பாராளுமன்ற வாதிகளை சும்மா இருக்க விடாதல்லவா?




# வடக்கு கிழக்கில் உலகவங்கி கால்பதிக்கிறது

# எதிர்காலம் கேள்விக்குறியாகிறது

தமிழர்களின் முஸ்லீம்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு குண்டுகள் ஷெல்களால் சிதறிப்போய்க் கிடக்கின்றது. துப்பாக்கிச் சன்னங்கள் துளைக்காத இடங்களே இல்லை. நிலமும் நீரும் இரத்தத்தால் நனைந்து காய்ந்துபோய் உள்ளது. வானமும் காற்றும் வெடிமருந்துப் புகையால் நஞ்சாகி சூழல மாசடைந்து காணப்படுகின்றது. விவசாயம் மீன்பிடி பெரிய சிறிய கைத்தொழில்கள் யாவும் பாழடைந்த நிலையில் இருந்து வருகிறது. கல்வி சுகாதாரம் மற்றும் சமூக நலன்கள் அனைத்தும் சீர்குலைந்தும் சீரழிந்தும் காணப்படுகின்றது.

இந்நிலையில்தான் தற்போதைய சமாதான சூழலில் புனரமைப்பு புனர்வாழ்வு மறுசீரமைப்பு என்பன வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படுவதற்கு பாரிய நிதி ஒதுக்கீடு சர்வதேச சமூகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்த உலக வங்கியின் தலைமையில் "வடக்கு கிழக்கு புனர் நிர்மாண நிதியம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை மேற்பார்வை செய்யவும் ஆலோசனை வழங்கவும் உலக வங்கியே பொறுப் பேற்றுள்ளது. அடையாளம் காணப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்புகள் இடம்பெற உள்ளன.

இதன் அடுத்த கட்டமாக பாரிய அளவிலான புனரமைப்புகள் பொருளாதார கல்வி சமுகத்தளங்களில் முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இங்கேதான் உலகவங்கியின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற பாரிய கேள்வி எழவே செய்யும். நிச்சயம் உலக வங்கியானது ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு சாதகமான ஒரு பொருளாதாரக் கொள்கையைத்தான் முன்மொழியுமே தவிர அதற்கு அப்பால் எதையும் செய்யாது. இதுவரை கால்பதிக்காத பல்தேசியக் கம்பனிகள் வடக்கு கிழக்கில் உட்புகுந்து கொள்ளும். அக்கம்பனிகள் வடக்கின் வளங்களை கொள்ளையிடவே செய்யும். அத்துடன் மனித உழைப்பையும் சுரண்டிச் செல்லும். மேலும் தாராள பொருளாதாரக் கொள்கை என்பதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகள் படிப்படியாக அழிந்து போகும். உப உணவு உற்பத்தியும் மீன் வளத்தின் அறுவடையும் பலத்த சவால்களை எதிர்நோக்கி இறுதியில் கைவிடும் நிலையை அடைந்து கொள்ளவே செய்யும்.

ஏற்கனவே இலங்கையின் பொருளாதாரத்தில் உலக வங்கி வழங்கிய ஆலோசனையும் வழிகாட்டலும் பாரிய எதிர் விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. கல்வியும் சுகாதாரமும் ஏனைய சமூக நலன்களும் சீரழிவுகளுக்கு உள்ளாகியுள்ளன. இப்போது வடக்கு கிழக்கும் இத்தகைய போக்கோடு இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன.

இதுவரை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்கும் மக்களும் இனிமேல் உலக வங்கியால் வழிகாட்டப்படும் பொருளாதார அழுக்கத்தால் பாதிக்கப்படப் போகிறார்கள். இது உடனடியாக வெளிப்படாது போகலாம். ஏதோ அழிவுற்ற பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் மறுவாழ்வு தருவது போன்றே காட்சியளிக்கும். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் அமெரிக்க- மேற்குலக- யப்பான்- இந்திய சக்திகளின் உள்நோக்கங்களும் உண்மை சுயரூபங்களும் வெளிப்படவே செய்யும். இதுவரை இச் சக்திகள் யுத்தத்தின் மூலம் பெற்று வந்த நன்மைகளை இனிமேல் சமாதானத்தின் ஊடாகப் பெற்று அனுபவிக்கப் போகிறார்கள். தூரநோக்கிலும் உள்ளார்ந்த நிலையிலும் இவற்றின் பாதக விளைவுகளை நமது அரசியல் தலைமைகள் காண மறுத்து நின்றாலும் வடக்கு கிழக்கு மக்கள் நடைமுறையில் உணரவே செய்வார்கள். அதற்கு சிறிது காலமெடுத்தாலும் உண்மைகளை எத்தகைய திரைகளை இட்டும் மறைக்க முடியாது.

## மாடுகளும் மனிதர்களும்

ஐரோப்பிய ஒன்றியத்தில் பசுக்களை வளர்ப்பவர்களுக்கு பசு ஒன்றிற்கு 2.2 டொலர் நாளொன்றிற்கு மானியமாக வழங்கப்படுகின்றது. ஆனால் உலக மக்கள் சனத்தொகையில் அரைப் பங்கிற்கு மேற்பட்டோர் தினம் ஒன்றிற்கு இரண்டு டொலரை அல்லது அதற்கும் கீழே தான் வருமானமாகப் பெறுகின்றனர். உலக வறுமைக் கோடு வரையப் படுவதற்கு இந்த இரண்டு டொலரே அளவீடாகக் கொள்ளப்படுகின்றது. முதலாளித்துவத்தின் கீழ் மாடுகளுக்கு உள்ள மதிப்பு மூன்றாம் உலகில் மனிதர்களுக்கு இல்லை. இதனால் முதலாளித்துவம் மேன்மையானது என்று பொருள் அல்ல. முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் வளங்களையும் மக்களையும் சுரண்டிச் சூறையாடிச் சென்றே தமது வளர்ப்பு மிருகங்களுக்கும் செல்லப் பிராணிகளுக்கும் உயர்தர உணவும் உல்லாசமும் அதற்கான மானியங்களும் வழங்குகிறார்கள் என்பதே உண்மையாகும்.

## பிரதமரின் கேள்வி

1ம் பக்க தொடர்ச்சி..

ஜனாதிபதியின் பரந்த மனப்பான்மையை மெச்சியே இருந்திருப்பர். ஆனால் இங்கே அதே ஜனாதிபதி வேறு விதமாகப் பேசியும் எச்சரிக்கை விட்டும் வருவதை ஒரு சிலராவது அவதானிக்கத் தவறியிருக்க மாட்டார்கள். ஜனாதிபதி அங்கு ஒன்றும் இங்கு வேறொன்றும் பேசிக்கொள்ளாது மலேசிய உரையில் குறிப்பிட்டபடி இங்கு நடந்து கொண்டால் பேச்சு வார்த்தை பயனுள்ள பாதையில் பயணிக்க முடியும். ஆனால் உலகத் தலைவர்கள் மத்தியில் நல்லபிள்ளையாகவும் இங்கே அதிகாரத்திற்கு பாராளுமன்றத்தில் வந்துகொள்ளவும் ஜனாதிபதி பேசிக்கொள்வதுதான் இரட்டைத்தன நிலைப்பாடாகும். இதனை விடுத்து நேர்மையாக அங்கு பேசியது போன்று ஜனாதிபதி இங்கும் நடந்து கொள்ள முற்படுவாரா என்பதே கேள்வியாகும். அதேபோன்று கேள்விகளுக்கு பதிலளித்தது போன்று பிரதமர் செயல்படுவாரா? இருவரும் பேசியவை போன்று நடந்தால் அரைவாசிப் பிரச்சினையைத் தாண்டமுடியும். பேரினவாத ஆளும் உயர்வர்க்க நலன் காக்கும் தலைவர்களான இவர்கள் எவ்வளவு தூரம் செய்வார்கள் என்பதை சிறிது பொறுத்திருந்து காண்போம்.

## புரிந்துணர்வு ஒப்பந்த...

1ம் பக்க தொடர்ச்சி..

இந்தியாவையும் பற்றிக் கொண்டு அவர்களின் மூலதன முதலீடுகளுக்கும் தலையீடுகளுக்கும் ஆமாம் போட்டு வருகின்றது. வாஷிங்டனுக்கு மிக நெருக்கமான ரணில்-மிலிந்த மொறகொட -ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் டில்லியைப் பகைத்துக் கொள்ளாத வாறும் ஒரு வகைத் தந்திரத்துடன் ஒரு வருடமாக நடந்து வந்துள்ளனர்.

இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஆளும் அரசாங்கம் தனக்குரிய பல சாதக அம்சங்களைப் பெற்றுள்ளது என்பது உண்மை. அதேவேளை தனது உள்ளார்ந்த பேரினவாத நிலைப்பாட்டையோ அன்றி மக்கள் விரோத உயர் வர்க்க அணுகுமுறைகளையோ கைவிட்டு விட்டதாகக் காண முடியாது.

கடந்த ஒரு வருடத்தில் இவ் ஒப்பந்தத்தின் மூலம் புலிகள் இயக்கம் தனக்குரிய சாதக அம்சங்களைப் பெற்றுள்ளது. தனது உறுப்பினர்களின் இழப்பை இல்லாமல் செய்துள்ளது. என்றுமே புலிகள் யுத்தம் செய்பவர்களே அன்றி சமாதானத்திற்கு வரமாட்டார்கள் என்ற எண்ணத்தை இவ் ஒப்பந்தம் மூலம் புலிகள் மாற்றியமைத்துள்ளனர். அதே வேளை தமது ராணுவக் கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் நிதி. நீதி. நிர்வாக அமைப்புகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் குறிப்பாக நிதி ஆதாரத்தைப் பெருக்கவும் இவ் ஒரு வருட காலத்தைப் புலிகள் இயக்கம் பயன்படுத்தியுள்ளமையைக் காண முடிகின்றது.

இவற்றுக்கும் அப்பால் தாங்கள் ஒரு பயங்கரவாத இயக்கம் அல்ல என்றும் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்ட இயக்கமே என்பதையும் சர்வதேச சமூகத்தின் முன் நிலை நிறுத்திக் காட்ட இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் புலிகள் முன் நின்று வந்துள்ளனர். இதற்கூடாக இலங்கைத் தமிழர்கள் சார்பாகத் தனி ஒரு அமைப்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தும் நிலையையும் புலிகள் இயக்கம் பெற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் அரசாங்க-ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது அரசியல் நடவடிக்கைகள் எனக் கூறிச் செயல்படும் ஒரு சூழலையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

மேற்கூறிய அம்சங்களில் இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகள் இயக்கத்திற்கு இவ் ஒரு வருட காலத்தில் சாமதகமான அம்சங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளமையை மறுக்க முடியாது.

இந்நிலையில் கடந்த ஒரு வருட காலத்தின் புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறைகளால் மக்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கும் மக்களும் எத்தகைய பலாபலன்களைப் பெற்றார்கள் என்பதே கேட்க வேண்டியவைகளாகும்.

யுத்த நிறுத்தத்தின் மூலம் உயிர், உடமை இழப்புகள், இடம் பெயர்தல் என்பன நிகழாமையும் ராணுவக் கெடுபிடிகள் சோதனை சுற்றி வளைத்தல் இடம் பெறாமையும் ஒரு வகை நிம்மதிப் பெரு மூச்சை வடக்கு-கிழக்கு மக்களும் ஏனைய தமிழ், முஸ்லீம், மலையக மக்களும் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. அதேவேளை ஆங்காங்கே தரை, கடல்களில் இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல்கள் மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருவதையும் காண முடிகின்றது.

ஏ9 பாதை திறக்கப்பட்டமை போக்குவரத்தின் கடுமையையும் உலைச்சலையும் ஓரளவுக்கு குறைத்துள்ளது. இருப்பினும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்றடைய ஒருவர் குறைந்தது ஐந்து இடங்களில் ஏறி இறங்க வேண்டியும் மூன்று இடங்களில் சோதனைக்கு உட்பட வேண்டியும் உள்ள சிரமம் குறையவில்லை. கட்டணத்தில் பஸ் மூலம் செல்வதற்கு முன்நூறு ரூபாவிற்கு மேலும் தனியார் வாகனத்தில் செல்ல ஆயிரம் ரூபாவிற்கு மேலும் செலவிட வேண்டியே உள்ளது. அவற்றுடன் பொருட்களுக்கான வரி என்பதும் மேலதிகச் சுமையாகும்.

இவற்றைவிட யாழ்ப்பாணம் சென்றடையும் பொருட்களுக்கு வழியில் விதிக்கப்படும் வரிகளால் வர்த்தகர்கள் தாம் இறுக்கும் வரிகளை அதிகரித்த விலைகளாக மக்களின் தலைகளிலேயே சுமத்திக் கொள்கின்றனர். வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் நாட்டின் அதிகரித்த வாழ்க்கைச் செலவை இரு மடங்கு அதிகரித்த நிலையில் தாங்கிக் கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளனர்.

அதேவேளை கடந்த ஒரு வருட காலத்தில் வடக்கு கிழக்கில் புனரமைப்பு புனர்வாழ்வு என்பன சிறு அளவும் இடம்பெறவில்லை. மீளக்குடியமர்தலும் முறையாக நடைபெறவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் தமது சொந்த வீடுகள், நிலபுலங்களுக்குச் செல்வது தடுக்கப்பட்டே வருகிறது. இவையாவும் கூட்டங்கள் கூடுவதிலும், திட்டங்கள் பற்றிப் பேசுவதிலும், அடுத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்ற அளவிலுமே ஒரு வருடம் கழிந்து கொண்டது.

ஒரு வருடத்தில் பேச்சுவார்த்தை ஐந்து தடவைகள் இடம்பெற்றன. அதன் பலாபலன் எதுவும் மக்களையோ யுத்தத்தால் அழிவுற்ற வடக்கு கிழக்கையோ சென்றடையவில்லை என்பதே உண்மை. அரசாங்கம் சமாதான சூழலை உருவாக்கி அதன் மூலம் ஆட்சிக் காலத்தைக் கடத்திச் செல்வதற்கு இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழி வகுத்துள்ளது என்பது உண்மை. ஆனால் மக்களுடைய எதிர்பார்ப்புகள் எதுவுமே ஈடேற்றப்படவோ அதற்கான நடைமுறை ரீதியான ஆக்கபூர்வ செயற்பாடுகளோ இடம்பெறவில்லை என்பதே கடந்த ஒரு வருட கால அனுபவமாகும்.

## பிரஜாவுரிமைப் பிரச்சினை

1ம் பக்க தொடர்ச்சி..

இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட இருப்பின் அவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற குறிப்பான விளக்கத்துடனான சட்ட ஏற்பாடு கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை பிரச்சினை அல்லது நாடற்ற நிலைமைக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்ததாக இருக்கும். இவ்வாறான தீர்வு கிடைப்பதன் மூலமே சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய கடவுச்சீட்டு பெற்று இந்தியாவுக்கு செல்லாது, செல்லவிரும்பாதிருப்பவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்குமான சுமார் மூன்றரை லட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கிடைத்ததாகும்.

நீண்டகால போராட்டங்களினாலும் அழுத்தங்களினாலும் கொண்டுவரப்படவுள்ள பிரஜாவுரிமை சட்டத்திருத்த மூலத்தில் சரியான ஏற்பாடுகளை சேர்த்து மேற்படி பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும். வெறும் எழுத்தில் மட்டுமன்றி நடைமுறையிலும் அர்த்தமுள்ளதாக சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

1983ஆம் ஆண்டு யூலை மாத இனவன்முறைகளுக்கு பிறகு ஏற்பட்ட நிலைமையில் இந்தியா. இந்தியக் கடவுச்சீட்டு பெற்றவர்களை ஏற்றுக் கொள்ள மறுத்தது. இந்தியக் கடவுச்சீட்டு பெற்றவர்களும் இந்தியாவுக்கு செல்ல விரும்பவில்லை. இந்நிலையில் அவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். எனவே கொண்டுவர இருப்பதாகக் கூறப்படும் பிரஜாவுரிமைச் சட்டம் இதுவரை இருந்து வரும் பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை முழுமையாக ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதையே நாம் வற்புறுத்துகின்றோம்.

## சுதந்திரம்.... இன்னும் தொலைவில் இல்லை.

பொய்களின் கைபிடித்து
நெடுந்தொலைவு
வந்துவிட்டோம்.

ஒவ்வொரு மைல்கல்லிலும்
சுமைகளென
நம் செல்வங்கள்
அனைத்தையும்
இறக்கி வைத்துவிட்டோம்.

இலவசமாய்க் கிடைத்ததென
பல வண்ணப் பந்தல்களில்
நிறைய மூடநம்பிக்கைகளை வாங்கி
வயிறு முட்டக் குடித்துவிட்டோம்.

பொய்கள்
கொழுத்துப் போய்விட்டன.
நாம் நிறைய
இளைத்துப் போய்விட்டோம்.

பொய்கள் அழைத்துச் செல்வது
மகிழ்ச்சியின் தேசத்திற்கு அல்ல
மரணக் குழிக்குத்தான்
உண்மை எச்சரித்துக் கொண்டே
உடன் வருகிறது.

பொய்கள் இதுவரை
உண்மையின் ஆடைகளை
உடுத்தியிருந்தன.

இப்பொழுது
தன் முகமூடிகள்,
உண்மையின் ஆடைகள்
எல்லாவற்றையும் களைந்தெறிந்து
தன்னை எவர் செயிக்க முடியும் என
கோரப்பற்களைக் காட்டி
எக்காளச் சிரிப்புடன்
உண்மையைப் பார்த்துக்
கேலி செய்கிறது.

சாவின் விளிம்பிற்கு
வந்துவிட்டோம்.
இப்பொழுதாவது
உண்மையின் கைப்பிடிப்போம்.
கரங்களை ஒன்றிணைப்போம்.

உற்றுப் பாருங்கள்
பொய்யின் முகத்தில் சவக்களை.

சுதந்திரம்..... இன்னும்
தொலைவில் இல்லை.

– சாக்ரடீஸ்

நன்றி : புதிய கலாச்சாரம்
பெப் 2003

வெளியிடுபவர்: இ. தம்பையா, இல.47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

www.padippakam.com
படிப்பகம்